மானுடப் பிரவாகம்

மேலாண்மை பொன்னுச்சாமி

கங்கை புத்தக நிலையம்

மானுடப் பிரவாகம்

மேலாண்மை பொன்னுச்சாமி

கங்கை புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு டிசம்பர், 1990

இரண்டாம் பதிப்பு (கங்கை) : டிசம்பர், 2004

விலை : ரூ. 50.00

▸ Title		**Manuda piravagam**
▸ Author		**Melanmai Ponnusamy**
▸ Subject		Short Stories.
▸ Language		Tamil
▸ Edition	:	Second Edition(Gangai), December,2004
▸ Pages		160.
▸ Publication		**GANGAI PUTHAKA NILAYAM,** 23, Deenadayalu Street, Thyagaraya Nagar, Chennai - 600 017.

Price : Rs. 50.00

Typesetting *GoodWill Computers,*
T.Nagar, Chennai -17.

Printed by Malar Printers 044-8224803

சமர்ப்பணம்

விழிப்படையாமல்,

இன்னும் அமைப்பாகச் சங்கமித்துச்

சக்தி பெறாமல்

ஆடிக்காற்றில் சிக்கிய சருகுகளாக

துன்ப சாகரத்தில் புலம்பிக் கொண்டே

வாழ்க்கையில் அலைகிற

என் சக

மானாவாரிச் சம்சாரிகளுக்கு...

மானுடப்
பிரவாகம்

பதிப்புரை

இன்றைய நாள் நாடறிந்த நல்ல தமிழ் எழுத்தாளர் திரு. மேலாண்மை பொன்னுச்சாமி அவர்களின் சிறந்த கதைகள் சிலவற்றை இங்கே நூலாகத் தருவதில் பெருமையடைக்கிறோம்.

மண்ணின் மணம் கமழும் இக்கதைகளில் சமுதாயத்தின் அடிமட்ட மக்களின் அவலங்கள் நம் உள்ளத்தை நெகிழச் செய்யும் வண்ணம் சித்திரிக்கப் பெற்றுள்ளன. கதைகள் இயல்பான வட்டார வழக்கிலேயே அமைந்துள்ளமை யதார்த்தப் படப் பிடிப்பை இலகுவாக்கி யிருக்கின்றது. கதைகளின் கூடுதல் சிறப்பிற்குக் காரணமும் இந்த வழக்குச் சொற்களே.

ஏழை எளிய மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை மையப்படுத்தி எழுதியுள்ள இக்கதைகளை வெளியிட உதவிய ஆசிரியருக்கு வாழ்த்தும் நன்றியும் உரித்தாகுக.

– கங்கை புத்தக நிலையத்தார்

என்னுரை

சமீபகாலமாக தமிழில் படைப்பிலக்கியம் ஓரளவு வீரியம் பெற்றிருக்கிறது. அதிலும் நவீனப் படைப்பிலக்கியம் செழிப்பாகவே வளர்ச்சி பெற்றிருக்கின்றது.

கவிதைத் துறையில் ஒரு தேக்கம் இருந்தாலும், சிறு கதை இலக்கியம் அசுர பலத்துடன் வளர்ந்திருக்கிறது.

மண்ணையும், மனிதனையும் நேசிக்கிற யதார்த்தமான சிறுகதைகள் ஏராளமாய் வருகிற இச்சமயத்தில். திறனாய்வு இலக்கியம் வளர்ச்சியேயடையாமல் க்ஷீணித்து வருகிறது.

மேலை நாட்டில் ஒரு படைப்பிலக்கிய நூல் வெளி வந்த ஆறுமாதத்திற்குள் அந்நூல் பற்றிய நூற்றுக்கணக்கான விமர்சன நூல்கள் வெளிவந்துவிடும் என்கிறார்கள்.

தமிழில் அந்த நிலை தூரத்துக் கனவாகக் கூடத் தெரியவில்லை. பல நூல்கள் பத்திரிகை விமர்சனத்தைக் கூடப் பெற முடியாமல், கிணற்றில் போட்ட கல்லாக அடையாள மற்றுப் போய் விடுகின்றன.

மிக நவீனமான அச்சுயந்திரங்களும் அச்சுமுறைகளும் வந்துவிட்ட இக்காலம், இலக்கியம் என்பதை ராஜசபை எல்லைக்குள் குறுகிப் போகவிடாமல், விரிந்து பரந்த ஜனப் பகுதிகளை நோக்கி ஆயிரமாயிரம் சிறகுகளோடு பறந்து போய்க்கொண்டிருக்கிற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

இலக்கியம் ஜனநாயகப் படுகிற இக்காலத்தில் அதற்கு உதவியாகவும், சாதனமாகவும் இருக்கவேண்டிய திறனாய்வு இலக்கியம் வளராமல் கிடப்பது ஒரு வரலாற்று முரண்.

வார, மாத இதழ்கள் மூலமாகவும், நூல் வடிவிலும் ஆயிரமாயிரம் கால்களோடு மக்களை நோக்கிப் பாய்ந்து வருகிற படைப்பிலக்கியங்களைப் பற்றிய ஓர் ஆரோக்கியமான பார்வையும், உயர்ந்த ரசனையும் உருவாக்க வேண்டிய சமூகக் கடமையைத் தோளில் சுமந்திருக்கிற திறனாய்வு இலக்கியம், பிரக்ஞையற்றுக் குழம்பிக் கிடக்கிறது.

இருக்கிற கொஞ்ச நஞ்சம் திறனாய்வு இலக்கியமும் நோய் பிடித்துக்கிடக்கிறது. ஓரவஞ்சனைகளும், பார பட்சங்களும் முகம் பார்த்து முகாம் பார்த்து அதற்கேற்பத் தீர்ப்புச் சொல்கிற அநீதிகளும் மலிந்து கிடக்கின்றன.

நேர்மை மிகுந்த ஒன்றிரண்டு திறனாய்வாளர்கள் இருப்பது உண்மைதான். ஆனால் பெரும்பாலான திறனாய் வாளர்கள், மக்கள் விரும்பிப் போற்றுகிற முற்போக்குப் படைப்புகளை அகந்தையுடன் 'குப்பை' என்றும், 'வெறும் பிரச்சாரம்' என்றும் அழுக்கான மனக் குரோதங்களுடன் அலட்சியப் படுத்துகின்றனர். விளைவு? நிஜத்துக்கு நெருங்கியே வராத இந்தத் திறனாய்வுகளே அலட்சியப் படுத்தப்படுகின்றன. வலிமையற்ற விரைய எழுத்துகளாகின்றன.

செம்மலர், தாமரை போன்ற இதழ்களில் பல சிறு கதைகள் கௌரவம் மிகுந்த 'இலக்கியச் சிந்தனை' பரிசு பெறுகின்றன. முற்போக்குப் படைப்புகளான 'சங்கம்' 'மானாவாரி மனிதர்கள்' போன்ற நாவல்கள் இலக்கியச் சிந்தனைப் பரிசுகளைப் பெற்றிருக்கின்றன. சங்கம் இரண்டாம் பதிப்புப் பெறுகிறது. இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெயர்க்கப்படுகிறது.

இப்பேற்பட்ட புகழ் மிகுந்த நாவலைக்கூட 'வெறும் பிரச்சாரம்' என்று முகம் சுளித்து அலட்சியம் செய்கிற

இந்தத் திறனாய்வாளர்கள் மோசமான மன நோயாளிகள் என்பதில் சந்தேகமேயில்லை.

இவர்கள்தான், முற்போக்குச் சிறுகதைகள் உள்ளடக்க ஆழத்திலும் உருவச் சிறப்பின் சிகரத்திலும் உன்னதம் பெறுகிற நிகழ் நிஜத்தை மௌனத்தின் மூலமாகவும், அலட்சியம் மூலமாகவும் மறைத்துவிட ஆசைப்படுகிறார்கள்.

நடக்கக் கூடிய ஆசையா? வரலாறு இவர்களுக்கு எதிர்த்திசையிலேயே சுழல்கிறது.

திறனாய்வுச் சிந்தனைகளும், தமிழ்ப் பற்றும், சமுதாய அக்கறையும், மானுட நேயமும் நிறைந்த பேராசிரியர்கள் சமூகப்பணிக்குக் களத்தில் இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேனாவைக் கையிலெடுத்து விட்டால்...

கல்லாய்க் கிடக்கும் திறனாய்வு இலக்கியம், அகலிகையாய் உயிர் பெறும்; கடமையாற்றும்; கௌரவம் பெறும்.

இந்நூலை வெளியிட முன்வந்து அழகிய முறையில் அதை புத்தகமாக வெளியிட்டுள்ள புகழ்பெற்ற **கங்கை** புத்தக நிலையத்தார்க்கும்,

என் கதைகளைப் பிரசுரித்து, நூலாகவும் வெளியிடச் சம்மதம் தந்த கல்கி, செம்மலர் ஆசிரியர் குழுவுக்கும்,-

என் கதைகளைத் தேடுவதில் ஒத்துழைப்பு நல்கிய சக எழுத்தாளர்கள் அழகர்சாமி, இராகுலதாசன் அவர்களுக்கும்,-

72லிருந்து என்னையும் சிறுகதை எழுத்தாளனாக அங்கீகரித்துத் தாயின் பாசத்துடனும், ஒரு தந்தையின்

கண்டிப்புடனும் என்னை வழிநடத்திய தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் கே. முத்தையா அவர்கட்கும்,-

என்னை விடவும் என் கதைகள் பற்றிய ஞாபகமுள்ள அன்புக்குரிய தோழர் தி. வரதராாசன் அவர்களுக்கும்,-

என் படைப்புகளை விமர்சித்தும், பாராட்டியும், தோளில் சுமந்து விற்றும் எனக்கு உறுதுணையாக இருந்த இயக்கத் தோழர்கள் அனைவருக்கும்

எனது இதய பூர்வமான நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

இதோ... எனது கதைகளின் தொகுப்பு, படித்து விட்டு மௌனமாயிருப்பதைக் காட்டிலும் விமர்சித்தால் என்னைக் கூர்மைப்படுத்தும்; பாராட்டினால் என்னை உற்சாகப்படுத்தும்.

நன்றி!

என்றும் உங்கள்,

மேலாண்மறை நாடு **மேலாண்மை பொன்னுசாமி.**
626127
காமராசர் மாவட்டம்

உள்ளே...

1.	மானுடப் பிரவாகம்	11
2.	மாயமான்	24
3.	உயிரை விட	38
4.	இயலாமை	57
5.	மறுமுகம்	75
6.	பிறந்த போதினிலே	93
7.	நிறம் மாறும் நிஜங்கள்	107
8.	அரும்பு	114
9.	நாணயன்	127
10.	விசார்ணை	144

1

மானுடப் பிரவாகம்

'ராசாத்தி மகன் பாண்டி செத்துப் போனான்' என்ற அதிர்ச்சி, தீப்பிடித்த மாதிரி ஊரெல்லாம் சட்டென்று பரவியது. சாமிநாதன் செவியில் அந்தச் செய்தி நெருப்பாகவே இறங்கி மனசைச் சுட்டது. சர்வாங்கமும் குலுங்கிப் போனான்.

நெஞ்சைக் கவ்விய துக்கம், தொண்டைக்குள் அடைத்துக் கொண்டு நின்றது. 'நெசந்தானா?' என்று நம்ப முடியாமல் மனசு திகைத்துக் கிடந்தது.

நேற்றுக் கூட குடுகுடுவென்று ஓடி வந்து விரலைப் பிடித்துக் கொண்டு, "மாமா, மாமா" என்றானே! அந்த ஏழுவயசுச் சிறுவனைப் பார்த்து "என்னடா" என்று அன்பு கனியச் சிரித்தானே...

"தங்கச்சி ஒனக்குப் பகை. தங்கச்சி மகன் ஒனக்கு ஒறவா?" என்று கடைத் தெருவில் யாரோ கேலி செய்தார்களே...

"மருமகனைக் கையிலே பிடிச்சிக்கிட்டாத் தானே... நாளைக்கு மகளை ஓசியா தள்ளி விடலாம். சாமிநாதன் காரியக்காரன்தானப்பா."

அந்தப் பெரியவர்களின் கிண்டலான பலத்த சிரிப்புக்கு அர்த்தம் விளங்காமல், மாமா முகத்தைத் திகைப்பாய்ப் பார்த்தான், பாண்டி.

"என்னடா வேணும் பாண்டி?"

"துட்டு மாமா... துட்டு!"

"துட்டு எதுக்குடா...? வடை வேணுமா?"

"ம்..."

அந்தப் பிஞ்சு முகத்தில் கும்மாளமிடுகிற களிப்பு. சின்ன உதடுகளில் மின்னுகிற சிரிப்பு.

உளுந்த வடையைக் கையில் வாங்கியவுடன் உலகத்தையே ஜெயித்து விட்ட பெருமை, அந்தச் சிறுவனுக்கு. முகமெல்லாம் பூஞ்சிரிப்பாக விரிய, கால் முளைத்த பூச்செண்டாக ஓடினானே...! நேற்றுதானே...

அந்தப் பயலா செத்துப் போனான் ? இதென்னடா... பேய்க் கூத்தாயிருக்கு... அந்தப் பூவைக் கிள்ளிக் கொண்டு போகச் சாவுக்கு எப்படித்தான் மனசு வந்துச்சு? இந்தச் சாவு வாயிலே மண்ணு விழ!

சாமிநாதன் மனசெல்லாம், மழையில் நனைந்த காகிதமாக நைந்து போய்... சோகத்தில் பொதும்பிப் போயிருந்தது.

அந்தப் பிஞ்சு முகத்தைக் கடைசியாக ஒரு தடவை பார்த்துவிட மனசு ஆவேசப்பட்டது. பரபரத்தது. ஓடத் துடிதுடித்தது. துண்டைத் தூக்கித் தோளில் போட்டுப் புறப்பட்டவன்... அப்படியே திகைத்துப் போனான்.

‘அதுக்காக... அந்தப் பயலோட வீட்டு வாசப்படி மிதிக்கவா?’ மனசில் சுரீரிடுகிற உணர்வுகள். வெக்கையடிக்கிற அனலாக நினைவுகள். ரோஷமாய் எழுகிற அக்கினி.

அப்படியே சோர்வுடன் திண்ணையில் உட்கார்ந்து விட்டான். மட்டியைக் கடித்துக் கொண்டான். மனசைக் கட்டுப்படுத்திக் கொண்டான். முறுக்கிக் கொண்ட மனசுக்குள் விறைத்துக் கொண்ட உணர்வுகள்.

போலீஸ் ஸ்டேஷனில் பயத்தில் வியர்க்கிற மனசோடு நின்ற காட்சிகள்; கண்ணில் தட்டுப்பட்ட காக்கிச் சட்டைகளுக்கெல்லாம் பயந்து குழைந்த அவலம்.

“ஏண்டா, டேய்... நீயெல்லாம் கல்லெடுத்துப் பாய்றதுன்னா... நாங்க நாற்காலிக்கு அலங்காரமாக இருக்கவா இங்கே இருக்கோம்?” என்று அதட்டலாக நெருங்கிய சப்-இன்ஸ்பெக்டர், ஓங்கிய கை மாறாமல் சப்பென்று அறைந்த அடியில் பொறி கலங்கி நின்ற பயங்கரக் கோலம்...

அந்தக் கேஸ் கோர்ட்வரைக்கும் போனால் என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்ற அச்சத்தில்... ஸ்டேஷனிலேயே தீர்த்துக் கொள்ள யார் யாரிடமோ கெஞ்ச வேண்டிய அசிங்கம்...

ஆசை ஆசையாய் வளர்த்த - பணம் பெற்ற பசுமாட்டை, அடிமாட்டுக்கு விற்றது போல விற்று யார் யாருக்கோ லஞ்சமாய்க் கொடுத்துச் சீரழிந்த கொடுமை...

இதனாலெல்லாம் அடைந்த கேவலம்... இந்தத் தலைமுறைக்கே தாங்குமே. ஊரெல்லாம் கைகொட்டிச் சிரிக்கிற சிரிப்பாணியாய்... அவமானப்பட்டுத் தலைகுனிய வேண்டியதாகியிருந்ததே...

இத்தனைக்கும் காரணமான தங்கச்சி புருஷன் மூக்கையா.

ச்சே! இம்புட்டு நடந்த பிறகும்... அந்த அற்பப்பயல் வீட்டிலே போய்க் கால் வைக்கவா? சோறு திங்கிற மானஸ்தன் எவனாவது, அவன் வீட்டிற்குப் போவானா?

மனசில் கொந்தளித்துக் கொதிக்கிற நினைவுகள். உள் காயத்தின் ரணங்களை நினைவுபடுத்துகிற வேதனை. அப்படியே சுவரில் சாய்ந்து கொண்டான்.

உள்ளே சின்ன முகம் காட்டுகிற பாண்டி; பூஞ்சிரிப்போடு எச்சில் வடிக்கிற பாண்டி; கால் முளைத்த பூச்செண்டாக ஓடுகிற பாண்டி.

வெறியோடு இழுத்த இழுப்பில் பீடியின் முகம் கங்காய் மின்னி வெடிக்க, மனசுக்குள் போலீஸ் ஸ்டேஷன். எஸ்.ஐ. அடித்த அடிகள், செத்துப் போன அம்மா அய்யாவையெல்லாம் இழுத்து நாறிப் போன வார்த்தைகளால் திட்டிய வசவுகள்.

அப்போது -

நாலைந்து பேர்கள் திமுதிமுவென்று வீட்டுக்குள் நுழைந்தனர். ஆள் ஆளுக்குச் சத்தம் கொடுத்துக் கொண்டு, கண்டன வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டு...

"என்ன சாமிநாதா, ஒனக்குப் புத்தியேயில்லியே. கிளம்பு, முதல்லே அங்கே போவோம்."

"எங்க மாமா?"

"ஊரே திரண்டு ஒந்தங்கச்சி வீட்டிலே கூடிக்கிடக்கு, வாயிலே வயித்துலே அடிச்சிக்கிட்டுப்புலம்பிக் கிடக்கு. கூடப் பொறந்த அண்ணன் நீ. இப்படி குத்துக்கல்லா இருந்தா... எப்படி?"

"அங்கே எனக்கொன்னும் சோலி இல்லியே, மாமா"

"அறிவுகெட்டதனமா பேசாதே. உறவு முறைகளுக்குள்ளே சண்டை சத்தம் வரத்தான் செய்யும். அதுக்காக, பகையைப் பத்திரப்படுத்தக் கூடாதப்பா... நல்லதுலே கூடிப் போகாட்டாலும்... இழவுலே கட்டாயமா கூடிப் போகணும்."

"இது கூடிப் போற பகையில்லே மாமா. நா அனுபவிச்ச அவமானம் எனக்குத்தான் தெரியும். அவுகவுகளுக்கு வந்தால்தான் தெரியும், காய்ச்சலும் தலைவலியும்!"

"அதெல்லாம் வாஸ்தவம்தானப்பா. இதெல்லாம் நினைச்சுக்கிட்டிருக்கிறதுக்கு இது நேரமில்லே. சாமிநாதா,. ஒரே நாள் ராத்திரியிலே வாயாலே வயித்தாலே போய், செத்துக் கிடக்கிற அந்தச் சின்னப் பயலுக்கு நீ தாய்மாமன். நீதான் கோடித்துணி போட்டு, மயானம் வரைக்கும் ஒம் மருமகனைத் தூக்கிக்கிட்டு வரணும். சம்பிரதாயம் தெரியாதா, ஒனக்கு? புறப்படு."

"தாய்மாமன் இருந்தால்தானே, மாமா? செத்துட்டான்னு வைச்சுக்கோங்க..."

"ஏலேய் சாமிநாதா, நீ மாமா சொல்றதைக் கேக்க போறீயா, இல்லியா."

"மாமா, நீங்க இதை விட்டுட்டு வேறு பேச்சைப் பேசுங்க, கேக்கறேன்."

ஒரே பிடி சாதனையாய் மறுத்து விட்டான். வாய்க்கு வந்தபடி திட்டிப் பார்த்தார் பெரியவர். மற்றவர்களும் அற்பப்பயலே, என்றெல்லாம் திட்டிப் பார்த்தனர். இவன் அசையவேயில்லை.

எப்படி அசைவான்?

அசைகிற மாதிரியான பகையா? மானத்தையும் பொருளையும் சேதப்படுத்தி, ஊரார் முன்னிலையில் நிர்வாணப்படுத்திய அந்த அவமானத் தீயை அவ்வளவு சுலபமாகவா மறந்துவிட முடியும்? தலைமுறை உள்ளளவுக்கும் மறக்க முடியாத கேவலமாயிற்றே...!

சாமிநாதனின் பெரியப்பா இறந்த இழவுக்குத் தங்கச்சி புருஷன் மூக்கையா, வேட்டியும் பாலியஸ்டர் சட்டையும் எடுத்துப் போட்டிருந்தான். மூக்கையா வழியில் ஒரு பெரியவர் இறந்த இழவுக்கு மூக்கையா 'செம்பு' எடுத்திருந்தான்.

அவனுக்குச் சாமிநாதன் வேட்டி சட்டை எடுத்துப் போடணும்.

அருங்கோடை. கைக்கும் மெய்க்கும் காசில்லாத நேரம். கண்ணு முழி பிதுங்குகிற காலம். அதற்காகச் செய்ய வேண்டிய 'வள்முறை'யைச் செய்யாமல் இருக்க முடியுமா?

எப்படியோ உருட்டிப் புரட்டி, கிடைத்த பணத்தில் வேட்டியும் துண்டும்தான் எடுத்துப்போட முடிந்தது. சட்டை எடுத்துப் போடவில்லை என்பதில் மூக்கையாவுக்கு மனச்சடவு. கோபம்.

“சபையிலே கரியைப் பூசிட்டானே, இவனெல்லாம் மச்சானா?” என்று சாடை மாடையாய்ப் பேசினான். இவனுக்கு ஆத்திரமாய் வந்தாலும் சகித்துக் கொண்டான். பல்லைக் கடித்துக் கொண்டான். இயலாமையைக் குத்திக் காட்டுகிற அவமானம்.

உறவில் சின்ன விரிசல். தங்கச்சி கூடப் பார்த்தால் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். மூக்கையன் அதற்கும் மேல்.

அப்போதுதான்... அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

துட்டுச்சிக்கல் காரணமாய்ப் புஞ்சைப் பொழியில் நின்ற நான்கு வேலி மரங்களை விலை பேசி விறகுக்கு விற்றிருந்தான் சாமிநாதன். பெரிய மரங்கள் அந்த வேலி மரங்கள். சாமிநாதன் தன் புஞ்சைக்கும் மூக்கையா புஞ்சைக்கும் நடுவில் ஓடிய ஓடையில் நின்றான்.

விறகுக்கு வாங்கியவன் என்ன நினைத்தானோ... சாமிநாதனையே மரத்தை வெட்டித் தரும்படி கூறிவிட்டான். வெட்டுக் கூலியாக ரூபாய் முப்பது கொடுத்து விட்டான்.

அரிவாள் கோடாரியோடு புஞ்சைக்குப் போய்... சாமிநாதன் வேலையைத் தொடங்கினான். துறட்டியால், மேல் முட்களையெல்லாம் இழுத்து ஒதுக்கி விட்டு, கட்டை விறகை வெட்டத் துவங்கிய போது,

"எந்தப் பய மகன்டா விறகை வெட்டுறது?" என்ற குரல், இவனது மனசில் செருப்படியாக விழுந்தது. திரும்பிப் பார்த்தால்... மூக்கையா.

"என்ன மாப்புள்ளே, வாய் நீளுது?"

"மாப்புள்ளே... எம் புஞ்சை விறகை எதுக்காக வெட்டணும்?"

"இது ஓம் புஞ்சைக்குப் பாத்தியப்பட்டதில்லே. எம் புஞ்சை பொழியிலேதான் மரம் நிக்குது."

"உழுது உழுது பொழியை நகட்டிக்கிட்டே வந்ததுமில்லாம... மரத்தையும் வெட்டவா வரணும்? இதைப் பார்த்துகிட்டுச் சும்மாயிருக்க... நா ஒன்னும் பொட்டப்பய இல்லே."

"ஊர்லே பெரியாளுக இருக்காக, கூட்டிக் காட்டுவோம். அவுக சொல்றதைக் கேட்டுக்கிடுவோம்."

"பெரியாளுக... கிழிப்பாக! இந்த ஊர்லே நியாயம் பேசுற பெரிய மனுசன் எவன் இருக்கான்? மரத்தை வெட்டக் கூடாதுன்னா... வெட்டக் கூடாது"

"மீறி வெட்டினா...?"

"ஒருத்தனுக்குப் பெறந்த உத்தமன்னா... வெட்டக் கூடாது."

"மாப்புள்ளே வெவகாரம் பேசுறப்போ... வார்த்தை சுத்தமா பேசணும். சிந்துனா... அள்ள முடியாது."

"எனக்குப் புத்திமதி சொல்ல ஒரு பயலும் வர வேண்டாம்."

"பய பரட்டைன்னு பேசினா... மண்டை சிதறிப் போகும். ஜாக்கிரதை!"

அரிவாளை ஓங்கிய இவனின் கையைப் பிடித்தான் மூக்கையா. வார்த்தைகள் தடித்தன.

சாமிநாதன் நெருப்பாகி விட்டான்.

கை கலந்து விட்டார்கள். மல்லுக்கட்டிப் புரண்டார்கள். விலக்கிவிட யாருமில்லை. கீழே கிடந்த சாமிநாதனின் மேலே உட்கார்ந்து மூக்கையா அரிவாளை ஓங்க -

சாமிநாதனுக்கு உயிர்ப் பறவை சிறகடிக்க -

அவன் கைக்கு ஒரு பெரிய கல் கிடைக்க ஓங்கியடித்து விட்டான்.

மூக்கையனின் வலது நெற்றியில் ரத்தம் சள்ளென்று முகம் காட்டி வழிந்தது. அவன் போட்ட அலறலில் காடுகளில் வேலை பார்த்த ஆட்கள் ஓடி வர, இருவரையும் பிய்த்து விலக்கி விட்டனர்.

மூக்கையா ரத்தம் வழிய சைக்கிளை எடுத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷன் போய்விட்டான்.

எல்லாம்... நூத்தியறுபது ரூபாய்க்கு விற்ற வேலி மரத்தால் வந்த வினை. உணர்ச்சியின் பாதையில் வார்த்தைகளைச் சிதறி வந்த சண்டை. ஒரு பசு மாட்டையே விற்று, காக்கிச் சட்டைகளின் வாயில் போட்டதுடன் முடிந்தது.

அதையெல்லாம் இப்போது நினைத்தால் கூட.... மனசின் ஆழத்திலும் கசந்து கிடக்கிறது. அவமானத் தீ எரிகிறது...

ச்சே! இதுக்குப் பிறகும் அந்த வீட்டு வாசப் படியை நா மிதிக்கவா? வெக்கக்கேடு! அப்படிப்பட்ட மானங்கெட்ட சொந்தம் என்னத்துக்கு?

வீட்டுக்குள் விருட்டென்று நுழைகிறாள் மனைவி பார்வதி. அலை குலைய வருகிற அவள் கையில் ரெண்டு மீட்டர் மல் கோடித்துணி.

"என்ன பார்வதி, இது?"

"நீங்க போங்க. போகணும்."

"அதெல்லாம் நடக்காது."

"...இங்க பாருங்க, பெரியாளுக செய்ஞ்ச அக்ரமத்துக்கு, அந்தச் சின்னப் புள்ளை என்ன செய்யும்? சொல்லுங்க. அவுகதான் உங்களுக்குப் பகை. இந்த புள்ளை என்னைக்காச்சும் ஒதுங்கி நின்னதா? மாமா, மாமான்னு ஓயாமெ ஓடி வருமே. அத்தை, அத்தைன்னு என்னை வாய் நிறையக் கூப்புடுமே, இனிமே அந்தச் சத்தத்தை எங்க போய்க்கேக்கப் போறேன்... அய்யய்யோ!"

- என்றவள் தாங்க முடியாமல் கதறியழுது விட்டாள். பேச வாய் வராமல் தலையில் 'மடேர் மடே'ரென்று அடித்துக்கொண்டே அப்படியே உட்கார்ந்து விட்டாள். அவள் அழுத அழுகையில், இவனும் கலங்கி விட்டான்.

"மாமா, துட்டு" என்று ஓடி வருவானே... தெருவில் எந்த இடத்தில் உட்கார்ந்திருந்தாலும், மடியில் உரிமையோடு ஏறி உட்காருவானே...

"உங்ககிட்டே துட்டு வாங்குனா... அய்யா அடிக்காரு. ஏன் மாமா?"

"உங்கப்பன்கிட்டேதான் கேக்கணும்."

"எங்கய்யா ரொம்ப மோசம். என்ன மாமா..."

மனசில் பூக்களை அள்ளித் தூவுகிற அந்தச் சிரிப்பு; காடைக் குருவியாய் அவன் ஓடுகிற அந்த ஓட்டம்; அந்தச் சிறுவனின் உதட்டோரங்களில் வழிகிற எச்சில்; அதில் ததும்பி நிற்கிற அன்புணர்ச்சி...

சாமிநாதனுக்குள் ஊற்றெடுக்கிற ஒரு பிரவாகம். உள்ளுக்குள் ஏதோ நொறுங்கிச் சரிகிற உணர்வு. கண்களில் உறுத்திக் கொண்டு வெளிவரத் துடிக்கிற கண்ணீர்.

"இங்க பாருங்க, உங்களுக்கு உங்க தங்கச்சியும் வேண்டாம். மச்சினனும் வேண்டாம். அவுக பகை, பகையாகவே இருக்கட்டும். அந்தப் புள்ளைக்குத் தாய்மாமன் கடமையை மட்டும் செய்துட்டு வந்துடுங்க."

அழுகையோடு அவள் சொன்ன வார்த்தையில் அர்த்தம் இருந்தது. இவன் அசைந்தான்.

'தாய் மாமன் கடமையை மட்டும் செய்துட்டு வந்துடணும். கோடித் துணியைப் போட்டுட்டு, மயானம் வரைக்கும் அந்தப் புள்ளையைக் கையிலே ஏந்திக் கொண்டு போய்க் குழியிலே போட்டுட்டு நேரா வீட்டைப் பார்த்து

வந்துடணும். அந்தச் சனியன்ங்க முகத்திலே விழிக்கவே கூடாது...!'

பாண்டியைக் குளிப்பாட்டி முடித்து விட்டார்கள். ஊரே திரண்டு நின்றது. திடீரென்று வந்த சாவின் அதிசயம் பற்றி - தாய்மாமன் தீராப் பகை பற்றிப் புலம்பிக் கொண்டு நின்றது. பெரியவர் பெருமூச்சோடு கூறினார்.

"இனிமே அந்தப் பய வர மாட்டான். தூக்குறதுக்கு வழியைப் பாருங்க. யப்பா நாவிதா, சங்கை ஊது."

"சாமிநாதன் இந்தா வந்துட்டான்."

எல்லாரும் இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்க, சாமிநாதன் ஒற்றையாளாக வந்து கொண்டிருந்தான். அவன் யாரையும் பார்க்காமல், நேராகக் கிடத்தப்பட்டிருந்த பாண்டியின் பக்கம் வந்தான்.

மஞ்சள் தடவிக் குளிப்பாட்டிக் கிடந்த அந்தச் சிறு சடலத்தைப் பார்த்ததும் அவனுள் உடைப்பெடுத்துப் பாய்ந்த உணர்ச்சிகள்...

நெஞ்சுக்குள் உடைந்து தொண்டைக்குள் வந்து திரண்டு கொண்ட அந்தத் துக்க உணர்வுகள்...

"அண்...ணாச்சீ, எம் புள்ளை கிடக்குற கோலத்தைப் பாத்தீகளா?" என்ற கதறலுடன் தலைவிரிகோலமாய் இவன் கையைப் பிடித்துக்கொண்டு அழுகிற தங்கச்சி ராசாத்தி...

முகத்தை மூடிக்கொண்டு இறுகிக் கிடந்த மூக்கையா, இவனைக் கண்டதும் உடைந்துபோய், குலுங்கிக் குலுங்கி

இவன் தோளில் முகம் புதைக்கிறான். அவனது கண்ணீர் தோளில்...

முழிக்கக்கூடாத முகங்கள் ஒன்று கையில்; ஒன்று தோளில்.

இவனுக்குள் கற்றையாய் ஊற்றெடுத்த மானுடப் பிரவாகம், நொறுங்கிச் சரிந்து கிடந்த கழிசடைகளை யெல்லாம் அடித்துக்கொண்டு கரைபுரள...

ஆறுதல் தேடி அலைமோதுகிற அந்த ஆத்மாக்களை அன்போடும் அழுகையோடும் அணைத்துக் கொண்டான்.

இவனும் துக்கம் தாளாமல் வெடித்துக் கதறி விட்டான்!

2

மாய மான்

சங்கரன் கோவில் ரோட்டில் பஸ் திரும்பி ஓட்டமெடுத்தது. வாய் திறந்து பேச விடாமல் பிரயாணி களை மௌன நிர்ப்பந்தத்தில் புதைக்கிற மாதிரி பஸ்ஸுக்குள் ஓலமிடுகிற சினிமாப் பாட்டு. காட்டுத்தனமான ஓலம்.

பஸ்ஸின் வேகத்தில் பாய்கிற காற்று முகத்தில் மோதுகிறது. அந்தச் சுகத்தில் லயித்துக் கிடந்தான் குமாரசாமி. வட்டமடித்துச் சுழன்றோடுகிற புஞ்சைகள். கல்லைக் கண்ட நாயைப் போல 'விருட், விருட்'டென்று ஓடுகிற மரங்கள்.

வேரில்லாத நினைவுகளாக... எங்கோ மனசு, எதையோ நினைத்து லயித்துக் கிடக்கிற மனசு.

குமாரசாமி எப்பவும் இப்படித்தான். சம்சாரி உழைப்பின் பலனைப் போல, அவன் இருக்கிற இடத்தில் அவன் மனசு நிற்காது. வேறு எங்கோ போய் விடும்.

டீக் கடையில் உட்கார்ந்திருப்பான். வீட்டுக்குள் நுழைகிற கோழியை விளக்குமாற்றாலும் வசவாலும் விரட்டுகிற மனைவியை மனசு பார்த்துக் கொண்டிருக்கும்.

வீட்டில் சாப்பிடும் போது, மனசு புஞ்சையை நினைத்துக் கொண்டிருக்கும். புஞ்சையில் வேலை பார்த்துக்

கொண்டிருக்கும் போது கூட மனசு வேறு எங்கோதான் சுற்றிக் கொண்டிருக்கும், நாதியற்ற நாய் மாதிரி.

அவன் மனசு வசப்பட்டிருக்கிற ஒரே இடம், மாசா மாசம் கூடுகிற சாதிக் கூட்டத்தில்தான். பௌர்ணமிக்குப் பௌர்ணமி கூடுகிற அந்தக் கூட்டத்தில் உட்கார்ந்திருக்கிற போது மட்டும்தான், அவன் கைவசத்தில் மனசு ஒன்றி நிற்கும். கூட்டத்தில் நடக்கிற நிகழ்ச்சிகளையெல்லாம் மனசும் மௌனமுமாய் உற்றுக் கவனித்துக கொண்டிருப்பான்.

இளவட்டப் பயல்கள் யாராவது வாய்க்கு வாய்விடாமல் கேள்விகள் கேட்டுக் கொண்டேயிருந்தால்... ஆவேசமாய் எழுந்து கோபமாய்க் குறுக்கிட்டுக் கத்துவான்.

"ஏலேய்... நாம ஒத்துமையாயிருந்தாத்தான், நம்ம காடு கரைகளிலே அழிமானமில்லாம வெள்ளாமை எடுக்க முடியும்டா. வெவரமில்லாம வெவகாரம் பேசித் தேன் கூட்டைக் கலைக்கிற மாதிரி இந்தக் கூட்டத்தை ஒய்ச்சிடாதீகடா... பாவிகளா."

அவ்வளவு சாதியபிமானம் அவனுக்கு. சாதி நியாயத்திற்காகப் பொது நியாயத்தைக் கூடக் கொஞ்சம் வளைத்துக் கொள்வான்.

உமையத் தலைவன் பட்டியில் பஸ் நின்றது. மூச்சு வாங்கிக் கொண்டது. பயணிகள் ஏறி இறங்க, கண்டக்டர் 'யாரு டிக்கட், யாரு டிக்கட்' யந்திரமாய்ச் சத்தமிட்டார். விசில் சத்தம், சாட்டையடியாய்க் கேட்க, பயந்து போய் பஸ் வேகமெடுத்தது.

வழக்கம் போலவே குமாரசாமியின் மனசு, எங்கோ அலைந்து கொண்டிருந்தது.

இன்னும் பூவெடுக்காமல் செடிப் பருவத்தில் நிற்கிற மிளகாய்ச் செடிகள். முந்தியெல்லாம் சாம்பலைத் தூவியே வெள்ளாமை எடுத்தாக. இப்ப என்னடான்னா ஏழு தடவை மருந்தடிச்சும் செவட்டையும் சுருட்டையுமாய்ப் பழுப்பேறி விறைச்சுப் போய் நிக்குதுக செடி. குழைவேயில்லே. விலைக்கு வாங்குற வீர்ய விதையிலேயே நோய்க் கிருமியும் சேர்ந்து வருதோ... என்ன இழவோ...? ஒரு நோய்க்கு மருந்தடிச்சுட்டு வீட்டுக்கு வந்தா... செடியிலே மறுநோய் முகம் காட்டுது. மடியைப் பிடுங்கிக்கிட்டு ஓடுது மருந்துச் செலவு. இன்னும் மருந்தடிக்கணும். வாய்க்கால் வரப்பு இழுக்கணும். உப்பு உரம் போட்டு முதல் தண்ணி பாச்சணும். எம்புட்டுச் சிக்கனமா பார்த்தாலும், ஆயிரம் ரூபாய் தேவைப்படும்.

யார்கிட்டே வாங்க முடியும்? யார் தருவாக?

சம்சாரிகளுக்காகவே இருக்கிற கூட்டுறவு சொஸைட்டியிலே கையை விரிச்சு உதட்டைப் பிதுக்கிட்டாக. ஏழைக்குக் கடன் இல்லைன்னு சொல்றதுக்கு, அவுக சட்டத்துலே விதிகளுக்கா, பஞ்சம்?

வங்கியிலே வெள்ளாமை லோன் தர்றதாக ரேடியோவிலே சொன்னாக. போய் மேனேஜரைப் பார்த்தா ஃபீல்ட் ஆபீஸரைப் பார்க்கச் சொன்னாரு. அவரு 'இன்னிக்கு வா, நாளைக்கு வா'ன்னு இழுத்தடிச்சாரு.

'இந்தச் சர்டிபிகேட்டை வாங்கிட்டு வா, அவரு கிட்டே கையெழுத்து வாங்கிட்டு வா'ன்னு போக்குக் காட்டினாரு...

அலைஞ்சு அலைஞ்சு காலும் மனசும் துவண்டது தான் மிச்சம்.

சரி, இது கை சேர்ற காரியமில்லே. ராமரை ஏமாத்துன மாயமான் கதைதான் போலிருக்குன்னு முடிவுக்கு வந்து கை கழுவியாச்சு.

விவசாயத்துக்குக் கோடி கோடியாய்ச் சர்க்காரிலே செலவழிக்காகன்னு ரேடியோவுலே சொல்லுராங்க. சம்சாரி கைக்குத்தான் வந்து சேர மாட்டேங்குது. எங்கே போய்த் தொலையுதோ...!

இவங்களை நம்பிச் சம்சாரி பொழைக்க முடியுமா? எப்பவாச்சம் காப்பாத்தியிருக்கா? நமக்குன்னு ஒரு புண்ணியவான் ஒதவ மாட்டானா? மரம் வைச்சவன் தண்ணி ஊத்தாமலா போவான்...?

குமாரசாமி கண்களை மூடினான். காற்றில் உலர்ந்த இமைகளின் உட்புறம் வலித்தது. கார்த்திகை மாத காலை வெய்யில் பனியில் நனைந்து சுகமாக இருந்தது. கரிசல் குளத்தில் பஸ் நின்றது. பஸ்ஸின் முதுகில் ஏதோ மூட்டைகளை ஏற்றுகிறார்கள். தலைக்கு மேல் தட தட சத்தம்.

ஆள் இறங்கியாச்சா என்று பின்பக்கம் எட்டிப் பார்த்துவிட்டுக் கண்டக்டர் விசில் கொடுத்தார்.

...போன வருசம் மாசிமாசக் கடைசி. நாய்க்கர் கமிஷன் கடைக்கு இரண்டு தாட்டு மிளகாய் வற்றல் விற்பனைக்குக்

கொண்டு வந்திருந்தான். ஒரு மணிக்கு மேல்தான் மார்க்கெட் வரும். அதுவரைக்கும் என்ன செய்ய என்று சலித்துப் போயிருந்த குமாரசாமி, குட்டி போட்ட பூனையாக வளைய வளைய வந்தான். 'சும்மாவாச்சும் போய்ட்டு வருவோமெ' என்ற எண்ணத்தில் கே.ஏ.ஆர். கமிஷன் கடைக்குள் நுழைந்தான்.

சுய சாதிக்காரர் என்ற அந்யோந்ய உணர்ச்சி, அவனுக்குள்.

இரும்புப் பீரோக்களுக்கு மத்தியில் முதலாளியே உட்கார்ந்திருந்தார். உடம்பெல்லாம் வெள்ளை வெளே ரென்று கதர். நன்கு மழிக்கப்பட்ட கறுத்த முகத்தில் நறுக்கிவிடப்பட்ட கொத்துமீசை. அகன்ற நெற்றியில் விபூதிப் பூச்சு. நடுவில் சந்தனப் பொட்டு. இடுங்கிய கண்களை எடுப்பாகக் காட்டுகிற மூக்குக் கண்ணாடி.

"வாப்பா... வா... குமாரசாமி."

பெயரோடு சாதியையும் சேர்த்துத் தடபுடலாய் அழைத்தார். இவனுக்குத் தலையில் கிரீடம் வைத்த மாதிரியிருந்தது.

"ஆமா முதலாளி."

"உட்காரப்பா."

"இல்லே... இருக்கேன் முதலாளி."

"அட உட்காரப்பா. என்னப்பா பெரீ...ய்ய மாரியாதை? உங்களை வைச்சுத்தானப்பா எங்களுக்கு பொழைப்பு. விளைஞ்ச பொருளைச் சம்சாரிக எங்க கடையிலே

விற்பனைக்குக் கொண்டாந்து போட்டாத்தானே, எங்களுக்கு கமிஷன் வருமானம்? ஞாயமாய்ப் பார்த்தா... நாங்கதான் உன்னைப் பார்த்து எந்திரிச்சு நின்னு கும்பிடணும்!"

ஏதோ ஜோக்கைச் சொல்லி விட்டவரைப் போல் பெரிதாகச் சிரித்தார் கே.ஏ.ஆர். சிரித்த அதிர்ச்சியில் சந்தனப் பொட்டிலிருந்து ஓர் இணுக்கு பயந்து போய் உதிர்ந்தது.

குமாரசாமிக்குள் ததும்பி வழிந்த பெருமித உணர்வு, கொதி வெயிலில் பாடுபட்டு விட்டு வேப்ப மரத்து நிழலுக்குள் வந்த மாதிரி உள்ளுக்குள் ஜில்லென்று பரவுகிற குளிர்ச்சி. வாழ்க்கையின் வெக்கையிலேயே அடிபட்டுக் கன்றிப்போன அவனது மனசு, மனுசனை மனுசனாகப் பார்த்த உபசாரத்தில் சுகம் கண்டு கிறங்கி நின்றது.

"வத்தல் வந்துருக்கா, யார் கடைக்கு?"

"நாயக்கர் கடைக்கு!"

"ஏன் நம்ம கடைக்குக் கொண்டு வரக்கூடாதா? சொந்தச் சாதிக்காரங்க, நீங்களே இப்படி ஒதுங்கினா, என்ன ஞாயம்? நாய்க்கருக்குப் போற கமிஷன், எனக்குக் கிடைக்கக் கூடாதா? நாம சீரழிஞ்சு நிக்கிறதே... இப்படி சாதியபிமான மில்லாம இருக்கிறதுனாலேதானே?"

"அதுக்கு இல்லே முதலாளி... காத்திகை மாசக் கோடைக்கு அவரு கை குடுத்து உதவினாரே?"

"இந்த வருசம் எம்புட்டுக் கடன் வாங்கியிருக்கே?"

"ஆயிரம் ரூவா. இன்னிக்குக் கொண்ணாந்திருக்கிற வத்தலிலியே வட்டியோட கடனை கழிச்சுட்டுப் போயிருவேன் முதலாளி."

"இந்த வருசம் ஒனக்கு வர்ற வத்தல் பூராவிலே யிருந்தும் அவருக்கு எம்புட்டு கமிஷன் கிடைக்கும் தெரியுமா? ரெண்டாயிரத்துக்குக் குறையாது. இதுலே ஆயிரம் கடனா குடுக்கறது, பெரீய்ய விஷயமா?"

"கழுத்தாம் பிடியாயிருக்கிற அந்தக் கஷ்ட நேரத்துக்குக் குடுத்து உதவணுமே! அது தானே முதலாளி, பெரிய விஷயம்? நானும் அதுக்கு நாணயமா நடந்துக்க வேண்டாமா, முதலாளி."

"ஏங்கிட்டே கேட்டா நான் குடுக்க மாட்டேனா? சொந்தச் சாதிக்காரங்களுக்குக் குடுக்காம, நான் யாருக்குக் குடுக்கப் போறேன்? சும்மாவா குடுக்கப் போறேன்? வட்டிக்கு வட்டி... ஆதாயத்துக்கு ஆதாயம்."

பகட்டில்லாத அவரது வெளிப்படையான பேச்சில் அவனின் நம்பிக்கை காலூன்றியது, வேர் விட்டது.

"அடுத்த தடவையிலேயிருந்து இந்த வருஷ வத்தலை நம்ம கடையிலே போடு. காத்தீகை மாசம் வந்து கடன் வாங்கிட்டுப் போ. சரிதானே?"

"ஆகட்டும் முதலாளி."

"நீ மட்டுமில்லே. உங்க ஊர்லே இருக்கிற நம்மாளுக சம்சாரிகளிலேயே நல்ல புள்ளிகளையும் கூட்டிட்டு வா. ஒன்னைப் போல் யோக்கியமான புள்ளிகளாக இருக்கணும். அதான் முக்கியம்."

"சரி முதலாளி..."

குமாரசாமிக்குக் கல்யாண வீட்டில் வயிறு புடைக்க விருந்து சாப்பிட்ட மாதிரியிருந்தது. ஏப்பம் விடுகிற அளவுக்கு

மனத்ததும்பல். அதிலும் 'ஒன்னைப் போல யோக்கியமான' என்ற விஷயம், பாயாசமாக மனசின் ஆழம் வரை இனித்தது.

'சொந்தச் சாதின்னா.. அதுக்கு ஒரு மவுசு இருக்கத்தான் செய்யுது' என்று திருப்தியோடு வெளியேறினான் குமாரசாமி.

அவன் சொன்னபடியே நடந்து கொண்டான்.

மறு தடவை இவனது வற்றல் கே.ஏ.ஆர். கடையில் தான் குவிக்கப்பட்டிருந்தது. சிறியதும் பெரியதுமாகச் சிவப்புக் குன்றுகளாக வற்றல் குவியல். இவனது குவியலின் மேல் ஐஸ் குச்சிப் போன்ற சின்ன மூங்கில் கீறலில் சொருகப்பட்ட வெள்ளைத் தாளில் ஊர், பெயர் விவரங்கள் இருந்தன!

ஒன்றரை மணிக்கு மார்க்கட் வந்தது. வியாபாரிகள் குவியலாக வந்தனர். இதயத்தை ஏறி மிதித்ததைப் போல் வற்றலில் ஏறிப் பிணையல் போட்டனர்.

அவர்கள் வைத்ததுதான் விலை. போட்டதுதான் எடை. யாரும் ஒரு வார்த்தை பேச முடியாது.

வந்திருந்த வியாபாரிகளில் நாயக்கரும் இருந்தார். அவரைக் கண்டதும் குமாரசாமி குடையைக் கண்ட காளையைப் போல வெருண்டான். தன் தலையை மறைத்துக் கொண்டான்.

அவரும் புரிந்து கொண்டார். கூடையிலிருந்து மீன் துள்ளி விட்டதைத் தெரிந்து கொண்டார்.

இவனுக்குந்தான் உள் மனசில் எறும்பு ஊர்கிற உணர்வு...

கமிஷன் வருமானத்தை எதிர்பார்த்துக் கடன் கொடுத்தவரை ஏமாற்றி விட்ட மன உறுத்தல். தனது நாணயமே தலை புரண்டு புழுதியில் புதைந்து கிடக்கிற குற்ற உணர்வு முள்ளாக உறுத்தியது.

அவர் முகத்தை ஏறிட்டுப் பார்க்கத் தைர்யமில்லாமல் வெட்கினான். கூட்டத்தில் முகம் புதைத்துத் தலை மறைந்து கொண்டான். வேறு என்ன செய்ய?

அழகாபுரி வேப்ப மரத்தடியில் பஸ் நின்றது. ஸ்டாண்டிங்கில் ஏராளமாய் ஆட்கள் நெருக்கியடித்துக் கொண்டு இறங்குபவர்களும் வழியில்லாமல் திண்டாடினர். ஏறுகிறவர்களும் திணறினர்.

"என்னப்பா, போவலாமா? போய் டயமெடுக்கணும்" என்று டிரைவரின் எரிச்சலான அதட்டல்.

"கெழவி, சீக்கிரம் ஏறித் தொலை. ஆடி அசைஞ்சுக்கிட்டு. ச்சே! ரைட், போகலாம். பாட்டி கம்பியைப் பிடிச்சுக்கோ."

வண்டி புறப்பட்டது. போகிற போக்கில் டிரைவர் ஒரு கையை உயர்த்தி கேஸட்டை மாற்றிப் போட்டார். கழுதைகள் கூடிக் கனைக்கிற நாராசமாய் பாட்டு.

இவன் மனசு வேறு எங்கோ மேய்ந்து கொண்டிருந்தது.

வைகாசி மாசம் கார் போட்டுக் கிராமத்துக்கு வந்திருந்தார். கே.ஏ.ஆர். குமாரசாமியைத்தான் தேடினார். சாதிச் சங்கத்திற்கு ஆயுள் சந்தா சேர்க்க வந்திருப்பதாகக்

கூறினார். வீடு வீடாக இவனையும் அழைத்துக் கொண்டே போனார். ஆயுள் சந்தா வாங்குவதுடன், கமிஷன் கடைக்கு வாடிக்கையாளர்களையும் சேகரித்துக் கொண்டார்.

தன் சாதிக்காரர்கள் இருக்கிற கிராமங்களுக்கும் இவனைக் காரில் அழைத்துச் சென்றார். இவனுக்குப் பெருமை பிடிபடவில்லை.

"கே.ஏ.ஆர். கடையிலே கடன் வாங்கணும்னா, குமாரசாமியைத்தான் பிடிக்கணும். அவனுக்குத்தானப்பா அம்புட்டுச் செல்வாக்கு' என்று கிராமத்தினர் பேசிக் கொள்வதை நினைக்கும்போதெல்லாம் அவனுக்குள் பரவுகிற இன்பக் குளிர்ச்சி. பாதங்களுக்கு முன்னால் பூக்களைத் தூவியிருக்கிற மாதிரி மனசில் ஒரு பெருமித உணர்வு. அவன் மனசுக்கு இறக்கைகள் முளைத்திருந்தன.

சங்கரன் கோவில் பஸ் நிலையத்திற்குள் பிரவேசித்து, இடம் பார்த்து நின்றது பஸ். அடித்துப் பிடித்துக் கொண்டு அவசரமாய் ஆட்கள் இறங்கப் பரபரத்தனர். குமாரசாமி நிதானப்பட்டுக் காத்திருந்தான்.

'ச்சே, என்ன சனங்க! ஏறும் போதும் அவசரம். எறங்கும் போதும் அடிதடிதானா!'

தென் வடல் ரோடெல்லாம் மக்கள் குறுக்கும் நெடுக்கிலுமாய் சைக்கிள்கள், லாரிகள், அடர்த்தியாய்ச் சாலையோரக் கடைகள். எல்லாம் கடந்து இவன் கே.ஏ.ஆர். கடைக்குப் போய்ச் சேர்ந்தான். ஏமாற்றம் சப்பென்று முகத்தில் அறைந்தது.

முதலாளி இல்லை. விசாரித்தான். குல தெய்வத்தைக் கும்பிடக் குடும்பத்தோடு காரில் போயிருப்பதாகத் தகவல்

கிடைத்தது. கடையிலிருந்த கணக்குப் பிள்ளை, 'புதன் கிழமை வந்தால், முதலாளியைப் பிடிக்கலாம்' என்று துப்பு கொடுத்தார்.

'ச்சே! இன்னிக்கு எந்த வெறுவாய்க் கட்டை மூஞ்சியிலே முழிச்சோமோ' என்று மனசின் ஏமாற்றம் சாபமாய் வெளிப்பட, ஊர் திரும்பினான்.

புதன் கிழமையும் நம்பிக்கையுடன் வந்திருந்தான்.

கே.ஏ.ஆர். சென்னை சென்றிருப்பதாகத் தகவல் கிடைத்தது!

ரொம்பச் சோர்ந்து போனான். கணக்குப் பிள்ளை யோசனைப்படி திங்கட்கிழமை வந்திருந்தான். நல்லவேளை கே.ஏ.ஆர். இருந்தார்.

அப்பாடா என்று மனசு நிம்மதிப்பட்டது.

மடித்துக் கட்டியிருந்த வேட்டியைக் கால்வரை விட்டு மரியாதையுடன் கும்பிட்டான். அவர் இவனை ஏறிட்டுப் பார்த்தார்.

"என்ன குமாரசாமி, இப்பத்தான் வர்ரீயா?"

"ஆமா முதலாளி, ஏற்கெனவே ரெண்டு தடவை வந்திருந்தேன்."

"கணக்குப் புள்ளை சொன்னாரு...!"

"கை பக்கத்துக்கு வந்துட்ட வெள்ளாமையே களத்து மேட்டுக்கு இழுத்தாகணுமே முதலாளி... அதான் தாகத் தோட வந்தேன். உங்களைப் பார்க்க முடியலே."

அவலத்தைச் சொல்லும்போதே ஒரு புகார் தொனி அதில் ஒலித்தது. அது அவருக்கு எரிச்சலாக இருந்தது.

"நீ ஒன்னோட ஆத்திரத்துக்கு அலையுறே. என்னோட ஆத்திரத்துக்கு நான் அலையுறேன். அதுக்கு யார் என்ன செய்றது?"

"என்ன முதலாளி சொல்லுதீக?"

"கடலை வாங்கிக் குடுத்த வகையிலே ஆயில் மில்லிலிருந்து பானைஞ்சு லட்சம் நின்னுக்கிடுச்சு. பருத்தி வாங்கியனுப்புனதுலே பஞ்சு மில்கள்லே இருபத்திரண்டு லட்சம் 'லம்ப்பா' போய் மாட்டிக்கிடுச்சு. நம்ம அவசரம் நமக்கு. நம்ம அவசரத்துக்கு ஏத்தாப்புலே, எவனும் அசைய மாட்டேங்குறான். என்ன செய்றது?"

அவரது பெருமூச்சில் இவன் கரைந்தான்.

இவனுக்குள் கொடுக்கை நீட்டிக்கொண்டு ஒரு தேள் வருகிற மாதிரி கலக்கம். மனசுக்குள் கானல் நீராய் ஓடுகிற மாயமான். ராமரை ஏமாத்திய மான்.

போன மாசி மாசம் இவர் பேசிய பேச்சுக்கள்... 'சொந்தச் சாதி', 'ஒன்னைப்போல யோக்கியனாக' அது இது என்று அந்யோந்யமாகத் தோளில் கை போட்டுச் சிரித்த சிரிப்புகள்... இப்போது விட்டேற்றியாகப் பெருமூச்சுவிட்டு, விஷயத்தை முடிக்கிற தோரணை...

பதற்றத்தில் நெஞ்சு தவித்தது.

"முதலாளி, உங்களை நம்பித்தான் இருக்கேன். வேறே வழியேயில்லே முதலாளி. உங்க பேச்சை நம்பி நாய்க்கர் முகத்தையும் முறிச்சுக்கிட்டேன்."

“இப்ப ‘இல்லை’ன்னு நானும் சொல்லலை. பணம் தாரேன். ஆனா, இப்போதைக்குப் பணத் தட்டுப்பாடு. கையிலே நோட்டு இல்லே. பேங்கிலேயும் இருப்பு இல்லே. வரவேண்டிய பணமும் வரலே. ஒண்ணு செய். மார்கழி பானைஞ்சுக்கு மேலே வா. ரூவா தாரேன்.”

சுருட்டையும் செவட்டையும் தாக்கி வாடிக் கிடக்கிற மிளகாய்ச் செடிகள், இன்னும் ஒரு மாசம் தாங்குமா? பட்டுப் போகுமே... குடும்பமே ஒழைச்ச ஒழைப்பு. நாசமாய்ப் போகுமே... அவனுக்குள் இருட்டிக்கொண்டு வந்த குருட்டு நினைவுகள். மனத்தவிப்போடு - கலக்கத்தோடு - அவரைப் பார்த்தான். ‘தட்டிக் கழிக்கத்தான் தவணை சொல்றாரோ!’

“என்னப்பா யோசிக்கே?”

“இல்லே முதலாளி, தாகத்துக்குத் தண்ணி கேட்டா, மேகத்துக்கு ஆள் அனுப்பியிருக்குன்னு சொல்லுதீகளே’ன்னு யோசிக்கேன். எரியற வீட்டுக்கும் வெட்டப் போற கிணத்துக்கும் கிட்டடத்துலேயா இருக்கு?”

“பட்டிக்காட்டுக்காரங்க புத்தியே இதுதானப்பா. சொல்றதையும் புரிஞ்சுக்கிட மாட்டீக. பொசுக் பொசுக்குன்னு சொலவடைகளைச் சொல்லிப்புடுவீக.”

குமாரசாமிக்குள் செருப்படி விழுந்தது போலிருந்தது. அவனின் தன்மானத்தை மட்டுமல்ல... சம்சாரிகளையே இழுத்துப்போட்டு இழிவுபடுத்துகிற அடி இது. அவனுள் குப்பென்று பற்றிக்கொண்டு சண்டாளமாய் ஜுவாலை விடுகிற கோபம்.

“நெசந்தான் முதலாளி, எல்லாரையும் மனுசனா மதிச்சு, அவுக பேசற பேச்சையெல்லாம் நம்பிக்கிடுதான்

பாருங்க பட்டிக்காட்டான், அவன் புத்தியைச் செருப்பாலேதான் அடிக்கணும்!"

"என்ன... ஒரு தினுசா பேசுறே?" அவர் பேச்சில் பதுங்கி நின்ற மிரட்டல்.

"ஆதாயத்துக்காக அப்பப்ப ஒரு பேச்சுப் பேசுவீக. சாதியையும் உப்பு மாதிரி தொட்டுக்கிடுவீக. நாங்க இளிச்சவாயங்க. அதையே நம்பிக்கிட்டு, உங்களைத் தொங்கிக்கிட்டு அலையுறோம். வவுத்துப் புள்ளையை நம்பி மாடு மேச்ச புள்ளையைக் கொல்ற மாதிரி, நான் நாய்க்கரையும் பகைச்சுக்கிட்டேன்... சரி கிடக்கு. விடுங்க... சம்சாரிகளை நம்பித்தான் நீங்க இருக்கணும். உங்களை நம்பி நாங்க பொறக்கலே. வாரேன்."

அவன் அவனாக இல்லை. காறித் துப்பினான். யார் மீதோ விழ வேண்டிய அந்த எச்சில் தெருவில் விழுந்தது. சாதியைச் சொல்லிப் பூக்களைத் தூவிய பணக்காரன், இதோ முகத்தில் கரியைப் பூசி விட்டான். நம்பவைத்துக் கழுத்தறுத்துவிட்டான். வஞ்சிக்கப்பட்ட மனசின் ரௌத்ரம்: 'ச்சே ஏமாளியாகிப் போனோமே' என்கிற எரிச்சல்.

எப்படித்தான் குமாரசாமி வீடு வந்து சேர்ந்தானோ...!

இப்போதெல்லாம் - பௌர்ணமிக்குப் பௌர்ணமி கூடுகிற சாதிக் கூட்டத்தில் உட்கார்ந்திருக்கிறபோதும் கூட, அவன் கைவசத்தில் இருப்பதில்லை மனசு. வேறு எங்கோ போய்விடுகிறது.

3

உயிரை விட...

"பொழுதாவுது. கஞ்சியை ஊத்து."

"பூச்சன் மாரியம்மாளைத் துரிதப்படுத்தினான். லங்கோடு கொடியில் கிடந்தது. எடுத்து இடுப்பில் மாட்டிக் கொண்டான். அதற்கும் மேல் வேட்டியை கட்டிக் கொண்டான்.

"என்ன, இன்னும் சோறு வைக்கலியா?" குரலில் அதட்டல் தொனித்தது. ஏறிட்டுப் பார்த்தாள். அவளது பார்வையில் பயம் தெரியவில்லை; எரிச்சல் அனல் வீசியது. "எதுக்கு இப்படி பறக்குறே? வேற வேலைக்குப் போகணும்னா... தள்ளிவுட்டாலும் அசைய மாட்டே. கூரைமேயனும்னா... இப்படி குதியாளம் போடுதீயே... எதுக்கு?"

"இந்தா... இந்த மயிரெல்லாம் ஒனக்கெதுக்கு? பேசாம கஞ்சியை ஊத்துன்னா... ஊத்த வேண்டியதுதானே," என்று சத்தம்போட்ட பூச்சன் தொடர்ந்து தனக்குள் பேசிக் கொள்வதைப்போல சலிப்போடு முணுமுணுத்துக் கொண்டான். "ஒரு ஜோலிக்குப் போகணும்னா... இவ கிட்ட பாதி உசுரைக் குடுக்க வேண்டியிருக்கு."

அதற்குள் தட்டுப் பலகையையும், ஆக்கைக் குச்சியையும் எடுத்து வெளியில் வைத்துக் கொண்டான். அவனுக்குள் ஒரு உற்சாக நதி பிரவாகமெடுத்து ஓடிக் கொண்டிருந்தது.

இவள் சொல்வது நிஜம்தான். வேறுவிதமான கூலி வேலைக்குச் செல்லவேண்டிய நாட்களிலெல்லாம் அலுத்துச் சலித்துக் கொள்வான். விருப்பமேயில்லாமல் நெட்டித் தள்ளுகிற ஜீவன நிர்ப்பந்தத்திற்காகத்தான் நகருவான். ஆனால், கூரை வேய்தல் வேலை வந்து விட்டால்...

அவனுக்குள் ஒரு சந்தோஷமான ஈடுபாடு வந்துவிடும். மனசுக்குள் கும்மாளமிடும் குதூகலம், அவனது துறுதுறுத்த செயல்களில் முகம் காட்டிச் சிரிக்கும். உற்சாகப் பரபரப்பில் காலில் சக்கரம் கட்டிக்கொண்டு அலைவான். அவனுக்கே அந்த வித்தியாசம் புரியத்தான் செய்கிறது. அவனும் பல தடவை யோசனை பண்ணிப் பார்த்திருக்கிறான்.

'கூரை மேய்ச்சல்லே மட்டும் நமக்கு ஒரு பிடிப்பு, ஆர்வம் இருக்கே, இது ஏன்? என்ன காரணம்?'

மற்ற கூலி வேலைகளெல்லாம் எந்தக் கிராமத்து உழைபபாளியும் செய்துவிடக்கூடிய சராசரித்தனமானது. ஆனால் இந்தக் கூரைவேய்தல், ஊருக்கு ஓரிருவர் மட்டும் தெரிந்திருக்கக் கூடிய தனித்துவமான உழைப்புக்கலை என்பதாலா இந்தப் பிடிப்பு?

மற்ற வேலைகளில் பிறரால் ஏவப்பட்டும் கண் காணிக்கப்பட்டும் செய்வதைப் போலல்லாமல், இதில் பிறரை ஏவுகிறவனாகவும் கண்காணிக்கிறவனாகவும் இவன் திகழ முடிகிறதே... அதனாலா?

அவனுக்குப் பிடிபட்டதில்லை.

ஊற்றிவைத்த கம்மங்கஞ்சியை அள்ளிக் குடித்தான். கம்மங்கஞ்சிக்கு ‘கடிச்சிக்கிட’ அவனுக்கு எப்போதும் தேவைப்பட்டதில்லை.

வாயைக் கழுவித் துடைத்துக் கொண்டான். கொடியில் கிடந்த அழுக்கான சட்டையின் பையைத் துழாவினான். ஒரு சிகரெட் கிடந்தது.

“மாரியம்மா, தீப்பெட்டி எடும்மா...”

அவள் மீண்டும் ஏறிட்டாள். கண்டனத்துடன் பார்த்தாள்.

“குடிக்கிற கஞ்சிக்கு சீரெட்டுதான் கேக்குதோ? கொத்து வேலைக்காரன் இப்படி சீரெட்டா ஊதுனா... கட்டுபடியாகுமாய்யா? ஆச்சி நூக்குற நூலு அய்யரு பூணூலுக்குத்தான் வரும்.”

“கத்தரிச் சீரெட்டா குடிக்கேன்...? எட்டு பைசா சீரெட்டுதானே?”

“துட்டை வுட்டுத் தள்ளுய்யா, உடம்பு என்னத்துக் காகும்? ஒன்னை வச்சுதானேய்யா எங்க ஆட்டம்? சுவரு இருந்தாத்தானே சித்திரம் வரைய முடியும்...”

“புள்ளைங்களை எங்க? காணலியே...”

“தெருக்காட்லே வெளையாடுங்க.”

“சரி சரி, தீப்பெட்டியெ எடு. நேரமாகுது.”

பற்ற வைத்துக்கொண்டான். காந்தலான அந்தப் புகை, உள்ளுக்குள் மோதிப் பரவி வெளிவரும்போது, மனசுக்குள் ஒரு சுகம் நுழைகிறது; இதமாகத் தழுவிக் கொள்கிறது.

"சரி, நா போய்ட்டு வாரேன். ம்?"

"பாத்துப் போயா. மசக்கம் கிசக்கம் வராமப் பாத்துக்கோ."

ஏதோ ஊருக்கு விருந்துக்குச் செல்பவனைப்போல ஆர்வத்தோடும் சந்தோஷக் களிப்போடும் புறப்பட்டான். தட்டுப்பலகையையும் ஆக்கைக் குச்சியையும் தோளில் வைத்துக் கொண்டு நடக்கிற போது, பெருமிதத்தில் கூடக் கொஞ்சம் நிமிர்ந்தான். அவன் விட்ட புகையை ஆவணி மாதத்து மெலிந்த காற்று உருத் தெரியாமல் தன்வயமாக்கிக் கொண்டது.

சோலையப்ப நாடார் முதல் நாளே கூரையைப் பிரித்துப் போட்டிருந்தார். பூச்சனைப் பார்த்ததும் அவர் முகம் மலர்ந்தார். சந்தோஷத்துடன் வரவேற்றார், "வா பூச்சா, வாவா... வெள்ளனத்துலேயே வந்துட்டீயே."

"ஆமா முதலாளி, மேச்சலைக் காலாகாலத்துலே முடிச்சிட்டுப் போக வேண்டியதுதானே."

அவர் மிகவும் பூரித்துப் போய் விட்டார். பலமாக உபசரித்தார்.

"இந்தா, இந்தக் காபியைக் குடி. டேய் சேகர், கடையிலே போய் பூச்சனுக்கு நாலு சீரெட்டு வாங்கிட்டு வா!"

"ஆக்கை முடியெல்லாம் நனையப் போட்டுட்டீகளா, முதலாளி?"

"நேத்து இரவ்வே போட்டாச்சு, பூச்சா!"

"ஆக்கை புடிக்குறதுக்கு யாரைக் கூப்பிட்டுருக்கீக?"

"நம்ம தீக் கொழுத்தி மூர்த்தி..."

"அவரையே போய் மொச்சிக் கட்டை வெட்டிட்டு வரச் சொல்லிருங்க. முகடு போடுதுக்கு வேணுமில்லே?"

காபி என்ற பெயரில் வழங்கப்பட்ட தேநீரின் ருசியில் மனசு லயிக்க, அண்ணாந்து பார்த்தான்.

கூரையைச் சுமந்து நின்ற கை மரங்களும், குறுக்குவரிச்சுகளும், வல்லடைக் கட்டுகளும் நன்றாகத் திருத்தியமைக்கப்பட்டு, கச்சிதமாக இருந்தது. நிறைய புதிய நார்கள் கட்டப்பட்டிருப்பதைக் கவனித்தான்.

காலை வெயில் வஞ்சகமில்லாமல் வீட்டுக்குள் சுதந்திரமாக விழுந்தது. மரக்கட்டுகளின் நிழல்கள் சதுரம் சதுரமாகச் சுவர்களில் தெரிந்தது. வீட்டுக்கு வெளியே வந்தான்.

நேற்றுப் பிரித்த கூரையில் சேதப்படாமலிருந்த கம்பந்தட்டைகள் ஒதுக்கி, பிரிக்கப்பட்டு, சின்னச் சின்ன முடிகளாகக் கட்டப்பட்டு அடுக்கப்பட்டிருந்தன. நாலு வருஷப் புகையில் அந்தத் தட்டைகள், செங்கலிச்ச நிறமாக மாறிப் போயிருந்தன.

"போன மாசம் அறுத்த புதிய கம்பந்தட்டை பச்சை உலர்ந்து போய், சிமெண்ட் நிறத்தில் அழகாகக் கிடந்தது.

வீட்டைச் சுற்றிலும் ஒழுங்கில்லாமல், குவிந்து கிடக்கிற இந்தப் பழசு புதுசு தட்டைகளெல்லாம், பூச்சனின் கை வரிசையால், வீட்டின் மேல் கூரையாக - பட்டாளத்துச் சிப்பாய்களாக ஒழுங்குசெய்யப்பட்டு விடும். நாலு

வருஷத்துக்கு இனிக் கவலையில்லை. மழையோ, காற்றோ, வெயிலோ எந்தக் கொம்பனும் நெருங்க முடியாமல் இந்தப் பட்டாளத்துச் சிப்பாய்கள் பார்த்துக் கொள்வார்கள்.

"சரி, தீக்கொழுத்தி வந்துட்டாரா? மேலே ஏறுவோம். முடியாரு எடுத்துப் போடுறது?"

"ஏன், நானே எடுத்து எறியிறேன்..."

"அப்பச் சரி."

ஏணியில் கால் வைப்பதற்குமுன், "குலதாம்பரத்தை' மனதிற்குள் நினைத்துக் கொண்டான். "மேய்ச்சலுக்கு நா பொறுப்பு. எனக்கு நீதான் பொறுப்பு" என்று உதடுகளை அசைக்காமல் மௌனமா நினைத்துக் கொண்டான். பொறுப்பை இறக்கி வைத்த நிம்மதியோடு உற்சாகமாக ஏணியின் 'பழுது'களில் வலது கால் வைத்து ஏறினான்.

கூரை வேய்தல் வேலை மளமளவென்று நடக்கிறது. காக்கியில் தைத்த லங்கோடு அவன் இடுப்பிலிருந்து தொடைவரை மறைத்திருக்கிறது. வேட்டியைத் தலையில் சுற்றிக் கட்டியிருந்தான்.

கீழிருந்து அம்பாகப் பாய்ந்து வருகிற முடிகளை லாவகமாகப் பிடித்து, சப்பென்று வைத்து, 'பம்பறுத்தி'யால் குறுக்குக் கட்டை அறுத்து, குலைத்துவிட்டுப் பரப்புகிறான்.

ஒவ்வொரு வரிசைக்கும் முதலில் "நீள முடி போடும்" என்கிறான்; அப்புறம் பழைய முடி கேட்கிறான்; அப்புறம் புதுசில் நறுக்குன முடி கேட்கிறான். அவன் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு சோலையப்ப நாடார் ஓடி ஓடி அலைகிறார். கட்டுகளை வீசிவீசி எறிகிறார். வியர்வை வியர்த்துக்

கொட்டுகிறது. வீட்டுப் பெண்கள் ஓடி ஓடி தண்ணீர் சுமக்கிறார்கள். தட்டைக் கட்டுக்குவியல்களில் பானை பானையாகக் கவிழ்த்துத் தெளிக்கிறார்கள்.

மனிதர்களுக்கு வெறிபிடித்ததைப் போல் ‘வேகு வேகு’ என்று அலைகிறார்கள். வேலைக்குச் சிறகு முளைத்துப் பறக்கிறது. வீட்டுக்குள் விழுகிற சதுர நிழல்கள் வரிசை வரிசையாக மறைந்து... முழுமையான நிழலாக வளர்கின்றது.

சோலையப்ப நாடார் கீழிருந்து கம்பந்தட்டை முடிகளை எறிந்து கொண்டிருந்தார். அவருக்கு முடி எறிகிற நுட்பம் தெரியவில்லை.

அவனை விட்டு விலகிப் பாய்கிற முடிகளை பூச்சன் பிடிக்காமல் விட்டான். உயரத்திலிருந்து கண்டனத்துடன் பார்த்தான்.

“யோவ், முடியை ஒழுங்கா இங்க பாத்துப் போடுமய்யா!”

“போடுதேனில்லே, பூச்சா...”

“நல்லா போட்டீர்! நா எங்க நிக்கேன். நீர் போடுற முடி எங்க போகுது? பாரும்!”

“காத்து அடிக்குது. அதுக்கு நா என்ன செய்ய?”

“வாளித் தண்ணியிலே தூரை முக்கி நனைச்சு, நுனியைப் பிடிச்சு எறியும் காத்து அடிக்குதைப் பாப்போம்...”

நாடார் முகம் ‘கொறாவி’ப் போவதைப் பார்க்கும் போது, அவனுள் சந்தோஷம் துள்ளுகிறது.

கம்பந்தட்டை முடியின் தூர்ப்பகுதியைத் தண்ணீரில் நனைத்து, மறுமுனையைச் சரியாகப் பிடித்து வீசுகிறபோது... நிஜந்தான்! காற்றைக் கிழித்துக் கொண்டு சர்ரென்று பாய்கிறது. பூச்சனிடமே போய்ச் சேருகிறது.

"பாத்தீருமா, உம்மகாத்து என்ன செஞ்சது?" அவன் குரலில் வெளிப்படையான நையாண்டி துள்ளியது. கேலி மின்னும் பார்வையால் அவரை மோதினான்.

இப்படி உயரத்திலிருந்து அந்நியமனிதர்களைப் பார்க்கிறபொழுதெல்லாம், பூச்சனுக்குள் பரவுகிற இனிமையான சந்தோஷம், இப்போதும் ஒரு இசையாக எழுகிறது. வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தோடுகின்ற அந்த ஆனந்தப் பெருக்கு அவன் அனுபவித்தறிந்த எந்த இன்ப உணர்ச்சியை விடவும் மிகச் சிறந்ததாக - உன்னதமானதாக - அவனுக்குத் தோன்றுகிறது.

மாரியம்மாளுடன் கூடுகிற அந்தப் பொழுதின் சுகத்தைக் கூட, சாதாரணமாக்கி விடுகிறது, இந்த உயரப்பார்வை இன்பம்!

...போனமாசம் தொழி வெட்டுக்குப் போய்விட்டு வந்த களைப்பில் சர்க்கார் போட்டு வைத்த பஞ்சாயத்துப் பெஞ்சில் உட்கார்ந்திருந்தான், பூச்சன். சம்பளம் வாங்க சகதொழிலாளி போயிருந்ததால் இவன் காத்திருந்தான்.

இதே சோலையப்ப நாடார் அங்கு வந்தார்.

யாரோ ஒருவர் வானத்தை நோட்டம் விட்டுவிட்டு சோலையப்ப நாடாரிடம் கேட்டார்: "ஏன் மே(ல்) காத்து இப்படி அடிக்குதே. இந்த வருஷம் ஆடிப்பட்ட வெதைப்புக்கு மழை பெய்யாதோ..."

பூச்சனை 'குர்ர்'ரென்று பார்த்த நாடார், "கீழே உக்காரக் கூடாது. தலைமேலேதா ஏறி உக்காரணும்னு எளிய சாதிக்காரப் பயகளெல்லாம் நெனைக்குற காலத்துலே, மழை எப்படி எட்டிப்பாக்கும்? ஆடிப் பட்டத்துக்கும் பேயாது, மயிர்ப் பட்டத்துக்கும் பேயாது."

பூச்சனுக்கு 'இங்குட்டுக் குத்தி அங்குட்டு வாங்கியது' போலிருந்தது. மனுஷத்தனமில்லாத அந்த அடி, அவனது உள் மனசில் கூட வலித்தது. அவமானத்தில் முகம் கறுத்துப் போய், பெஞ்சிலிருந்து எழுந்துவிட்டான்.

இந்த மாதிரி நெஞ்சின் அடியாழம் வரை காயப்படுத்தி ரணப்படுத்திய சம்பவங்கள் அவனுக்கு நிறைய நிகழ்ந் திருக்கின்றன. அப்போதெல்லாம் ஏற்பட்ட அந்த ஆழமான அவமான உணர்ச்சி... கீழ்மைப்பட்ட தனது ஜாதியின்மீது பரிதாபமாக வெளிப்படவில்லை. சிந்தனையால் கீழ்மைப் பட்டுக்கிடக்கும் இந்த உயர் ஜாதித் திமிரைக் காலின் கீழ் போட்டு மிதிக்க வேண்டும்; மிதித்துத் துவைக்க வேண்டும்; துவைத்துக் கொண்டே "இப்போ எப்படியிருக்கு" என்று கேட்க வேண்டும் என்ற கொதிப்பாகத்தான் அவனுள் ஜ்வாலை விட்டெரியும்...

...அதே சோலையப்ப நாடார்தான் தலைக்கு மேல் மட்டுமல்ல, இன்னும் உயரத்தில் பூச்சனை ஏற்றிவைத்து, அவன் இடுகிற உத்தரவுகளை ஓடிஓடி நிறைவேற்றி, அவன் செய்கிற கண்டனங்களை - கேலிகளை - அசட்டுச் சிரிப்பால் தட்டிக் கழித்துக்கொண்டு...

பூச்சனுக்குள் ஆழத்தில் புதைந்து கிடந்த ஓர் உணர்வு சமத்துவத்துக்காக ஏங்குகிற மனித உணர்வு - திருப்தியுடன் சிரித்துக் கொள்கிறது.

விரித்துப் பரப்பியிலிருந்த கம்பந் தட்டைகளைச் சரிசெய்து கொண்டான். தட்டுப் பலகையால் சப் சப்பென்று அறைந்து சைஸ் செய்து கொண்டான். கூரையின் உள்பக்கத்திலிருந்த தீக்கொழுத்தியிடம்... "யோவ், ஆக்கை பிடியுமய்யா" என்றான்.

"ம், வரட்டும்" என்றான்.

கருவேல விளாரை (ஆக்கை) உள்ளே சொருகினான் பூச்சன். உள்ளே வந்த ஆக்கையை இரண்டாகக் கிழித்துக் கொண்டே தீக்கொழுத்தி, "பூச்சா, இறுக்கிவிடு" என்றான்.

"ம்ஹிம் இந்த்தா, ம்ஹ்ஹ்ம் இந்த்தா..." என்ற சப்தங்களைப் பரஸ்பரம் எழுப்பியவாறு இறுக்கினர். "கட்டிரும்" என்று பூச்சன் சொன்னவுடன், ஆக்கை இழுத்து முறுக்கி மடக்கிவிடப் பட்டது.

பூச்சன் இடத்தை மாற்றி நின்று கொண்டான். நாடாரைப் பார்த்தான். அவர் வழுக்கையில் வியர்வை அரும்பி வெயிலில் ஜ்வலித்தது. அவனுள் சந்தோஷ நதி பொங்கிப் பிரவகிக்க, உதடுகள் சொன்னது.

"முதலாளி, நீளமுடி போடும்!"

பெஞ்சுபோட்ட பலகாரக்கடைகளில் சாப்பிடப் போனாலும், இவர்களுக்குத் தரையில்தான் இலை போடுவார்கள். அந்நிய மனிதர்களை அண்ணாந்துதான் பார்க்க வேண்டும்.

ஊர்ப்பெரிய மனிதர்கள் கூட்டம் நடக்கும். மற்ற ஜாதிகளின் பெரிய மனிதர்கள் திண்ணைகளில் உட்கார்ந்து இமை தாழ்த்திப் பார்ப்பார்கள், புழுக்களைப் பார்ப்பதைப்

போல! ஒரு ஜாதியின் பிரமுகர் என்ற அந்தஸ்தோடு சென்றிருந்த போதிலும்கூட, இவர்கள் தரையில்தான் உட்கார வேண்டும். அண்ணாந்துதான் பார்க்க வேண்டும், நிலவைப் பார்ப்பதுபோல!

மனசுக்குள் ஜ்வாலை விட்டெரிந்த நெருப்பு அவனுள் ஒரு வெறியை ஏற்படுத்தியிருந்தது, நரம்புகளை முறுக்கேற்றியிருந்தது. அந்த வெறி, முடியின் குறுக்குக் கட்டை அறுக்கிற வேகத்திலும், தட்டுப் பலகையால் அறைகிற சப்தத்திலும் வெளிப்பட்டது.

நாடாரை எரிச்சலுடன் பார்த்தான். "முடியை நேரா பாத்துப்போடும். எத்தனை தரம் சொல்றது?" இப்போது குரலில் கடுமை ஏறியிருந்தது.

காலை வெயில் உஷ்ணம் கூடியிருந்தது. ஏறுபொழுது இளமதியத்திற்கு வந்துவிட்டது. குடித்த கம்மங்கஞ்சி போன இடம் தெரியவில்லை. வயிற்றில் பசியின் கூச்சல் கேட்டது.

சூரியக் கிரணங்கள் கண்களைக் கூசச்செய்தது. வழியனுப்புகிறபோது மாரியம்மாள் சொன்ன வார்த்தைகள் மனசுக்குள் ஒலித்தது.

"மசக்கம் கிசக்கம் வந்துராம பாத்துக்கோ. ஒன்னை வைச்சுத்தானே எங்க ஆட்டம்?"

வேறு வேலைத்தளத்தில் ஏற்கெனவே இரண்டு மூன்று முறைகள் மயங்கி விழுந்துவிட்டான். சோடாவை முகத்தில் அடித்தனர். வெங்காயத்தை வாயில் மென்று கொண்டே நாசியிலும், செவிகளிலும் ஊதினர். நெருப்புச் சட்டியில் மிளகாய் வற்றலைப் போட்டு வாடை காட்டினர்.

தகவல் அறிந்து மாரியம்மாள், 'லபோ, திபோவென்று நெஞ்சில் அறைந்துகொண்டு, அழுது ஆர்ப்பரித்தாள். நாலைந்து நாட்கள் கழித்து, கையில் பத்து ரூபாயை வைத்துக்கொண்டு டாக்டரிடம் மாரியம்மாள் அழைத்துச் சென்றாள்.

நிறைய விசாரித்தார். தொழிலை சிகரெட் பழக்கத்தை - மயக்கம் வருகிற நேரத்தை - விதத்தை - எல்லாம் விசாரித்தார். உடம்பை ரொம்ப நேரம் பரிசோதித்தார். ஓர் ஊசியைப் போட்டு நாலைந்து மாத்திரைகளும் தந்தார். இன்னொரு தடவை வரச் சொன்னார். எக்ஸ்ரே எடுத்து வரச் சொல்லி, அதற்கும் சீட்டு எழுதிக் கொடுத்தார்.

போட்டோ எடுக்கணும் என்றவுடன் என்னவோ ஏதோவென்று பயந்து போய் மாரியம்மாள் புலம்பி அழுதாள்.

"அம்புட்டு ரூவாய்க்கு இந்த ஏழைச்சிறுக்கி எங்க போவேன்? ஏழைபாழைகளுக்கு வறுமையைத் தந்து வேடிக்கை பாக்குற குருட்டுப்பய தெய்வம், நோயையும் ஒரு பங்காளியாக்கி வைச்சு கூத்துப்பாக்குதே...

தெய்வத்தைத் திட்டித்தீர்த்த மாரியம்மாள், தன் குல தெய்வத்துக்கு நேர்த்திக்கடன்தான் போட்டு வைத்தாள். அவ்வளவுதான் முடிந்தது. போட்டோவும் எடுக்க முடியவில்லை. டாக்டரிடம் போகவும் இயலவில்லை.

எப்படிப் போகமுடியும்? 'அன்னாடம் உழைக்குறது, அன்னன்னிக்கு வழிச்சுத்திங்கக்கூட எட்டியும் எட்டாமப் போகுது. தொட்டுக்கோ தொடச்சுக்கோன்னு அனுதினமும் கழியுறப்போ... டாக்டருகிட்டே எதை வைச்சுக்கிட்டுப்

போறது? தர்மாஸ்பத்திரிக்குப் போனா... நம்பளை திரும்பிக் கூட பாக்கமாட்டாக. ஆள் இருக்காது. ஆள் இருந்தா, மருந்து இருக்காது...

'சரி பாப்போம்... நோயில்லாத ஆளு பூமியிலே யாரு இருக்காக? அவுக எல்லா செத்தாபோறாக? விதி முடிஞ்சு வர்ர சாவை, டாக்டரு மட்டும் நிறுத்திடுவாரா, என்ன?...'

இல்லாமையை ஈடுகட்டிய எண்ணப் பிரமைகளில் நாளும் பொழுதும் நகர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது...

..."என்ன பூச்சா, சாப்புட்டுக்கிடுவோமா?" - நாடார் தான் கேட்டார். மனசுக்குள் வட்டமிட்ட நினைவுகளிலிருந்து விடுபட்ட பூச்சன்,

"எல்லாம் ரெடியா ஆச்சா?"

"ஆச்சு. எறங்கு..."

ஏற்கெனவே காபி குடிக்க ஒருதடவை இறங்கியாகி விட்டது. இப்போது சாப்பாட்டுக்கு. அண்ணாந்து பொழுதைப் பார்த்தான். பார்க்க விடாமல் சூரியன் தக தகத்தது. மணி ஒன்றரை இருக்கும்.

எல்லோரும் கால் கையைக் கழுவித் துடைத்துக் கொண்டனர். உட்கார்ந்தனர். சோற்றில் ஆவி வந்து கொண்டிருந்தது.

சாப்பிட்டு முடிப்பதற்குள் வியர்த்துக் கொட்டியது. கொதி வெயில்; சுடு சோறு; மழைக்காலக் கிணறுகளைப் போல உடம்பெல்லாம் நீர்க் கசிவெடுத்தது. உண்டு முடித்த திருப்தியில் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்

பூச்சன். அதன் புகை உள்ளே பிரவேசித்து, ஓர் இனிமையான உணர்வைப் பரப்பியது.

மறுபடியும் வேலை சிறகு கட்டிப் பறந்தது. வரிவரியாக வேய்ந்து கொண்டே உயரத்திற்குப் போனான் பூச்சன். வேகவேகமாக உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

"நீளமுடி வரட்டும்..."

"ம்ம்... கட்டைமுடி..."

"பழசு போடும்...ம் ம் ம்..."

"ஆக்கை..."

மளமளவென்று வேலை சாய்ந்தது. வீட்டுக்குள் இருட்டு பரவிக் கொண்டிருந்தது. இனி, முகடுதான் பாக்கி. அதையும் முடித்து விட்டால் இறங்கி விடலாம்.

சூரியன் தங்கத்தகடாக மஞ்சளாக ஜ்வலித்தது. உஷ்ணமில்லாத வெயிலாக இருந்தது. மேலடிவானம், முகம் முழுவதும் மஞ்சள் பூசிக் கொண்டது.

சோலையப்ப நாடாரைத் தேடினான்.

"முதலாளி..."

"என்ன பூச்சா?" - ஓடி வந்தார்.

"முகடுக்குத் தட்டைக் கட்டு கட்டிவைச்சிருக்கீகளா?"

"இருக்கு."

"போடுங்க கொஞ்சம் எட்டிப் போடணும்..."

உயரத்திலிருந்து அவரைப் பார்த்தான். மனசுக்குள் அதே குழந்தைத்தனமான சந்தோஷம். இனம் விளங்காத

இன்பப் பூரிப்பு. பெற்றோர்கள் ஒளித்து வைத்தபொருளை எட்டி எடுத்துவிட்ட குழந்தையின் குதூகலக் களிப்பு...

நாடாரின் உடம்பெல்லாம் கரியாக இருந்தது. முதுகின் ஓடையில் வியர்வை நீர்ப்பயணம். நாடார் மெல்ல மங்குவது போலிருந்தது.

கண்ணுக்குள் வியர்வைத்துளி வழிந்துவிட்டதோ...

புறங்கையால் அவசரமாகத் துடைத்துக்கொண்டான்.

ஏதோ ஒரு ராட்சஸக்கரம் இருதயத்துக்குள்ளிருந்த சதையைப் பற்றிப் பிசைவது போன்றதோர் பட படப்பு. நாடார் மீண்டும் மங்குகிறார். வெயில் நிறம் மாறிக் கறுப்பாகிறது...

காலூன்றி நின்கிற கைமரத்தை யாரோ உருவுவதைப் போல ஒரு திகில்... மனசு பயத்தில் அலறித் துடிக்க...

கண்ணுக்குள் அடர்ந்த இருட்டு கூட அசுரவேகத்தில் சுழல்வதைப் போல்...

இருதயம் வெடிக்கப் போவதைப் போல விம்மி விம்மித் தணிய...

சரி... நம்ம விதி முடிஞ்சு போச்சு...

எல்லாம் நிமாண்ட் நாழியில் நிகழ்ந்து விட்டது. கூரையில் உருண்டு வந்ததைத்தான் நாடார் பார்த்தார். அவருக்குக் கையும் காலும் ஓடவில்லை. அதிர்ச்சியில் திகைத்துப் போனார்.

அலறக்கூட வாய் எழவில்லை.

உருண்டு வந்த பூச்சன் குவிந்து கிடந்த கம்பந்தட்டைக் குவியலில் பொத்தென்று விழுந்தான். நாடாரின் 'ஐயய்யோ' அலறலில் தெருவே ஸ்தம்பித்து நின்றது. நாலா திசைகளிலிருந்தும் மனிதர்கள் பாய்ந்து வந்தனர்.

"சோடா வாங்கிட்டு வா."

"வத்தல் அள்ளிக்கிட்டு வா!"

"ஏய் வெங்காயத்தைக் கொண்டாயா."

"ஏய் சம்முகம், ஆர் எஸ் பதி தைலம் வாங்கிட்டு ஓடிவா!"

பதறி துடித்த மனிதர்கள் அல்லோல கல்லோலப் பட்டனர். யாரும் உத்தரவுக்காகக் காத்திருக்காமல், ஆளுக்கொரு வைத்தியத்தில் முனைந்தனர். எல்லா மனிதர்களும் பரபரத்து ஓடிச் சாடினர். ஜாதி மற்றும் சமூகத் தடைகளைக் கடந்து ஆழத்தில் கிடக்கும் மனிதர்களுக்குரிய கருணை உணர்ச்சி, ஒரு புயலாக ரூபம் கொண்டு, வீசியடித்து அத்தனை மனிதர்களையும் ஒரே மனிதனாக்கி, ஒரே பரபரப்பில் வேகத்தில் - வேலையில் உந்தித் தள்ளியது.

சோலையப்ப நாடார் பதைத்துப் போய், கண்மூக்கு தெரியாத வெறி வேகத்தில் பரபரத்துக் கொண்டிருந்தார்.

சில நிமிஷங்கள் நத்தையாக நகர்ந்தன. பூச்சன் மெல்லக் கண் விழித்தான். சுற்றி நின்ற மனிதர்களுக்கு அப்போதுதான் உயிர் வந்தது.

பத்து நாட்கள் ஓடிவிட்டன. பூச்சன் கிணறு வெட்டுக்கு ஆட்களை அனுப்பி விட்டு, கடப்பாரை

முனைக்குக் கூர்மை வைப்பதற்காக, கொல்லுப்பட்டறைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான்.

போலப்ப நாயக்கர் வந்தார்.

"வாங்க சாமி" என்று வரவேற்றான்.

"ஆமா பூச்சா..."

"என்ன சாமி, இந்தப் பக்கம்?"

"ஒன்னைத் தேடித்தான் வந்தேன்..."

"என்ன சாமி விஷயம்?"

"நம்ம கூரை மேயணும்."

வில்லிலிருந்து விடுபட்ட அம்பாக மாரியம்மாள் பாய்ந்து வந்தாள். "சாமி இவனை வுட்டுடுங்க. கூரை மேய்ச்சல்னா இந்த மனுஷனும் பறக்கத்தான் செய்வான். ஆனா, நாங்க இவனைப் பறி குடுத்துட்டு வெம்பரப்பா இருக்க முடியாது சாமி."

போலப்ப நாயக்கர் திகைத்துப் போனார். 'கூரை மேய்தலுக்கும், பறி கொடுத்தலுக்கும் என்ன சம்பந்தம்?'

"ஏன் மாரி, இப்படிப் பேசுறே?"

சோலையப்ப நாடார் வீட்டுக் கூரையிலிருந்து உருண்டு விழுந்த மறுநாள், வெள்ளாட்டை விற்றுக் கொண்டு ஆஸ்பத்திரி சென்றது - டாக்டர் பரிசோதித்தது - எக்ஸ்ரேயைப் பார்த்துவிட்டு 'ஹார்ட் வீக்' என்று கவலையோடு முணுமுணுத்துக் கொண்டது, தொழில், வருமானம் பற்றியெல்லாம் விசாரித்தது - ஊசி மருந்துகளுக்கும் டானிக்குக்கும் எழுதித் தந்தது -

“மயக்கம் எப்ப வரும்னு முன் கூட்டியே சொல்ல முடியாது. முடிஞ்சளவுக்கு ரெஸ்ட் எடுக்கணும். அப்படியே வேலைக்குப் போனாலும், தன் தரையிலே நின்று செய்கிற வேலைக்குத்தான் போகணும். ஆனா, கண்டிப்பா கூரை ஏறக் கூடாது. அதுமாதிரி உயரத்திலே நின்று செய்கிற வேலைக்குப் போனா... உயிருக்கே ஆபத்து” என்று டாக்டர் கவலையோடும் கண்டிப்போடும் எச்சரித்தது...

ஆதியோடந்தமாக... மாரியம்மாள் தனக்குரிய பாஷையில் விவரித்தாள். அழுகையும் கேவலும் சொற்களுடன் போட்டி போட்டுக் கொண்டு பொங்கியது.

பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த போலப்ப நாயக்கர்...

“அப்பச் சரி மாரி... பூச்சா நா வாரேன்” என்று தலையசைத்து விட்டுப் புறப்பட்டார். அவருக்கு வருத்தமாக இருந்தது.

மௌனத்தில் புதைந்து நின்ற பூச்சனுக்கு யோசனையாக இருந்தது. அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். எதையோ பறி கொடுத்தவனைப்போல மனசு கிடந்து தவித்தது.

அண்ணாந்து பார்த்தே பழகிவிட்ட அந்நிய மனிதர்களை உயரத்திலிருந்து பார்க்கிற அந்த உன்னதமான இன்ப உணர்வை நிரந்தரமாக இழந்துவிட வேண்டியது தானா, அவனுக்குச் சம்மதமில்லை.

மாரியம்மாளுடன் கூடுகிற அந்தப் பொழுதின் சொர்க்க சுகத்தை விடவும் மிகச் சிறந்ததல்லவா! அவனைப் பொறுத்தவரை, அது ஈடு இணையற்ற சந்தோஷமல்லவா!

தெருவுக்கு வந்துவிட்ட போலப்பநாயக்கர், "சாமி யோவ்" - சத்தம் கேட்டுத் திரும்பினார். பூச்சன்தான் ஓடி வந்தான். 'கேஹை பூஹை' என்று மூச்சிரைத்தது.

"என்ன பூச்சா...?"

"நாளை திங்கக்கிழமை. திங்கக்கிழமை கூரையைத் தீண்டக்கூடாது. மறுநாளைக்கு கூரையைப் பிரிங்க. புதன்கிழமை வந்து மேஞ்சு தாரேன் சாமி..."

"என்னமோ... உசுருக்கே ஆபத்துன்னு..."

"அது கெடக்கட்டும் சாமி... விதி முடியுறதுன்னா, கூரையிலேதானா முடியும்? நடந்து போகையிலே கூட சாவு வந்து சேரும் சாமி, அதை வுடுங்க. புதன்கிழமை நா வாரேன் சாமி..."

"மாரி சத்தம் போடுதாளப்பா..."

"அவளுக்கென்ன தெரியும் சாமி... சொல்லிட்டா நிக்க மாட்டேன். சத்தியமா வாரேன். நீங்க நம்பி கூரையெப் பிரிங்க சாமி!"

போலப்ப நாயக்கர் இனம் புரியாத திகைப்போடு சென்றார். ஆயினும், அவன் வர ஒப்புக் கொண்டதில் அவருக்கு மகிழ்ச்சி!

பூச்சனும் சந்தோஷத்துடன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

4

இயலாமை

“சனியன் பிடிச்ச இந்த வெள்ளைத் தண்ணியெ விட்டுத் தொலைக்க முடியலியே” என்று சள்ளையோடு நினைத்துக் கொண்டான்; உறங்கி முழித்தவுடன் மனசில் விழித்த முதல் நினைப்பே இதுதான்.

கைலியை அள்ளிக் கையில் பிடித்துக்கொண்டு, வாயில் ஊறி நின்ற நாற்றமெடுத்த எச்சிலை வெளியே வந்து துப்பினான். காலை நேரச் சூரியன் கண்களில் ஊசியாகப் பாய்ந்து தைத்தது. வீங்கிப் போனதுபோல மண்டை கனத்துத் தோன்றியது. தலை தூக்கி நிற்க முடியவில்லை. நெற்றிக்குள் நெறுநெறுப்பு. நேற்று குடித்த சாராயத்தின் எச்ச அவஸ்தையாகக் குத்திக் குடைகிற தலைவலி.

வாயைக் கொப்புளித்து முகத்தைக் கழுவினான். மேல் துண்டால் அழுந்தத் துடைத்தான். கையகலக் கண்ணாடியில் முகத்தைப் பார்த்தான்

மனசு மெல்லிசாக அதிர்ந்தது.

தன் முகமாய்த் தெரியவில்லை. பழுத்து ஊதிப்போய், கண்ணிமைகளைச் சுற்றி மெல்லிய வீக்கத்துடன் வேற்று முகமாய்த் தோன்றியது.

சாவு காலம் நெருங்கிருச்சா. முகம் இப்படி பழுத்திருக்கே.

'ச்சே! சனியன் பிடிச்ச சாராயத்தாலே வந்த வினை. இந்தக் கழுதையை ஒரேயடியா விட்டுத் தொலைச்சு தலை முழுக முடியலியே.'

புண்ணை மொக்கிற ஈக்களாக மீண்டும் அதே நினைப்பு. நேற்று -

தரையில் கால் பதிக்க முடியாத தள்ளாடலோடு, போதை வெறியில் (அ)லம்பிப் போய் வீடு திரும்புவதைக் கண்டவுடன்... தலையில் 'மடே' ரென்று அடித்துக் கொண்டு கதறிய பார்வதி, கசக்கிப் போட்ட ஈரக் காகிதமாய் அவள் முகம் அவலமாய்த் தோன்றிய கோலம், நினைவுக்குள் மங்கலாய்...

"இப்புடி கொதி சாராயத்தைக் குடிச்சுக் குடிச்சுக் குடலையும் புண்ணாக்கி, இந்தக் குடும்பத்தையும் புண்ணாக்குதீரே பாவி! ஒம்மை நம்பித்தானய்யா நாங்க உசுர் வெச்சிருக்கோம்? இந்தச் சொரணை கொஞ்சமாச்சும் ஒம்ம மனசுலே இருக்குதாய்யா?"

அம்மாவின் கதறலில் பீதியடைந்துபோய், நனைந்த கோழிக் குஞ்சாய் ஒடுங்கிப் போய் நின்ற மகன் ராசு.

தான் குடிக்கிற சாராயத்தினால் இரண்டு இதயங்கள் கிழிப்பட்டு, கந்தல் கந்தலாய்க் கிடக்கிற குற்ற உணர்வு மனசில் முள்ளாக உறுத்தி வேதனைப்படுத்த... ஏதேதோ அவலமாய் முனகிவிட்டு அப்படியே 'செத்து'ப் போனது... அரசல் புரசலாய் ஞாபகத்தில்...

கண்ணாடியைக் கீழே வைத்துவிட்டுச் செருமினான். தலையோடு சேர்ந்து மனசும் பாரமாய்க் கனத்தது. பார்வதியையும் ராசுவையும் நினைத்துக் கலங்கியது மனசு. "என்ன ஆனாலும் சரி... இந்தத் தண்ணிச் சனியனை கையாலே தொடவே கூடாது. இனிமே குடிச்சா... நா நாய்க்குச் சமானம்தான். மனுசப் பெறவியே கெடையாது."

குடிசைக்குள் சுற்றிலும் பார்த்தான். பார்வதியைக் காணோம். மனசுக்கு இலேசாக இருந்தது. அவள் முகத்தை நேருக்கு நேராகப் பார்க்கிற தர்மசங்கடம் இல்லாமல் போய்விட்டது.

"மணி ஏழு இருக்குமோ...? வேலைத்தளத்துக்குப் போகணுமே" என்ற முணங்கலோடு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான், மாரிச்சாமி. குடிசையின் தகரக் கதவை இழுத்துச் சாத்திவிட்டு, பஜாருக்கு வந்தான்.

பஜாரில் ஒரு பழங்கால பார்க். அது ஒரு முக்கியமான பஸ் ஸ்டாப். சந்தைக்கு வருகிற கறிகாய்களும் மற்ற சாமான்களும் இந்த ஸ்டாப்பில்தான் இறங்கும். சந்தையில் சரக்கு வாங்கித் திரும்புகிற கிராமத்துக் கடைக்காரர்களும் இங்குதான் வந்து பஸ் ஏறுவார்கள்.

ஏறி இறங்குகிற பாரங்களை நம்பிச் சில லோடுமேன்கள், அவர்கள் பெயரே 'பார்க் ரோடுமேன்கள்'தான். பார்க்குக்குள் இருந்த குரோட்டன்ஸ் செடி, கம்பிக் கேட்டுக்கு வெளியே நீண்டு, இலைகளும் பூக்களுமாய்த் தலைவிரித்து பரந்திருந்தது. அதன் நிழலில்தான் இவர்கள் ராஜ்யம், ஜீவனத் தொழில். வேலைத்தளம்.

மாரிச்சாமி வந்து சேர்ந்தபோது, அங்கு அவ்வளவாக ஆட்கள் இல்லை. சம்முகம் மட்டும் கல்லில் உட்கார்ந் திருந்தான். அந்தச் சாலை, காலைச் சுறுசுறுப்போடு தட தடத்துக் கொண்டிருந்தது. பஸ்கள், லாரிகள், வேன்கள், சைக்கிள்கள் எல்லாம் ஒன்றையொன்று முந்திக் கொண்டு, விலகிக் கொண்டு, நெருங்கிக் கொண்டு, சில சமயத்தில் உரசிக் கொண்டும்...

அவற்றுக்கிடையில் போகிற வருகிற மனிதர்கள்...

"என்னப்பா சம்முகம், நம்ம பையங்களை எங்க?"

"ஆண்டிபட்டி தக்காளி லோடு வந்துருச்சு. தள்ளு வண்டியிலே போட்டுக்கிட்டு மார்க்கெட்டு போயிருக்காங்க."

"எத்தினி பேரு?"

"மூணுபேரு. நீ இப்பத்தான் எந்திருச்சு வாரீயா? நேத்தும் தண்ணி தானா?" சம்முகத்தின் உதடுகளில் சகஜமாய் வந்து உட்கார்ந்த கேலிப் புன்னகை. இவனுக்குள், கோழிக் குஞ்சு கொத்திய புண்ணின் வலி.

"மள்ச்சூம்! சரி... நா டீ குடிச்சுட்டு வாரேன்."

"வெருசா வந்து சேரு. ராயகிரி வண்டியிலே இந்த லோடை ஏத்தணும்."

"ம்..."

சாலையில் கண்கள் நகர... அவன் டீக்கடை நோக்கி நகர்ந்தான். அவன் மனசுக்குள் ராசு வந்தான். முகம் வாடி, 'கொராவி'ப் போயிருந்தான். சிறு கண்களில் அடிபட்ட வேதனை.

“நோட்டு வாங்கித் தரலேன்னா... நாளைக்குப் பள்ளிக்கோடம் போகமாட்டேன்.”

“ஏம்ப்பா... ராசு?”

“இன்னிக்கு வாத்யாரு என்னை அடிச்சாரு. எல்லாப் பையன்களும் நோட்டு வாங்கிட்டாக. எனக்குத்தான் வாங்கலே. ‘வாங்காம வராதேன்’னு வாத்யார் கண்டிஷனா சொல்லிட்டாரு.”

கிள்ளப்பட்ட கொழுந்து முகமாய்க் கறுத்துப் போய்க்கிடந்த மகனைப் பார்க்கப் பார்க்க இவனுள் சுரந்த வேதனை, மனசின் சகல மூலைகளிலும் அந்த வலியின் அவஸ்தை. பரிவோடு அவன் தலையில் தடவினான்.

“இன்னிக்குக் கட்டாயமா வாங்கித் தாரேம்ப்பா.”

“ஆமா... இப்புடியே பத்து நாளா சொல்லிக் கிட்டிருக்கீங்க...”

தயக்கத்துடன் உள்மனசைக் கசியவிட்ட அந்தச் சிறுவன், பயத்தில் தலையைக் குனிந்து கொண்டான்.

இவனது இயலாமையை - இல்லாமையை - சுட்டிக் காட்டிச் சப்பென்று நெஞ்சில் அறைகிற நெருப்பு - நிஜம்... இவனுக்குள் குத்திக் குடைகிற அவமான ஊசிகள்.

“வாங்கணும்னு தாண்டா நிதம் ஆசைப்படுதேன். வேற ஏதாச்சும் கடன்காரன் - அவசரச் செலவு - வந்து மடியைப் பிடிச்சுக்கிடுது. நா என்ன செய்ய?”

“நோட்டு வாங்க ரூவா அமைய மாட்டேங்குது. நெதம் சாராயம் குடிக்க மட்டும் ரூவா கெடைச்சுடுதாக்கும்?”

அடுப்பங்கரையிலிருந்து பார்வதியின் குத்தலான கேள்வி. இவன் இதயத்தின் ஜவ்வைக் கிழிக்கிற முள்ளாக அந்தக் கேள்வி. குற்ற உணர்வின் வலி பொறுக்காமல் நொந்துபோன மனசோடு எதிரில் நிற்கிற மகனைப் பார்க்கிறான்.

வாடிக் கறுத்த முகமும், பயந்த கண்களுமாய் ராசு, மனசுக்குள் மீண்டும் மீண்டுமாய்...

டோக்கனை வாங்கி டீப்பட்டறையில் போட்டான்.

"நமக்கு ஒரு டீ குடுப்பா..."

சில்வர் கேனிலிருந்து தண்ணீரைப் பிடித்து, இரண்டு கிளாஸ் குடித்தான். நெஞ்சைப் பிளந்து கொண்டு திருப்தியாக வந்த ஏப்பம், நெஞ்சு ரோமங்களில் வழிந்த நீர்க் கோடுகளைத் துடைத்துவிட்டு டீக்காகக் காத்திருந்தான். பார்வை சாலையில் மேய்ந்தது.

வாகனங்களுக்கும் மனிதர்களுக்கும் மத்தியில் ஊர்ந்து சென்ற முல்லை மொட்டுகள். கால் முளைத்து கை வீசிச் செல்கிற மல்லிகைச் செண்டுகள். பிரௌன் டவுசரும், சந்தனக் கலர் சட்டைகளுமாய் முதுகில் புத்தகமும் நோட்டுகளும் கொண்ட பைக்கட்டுமாய் - கால்களில் ஷூவும் பூட்சுமாய் - பள்ளி செல்கிற சந்தோஷமாய் 'இப்பப் பூத்த' பூக்கள்.

பள்ளி செல்ல முடியாமல் கிழிந்த காக்கி டவுசருடன் இன்று தெருப் புழுதியில் விளையாடுகிற ராசு. நேற்று

வாத்தியாரிடம் அடிபட்டுக் கதறிய ராசு. சக மாணவ மாணவிகள் முன்னிலையில் அவமானப்பட்டுக் குன்றிப் போன மனசோடும், கண்ணீர் வழிகிற முகத்தோடும் நின்ற ராசு.

தாய்க்குத் தலைப் பிள்ளையாய்ப் பிறந்தவன். தன்னை அப்படியே உரித்துக்கொண்டு பிஞ்சு மாரிச்சாமியாக வந்து பிறந்திருக்கிற ராசு. ஆசை ஆசையாய் நெஞ்சில் தூக்கித் தூக்கிக் கொஞ்சி வளர்க்கப்பட்ட மகன். மனசின் பாசம் பூராவையும் குழைத்து அப்பியே கொஞ்சப்பட்ட மொட்டு.

இன்று நோட்டு வாங்கித்தர முடியாத அப்பனால்... வாத்தியாரிடம் அடிபட்டுக் கதறுகிறான்.

நினைக்க நினைக்க மனசின் புண் ரணமாகிறது.

அந்தச் சின்ன மலரின் கதறலைத் தடுத்து நிறுத்த முடியாத பலவீனத்தில் இவன். அதன் கண்ணீரைத் துடைக்க இயலாமல் இவனது விரல்கள். உழைக்கிற உழைப்பிலும் வடிக்கிற வியர்வையிலும் குறைவில்லையே! பிறகு ஏனிந்த இல்லாமை? இயலாமை?

சுற்றி வளைத்து நெரிக்கிற வாழ்க்கையே விடை புரியாத கேள்வியாக - மர்மமாக - விடுகதையாய்...

“மாரி, இந்தாப்பா டீ...”

டீக் கிளாசை தூக்கிப்பார்த்தான். ஆழ்ந்த பெரு மூச்சுக்குப் பிறகு குடித்தான்.

‘பணமிருக்கிற மகராசாமார்களுக்கு எதுவுமே பிரச்சனையாயிருக்குறதில்லே? ஏழைப்பட்ட மனுசங்களுக்கு

ஒத்தைப் புள்ளைக்கு நோட்டு வாங்குறதுகூட மலையைத் தூக்குற காரியமாயிருக்கு... ஹூம்...

உள்ளுக்குள் கனமாய் ஓடுகிற நினைவுகள் சகலத்தையும் தழுவி இழுத்துச் செல்கிற காற்றாக நினைவுகள்.

பிளசர்கார்களும், ஓட்டைச் சைக்கிள்களுமாய் முரண்பட்டுக் கிடக்கிற சாலைகள்... பங்களாவும் குடிசைகளுமாய்ப் பேதப்பட்டுக் கிடக்கிற தெருக்கள்... உல்லாசச் சிரிப்பும், இல்லாமை அழுகைகளுமாய் வித்தியாசப்பட்டுக் கிடக்கிற குடும்பங்கள்... அஜீரணமும், பசிக் கொடுமைகளுமாய் குழம்பிக் கிடக்கிற வயிறுகள்... மனித உயிர்கள்...

'ச்சே! ஒழைச்சுப் பொழைக்கிற ஏழைக்கு இது காலமில்லே.'

டீ குடித்த சுகத்தை அனுபவிக்க முடியாமல், மனசை மொய்த்துப் பிடுங்கிய நினைவுகள்.

'சாயங்காலம் கூலியைப் பங்கு போட்டு வாங்குனதும், முதல் வேலையாய் ராசுவுக்கு நோட்டு வாங்கிக் குடுத்திடணும். எந்தக் கடன்காரன் வந்தாலும் சரி, ஒரேயடியாய்ப் பல்லைக் கடிச்சிக்கிட வேண்டியதுதான்...'

ஞாபகத்தில் அழுத்தமாய்க் குறித்துக் கொண்டான். பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான். தோளில் கிடந்த துண்டைத் தலையில் வட்டக் கட்டாகக் கட்டிக் கொண்டான். வேலைத்தளத்திற்கு வந்தான்.

இங்கு வந்தவுடன் வேறொரு மாரிச்சாமியாக மாறிவிட்டான். எந்த நினைவுகளும் அண்ட முடியாத வேகத்தில் சுழல்கிற மாரிச்சாமியாகி விட்டான்.

வியர்வையில் கரைகிற சந்தோஷத்தில் உல்லாசமாய் விசிலடித்துக் கொள்கிற மனசு.

இப்போது வேலைத்தளத்தில் கால்வைக்க இடமில்லை. வியாபாரிகள் பைகளும், சாக்குப் பொட்டணங்களும், வாழைத் தார்களும், டின்களும் நெருக்கமாய்க் கிடந்தன. வியாபாரிகள் விலைவாசி நிலவரம் பற்றிக் கேலியும் கிண்டலுமாய் வார்த்தையாடிக் கொண்டிருந்தனர்.

"சம்முகம், ராபர்ட்டை எங்க?"

"கே.வீ. யார் கடையிலே தவிட்டு மூடை தூக்கப் போயிருக்கான்."

"சரி, ஆலங்குளம் முத்துமணி வண்டி வருது. எந்திரிங்க."

வியாபாரிகள் பரபரக்க, இவர்கள் புயலானார்கள். பஸ் வந்து நிற்கிற சில நிமிஷத்திற்குள் வாழைத் தார்களையும் கனத்த பைகளையும், பெரும் பொட்டணங்களையும் ஓடி ஓடித் தூக்கி பஸ்சுக்குள் அடைத்தான் மாரிச்சாமி. சம்முகம் டாப்பில் ஏற்ற வேண்டிய மூட்டைகளை ஏற்றினான்.

வியாபாரிகளிடம் அவசர அவசரமாகக் கூலிப் பணத்தை வாங்கிக் கொண்டான் "ரைட் போகலாம்." பஸ் போகிற வேகத்திலேயே இவன் இறங்கிக் கொண்டான்.

பனியனில்லாத மார்பில் வரி வரியாக வியர்வை ஊற்றுகள். நாசி நுனியில் தொங்கி நிற்கிற ஓர் உப்புத் துளி.

வேறு வேறு ஊர்களுக்கு மாறி மாறிச் செல்கிற பஸ்கள். ஒவ்வொரு பஸ்சுக்கும் மூடைகளையும், பொட்டணங்

களையும் ஓடிஓடிப் பரபரப்பாய் ஏற்றுகிற மின்னல் வேகச் சுழற்சியில் சக கூலிக்காரர்களுடன் மாரிச்சாமி.

நின்று மூச்சு வாங்கக்கூட நேரமில்லை. வழிந்தோடுகிற வியர்வையைத் துடைக்கக் கூட அவகாசமில்லை.

"டேய் எந்திரிங்கடா! தெங்காசி வண்டி வருது. ராபர்ட், நீ அந்த மாம்பழம் கூடைகளைத் தூக்கு."

இப்படிச் சீறுகிற உத்தரவுகள். பம்பரச் சுழற்சியாக மனிதச் செயல்பாடுகள். உழைப்புச் சூறாவளியாய் மாரிச்சாமி. மனசுக்குள் உற்சாகக் காற்று வியர்வைக் கசகசப்பில் சந்தோஷப்பட்டு, அவன் சிறகு கட்டிக் கொண்டு பறந்தான்.

மணி பத்து இருக்கும். மழை வெய்யில் உக்ரமாக முதுகை எரித்தது.

"சம்முகம், நா கஞ்சி குடிச்சுட்டு வாரேன்."

"ம்... காலைக் கஞ்சியா?"

"மதியக் கஞ்சியும் இதுதான்!"

"வெருசா வந்து சேரு."

"வர்ர கூலிகளை வாங்கி வை..."

"ஆகட்டும்."

"வந்து கிடக்கிற சாமான்களைப் பத்திரமா பாத்துக்க. நம்மகிட்ட வந்து சேர்ந்துட்டா, இது நம்ம சரக்குதான். நம்ம பொறுப்புதான். கடைக்காரர்களுக்கு நாமதான் பதில் சொல்லணும்."

"நாங்க பாத்துக்கிடுதோம்."

தலையில் கட்டியிருந்த துண்டை எடுத்து உதறினான். உடம்பின் வியர்வைக் கசிவை அழுந்தக் துடைத்துக் கொண்டான். பரபரப்பு அடங்கிய நரம்புகளில் நிதானம் வந்திருந்தது. அயற்சியோடும் தளர் நடையோடும் குடிசை நோக்கி நகர்ந்தான்.

பார்வதி இப்போதும் வீட்டில் இல்லை. கஞ்சியைக் குடித்துவிட்டு வெளியே வந்தான். பள்ளி செல்லாத ராசு, தெருவில் எங்காச்சும் விளையாடுகிறானா? பருந்துப் பார்வையாகப் பார்த்தான். பருந்தின் காலடியில் சிக்கிய கோழிக் குஞ்சாக மனசு பதறிப் பதைத்தது.

"தலையை அடகு வைச்சாச்சும் இன்னிக்கு நோட்டு வாங்கித் தாரேண்டா!"

கட்டாயமா வாங்கிரணும். நாளைக்காச்சும் அவனைப் பள்ளிக்கு அனுப்பிச்சாகணும். ஒத்தைப் புள்ளை. படிக்க ஆசைப்படுகிற பிள்ளை.

மீண்டும் வேலைத்தளம். இவனை அள்ளி விழுங்கிக் கொண்ட உழைப்புச் சூறாவளி. சேத்தூர், மேலாண் மறைநாடு. சிவகாசி, சாத்தூர் செல்கிற பஸ்கள். ஒவ்வொரு பஸ் வருகிற போதிலும் -

"டேய் எந்திரிங்கடா" என்ற உசுப்பல்கள்... பறக்கிற உத்தரவுகள். ஓடிச்சாடி செய்கிற வேலைகள். மாரிச்சாமியும் மூட்டைகளை தூக்கிக் கொண்டு ஏணியில் ஏறி, பஸ்ஸின் கூரைகளில் எறிகிறான்.

பஸ்ஸை தட்டி "ரைட், போகலாம்" என்று சத்தம் கொடுக்கிறான்.

மூச்சிரைப்போடு வந்து கல்லில் உட்கார்ந்தான். ஒரு பீடியைப் பற்றவைத்தான். கண்ணுக்குள் வந்து விழுகிற உப்புத் துளியைத் துடைத்துக் கொண்டான். நெற்றியைச் சுட்டுவிரலால் வழித்தான். வியர்வைப் பெருக்கு கறுப்பாக வழிந்தது.

மதியத்திற்கு மேலாகி விட்டது. சம்முகம் துண்டை உதறித் தோளில் போட்டான்.

"சாப்புடப் போறீயா?"

"ஆமாம்!"

"இந்தா... பார்வதிகிட்டே இந்தப் பத்து ரூவாயைக் குடுத்துரு. கஞ்சியைக் காச்சட்டும்."

"சரி."

"சாயங்காலம் கூலியைக் கணக்குப் பாக்கிறபோது, இந்த பத்து ரூவாயைக் கழிச்சிக்கிடுவோம் என்ன?"

"ம்."

மதிய வெய்யில் அவ்வளவாக இல்லை. மப்பும் மந்தாரமுமாய் வானத்தையும் சூரியனையும் மறைத்துக் கொண்ட சாரல் மேகம். மார்னிங்ஷோ முடிந்து சாலையை நிறைத்துச் செல்கிற மனிதர்கள். வெய்யில் இல்லா விட்டாலும் வேக்காடும் புழுக்கமுமாய் இறுக்கமாயிருந்தது. சாயங்காலம் மழை வந்தாலும் வருமோ...

சந்தையிலிருந்து தள்ளுவண்டியில் வந்த கத்தரிக்காய் மூட்டைகளையும், முட்டைகோஸ் மூட்டைகளையும் இறக்கிவிட்டு டீ குடித்து பசியைத் தணித்துக் கொண்டு பீடிப் புகையோடு கல்லில் உட்காரப் போனான்.

அப்போது... ஐவுளிப் பொட்டணத்தை இறக்கி வைத்துவிட்டு, உஸ்ஸென்று பெரிதாகப் பெருமூச்சுவிட்டார் முதலியார்.

"என்னப்பா மாரி..."

"வாரும் முதலியாரே, வாருமையா" கேலியாக வரவேற்றாலும் மாரிச்சாமிக்குள் பகீரென்றது. தீயெறும்பு கடித்தமாதிரி சுருக்கென்றது.

அவரிடம் பார்வதிக்கு ஒரு வாயில்சேலை எடுத்திருந்தான். கடன்தான். வாரத்துக்கு ஐந்துரூபாய் தருவதாக ஏற்பாடு. கொடுத்துக்கொண்டே வந்தான். இந்த ரெண்டு வாரமாகத் தர முடியவில்லை. இயலாமல் போய்விட்டது. தவணை தவறிப்போய் விட்டது.

மனசுக்குள் பூரான் ஊர்கிற மாதிரி ஒரு உணர்வு...

"என்ன மாரிச்சாமி. சௌக்கியந்தானா?"

"ஏதோ... இருக்கேன், ஒம்ம புண்ணியத்துலே!"

"எம் புண்ணியமா? கடவுள் புண்ணியம்னு சொல்லப்பா. துணி வித்துப் பொழைக்குற என்னாலே என்ன செய்ய முடியப் போகுதப்பா சரி, ரூவாயையெடு, பானஞ்சு ரூவா..."

"எதுக்கு, பானஞ்சு ரூவா?"

"தவறிப்போன தவணை ரெண்டுக்கு பத்து. இந்த வாரத்துக்கு அஞ்சு. சீக்கிரம் குடு. வசூலுக்குப் போகணும்."

"நாளைக்கு வாரும்... தாரேன்."

"என்னப்பா இந்தக் கொடுமை! அம்பது ரூவாய்க்கு சீலை வித்தா... ரெண்டு ரூவா கெடைக்கும். இதுக்கு எத்தனை தடவைதான் அலையுறது? நீயே ஞாயம் சொல்லப்பா..."

"சரி சரிய்யா... தப்பு எம்மேலேதான். கொஞ்சம் பொறுத்துக்கிடும் முதலியாரே..."

"என்னத்தைப் பொறுத்துக்கிட? ஒன்னைப்போல எத்தினி பேரு? எல்லாரும் இப்படியே சொன்னா... நா அலைஞ்சே சாக வேண்டியதுதான்."

ஏறியிருக்கிற அவரது சத்தத்திலும் உஷ்ணத்தைக் கவனித்தான். சுற்றிலும் நின்று பார்க்கிற மனிதக் கண்கள். 'என்ன விஷயம்' என்று நீள்கிற மனித மூக்குகள். அனாவசியமாய் வேடிக்கை பார்த்து நிர்ப்பந்தப்படுத்துகிற மனிதத் தலைகள். இவனுள் கொத்திப் பிடுங்குகிற அவமானம் உள் மனசின் மூச்சைத் திணறடிக்கிற ரகசிய அவஸ்தை. பணிவதைத் தவிர வேறு கதியில்லை.

"சரி சரி... சத்தம் போடாதீரும். வாங்கிட்டுப் போரும்."

கழுத்து நரம்பு விடைக்கக் கிசுகிசுத்தான்.

நோட்டு வாங்கித் தராததால் வாத்தியாரிடம் அடிபட்டு அழுது கரைந்த மகன் ராசு. வாங்கிய அடிக்காகவும், பட்ட அவமானத்திற்காகவும் குன்றிக் குமைந்த தனது ரத்தப் பொறப்பு...

உள்மனக் காட்சியில் குலைபதறிக் கொதிக்கிறது மாரிச்சாமிக்கு. அடி வயிற்றில் பகீர் உணர்வு.

"இந்தாரும் பத்து ரூவா..."

கடுகடுத்த அவரது முகம், சந்தோஷமாய் நிறம் மாறியது. குளிர்ந்த வார்த்தைகளில் சமாதானம் சொல்லிக் கொண்டே, சிட்டையில் வரவு வைத்துக் கொள்கிறார். இவனால் அவரது சொல் எதையும் வாங்கிக் கொள்ள முடியவில்லை.

திகிலோடு அலை பாய்கிற மனசு. மகனுக்கு ஏங்கித் தவிக்கிற மனசு. நோட்டு வாங்குறதுக்கு எப்படியும் இருபதுக்கு மேல் ரூபாய் தேவைப்படுமே!

தேனியிலிருந்து செங்கோட்டை செல்கிற பஸ்ஸில் ஏராளமாய்த் தக்காளிக்கூடைகள். மற்றவர்களுக்கு உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டு அவசரமாய் பஸ்ஸின் கூரையில் ஏறினான். ஒவ்வொரு கூடையாக இறக்கினான்.

கூடை, பிரேதக் கனமாகக் கனத்தது. கீழே இறக்கும்போது வலது பக்க மார்பு வலிக்கிறது. கீழிருந்து ஒருவன் அதைத் தாங்கிப் பிடிக்க, மற்றொருவன் அதை வாங்கிக் கீழே வைத்தான். இருபத்தேழு கூடைகளும் சில நிமிஷத்தில் இடம் மாறி, தள்ளுவண்டியில் சந்தை நோக்கி அனுப்பப்பட்டது.

நாளைக் காலையில் சில்லரைக் கடைக்காரர்கள் மூலம் கிராமங்களுக்குச் செல்லும்.

பொழுது அடைந்துவிட்டது. மேற்குத் தொடர்ச்சி மலையின் முதுகுகளின் பின்னால் சூரியன் பதுங்கிக்கொள்ள கனிந்த கங்குத் துண்டங்களாய் மேற்கு வான மேகச் சிதறல்கள்.

லோடுமேன்கள் ஏழு பேரும் சுற்றி வட்டமாய் உட்கார நடுவில் மொத்தப் பணத்தையும் அள்ளிப் போட்டான், மாரிச்சாமி. காலையிலிருநது இவர்கள் வடித்த வியர்வையும், உழைத்த உழைப்பும் சில்லறைகளாக - கசங்கிய நோட்டுகளாகக் கிடந்தன.

சம்முகம் எல்லாவற்றையும் நேராக்கி அடுக்கினான்.

சம்முகம் கூட்டிக் கழித்து வகுத்துக் கொண் டிருந்தான். கணக்கு, அவனிடம் கண்ணாமூச்சி காட்டிக் கொண்டிருந்தது. மற்றவர்கள் ஏதோ சலசலத்துக் கொண்டிருந்தனர். கேலியாக - கிண்டலாக - கோபமாய் - சீறிச் சினந்து - சிரித்து பேசிக் கொண்டிருந்தனர்.

மாரிச்சாமி எதிலும் பட்டுக் கொள்ளவில்லை. பார்வை எங்கோ கிடக்க மனசு எங்கோ அலைந்தது.

... நோட்டுக்களை மொத்தமாகக் கட்டிய பார்சலுடன் குடிசைக்கு வந்தான் மாரிச்சாமி. தெருப்புழுதி அப்பிய உடம்போடு வந்த ராசு, பார்சலைக் கண்டவுடன் குதூகலக் கூச்சலாய் - கும்மாளமாய் - உற்சாக வெள்ளமாய் ஓடி வருகிறான்.

திண்ணையில் வந்து உட்கார்ந்த தகப்பனின் மடியில் விழுந்து சரிகிறான் ராசு. அவனது பிஞ்சு முகத்தில் ததும்பி வழிகிற மகிழ்ச்சி. கொஞ்சலாய்ப் பேசிச்சிரித்து அப்பனுடன் விளையாடுகிற ஆனந்தக் குஷி...

அப்பனும் புள்ளையும் கொஞ்சிக் சிரிக்கிற சிரிப்பாணிகளைப் பார்த்துக் பூரித்துப் போய் - பெருமிதமாய் நிற்கிறாள் பார்வதி. பார்வதியின் முகத்தில் இப்பப் பூத்த

பூவின் புத்தம் பது மலர்ச்சி. அவள் முகமே எப்போதுமில்லாத அழகில் - வார்த்தைக்குள் சிக்காத - பேரழகில் ஜொலிக்கிறது.

பார்க்கப் பார்க்க இவனுள் பரவசம். மூணுகிளாஸில் கூடக் கிடைக்காத மனசின் உணர்ச்சிப் போதை.

சம்முகம் இன்னும் வகுத்துக் கொண்டிருக்கிறான். வகுத்தலுக்குள் சிக்காமல் மீதமாய் நின்ற ஐந்து ரூபாய் நாற்பது காசு உண்டியலில் போடப்பட்டது. தலைக்கு இருபத்தேழு ரூபாய் வருமானம்.

வாங்கியிருந்த இருபது போக, இவன் கையில் ஏழு ரூபாய் கிடைத்தது. உள்ளங் கையில் கிடந்த அந்தப் பணத்தை வெறித்தான்.

ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல் ஓடி ஓடி வடித்த வியர்வைக்கான கூலிப் பணம், மகனின் கண்ணீரைத் துடைக்க முடியாத பணம்...

"தலையை அடகு வைச்சாச்சும் இன்னிக்கு நோட்டு வாங்கித் தாரேண்டா."

மகனிடம் நேற்றுச் செய்து கொடுத்த சத்தியம். அந்தச் சத்தியத்தை எதை வைத்துக் காப்பாற்றுவது? பெற்ற பிள்ளையிடம் தனது மனசின் பரிவை - பாச நிஜத்தை - எப்படி நிரூபிப்பது? மகனைப் படிக்க வைக்க ஆசைப்படுகிற பொறுப்புள்ள அப்பனாக அவன் பார்வையில் தோன்றுவது எப்படி? நோட்டு இல்லாமல் அவன் நாளை எப்படிப் பள்ளி செல்வான்? நோட்டு இல்லாமல் வெறும் கையோடு அந்தப் பிஞ்சு முகத்தை எந்த மூஞ்சியோடு எப்படிப் போய் முழிப்பது?

சுற்றி வளைத்து மனசை இறுக்குகிற கேள்விகள். அவனையே அவனுக்குப் பொய்யாக்கிக் காட்டுகிற கேள்விகள்.

உழைப்பில் குறாவளியான அவன், பிரச்சனைச் சுறாவளியின் முன் வெறும் தூசிதான் என்று தாட்சண்ய மில்லாமல் முகத்தில் அறைந்து உணர்த்துகிற கேள்விகள். வாழ்க்கையின் அசலான முகத்துடன் குரூரமாக நிற்கிற கேள்விகள்.

பங்களாவும் குடிசைகளுமாய்ப் பேதப்பட்டுக் கிடக்கும் தெருக்கள். உல்லாசச் சிரிப்பும் இல்லாமை அழுகைகளுமாய் வித்யாசப்பட்டுக் கிடக்கும் குடும்பங்கள்...

கணவனாக - தகப்பனாக - மனுசனுக்குரிய கடமை களைச் செய்ய முடிகிற மனுசனாக இருக்க முடியவில்லை. ஏன் இப்படி என்றும் அவனுக்குப் புரியவில்லை. அவனுக்கு வாழ்க்கையே புரியாத புதிராக - மர்மாக... விடுகதையாய்...

எது எதுவோ அவனை மருட்டுகிறது.

ராசு மூஞ்சியை எந்த மூஞ்சியோடு போய்ப் பார்ப்பது?

வழி மறித்து பூதமாய் நின்ற பிரச்னைக்கு அவனிடம் சொல்லப் பதில் இல்லை; தைர்யமில்லை; தெம்பு இல்லை; அவன் அவனாக இல்லாமல் பலவீனமான தூசியாக நடந்தான், சாராயம் விற்கிற இடத்தை நோக்கி! அவன் அப்போதும் கூட இயலாமையின் வேதனையோடும், பழக்க தோஷத்தினாலும் "இந்தச் சனியன் பிடிச்ச கழுதையை விட்டுத் தொலைக்க முடியலியே" என்று முணுமுணுத்துக் கொண்டான்.

5

மறுமுகம்

கிணற்றில் குளித்துவிட்டு, பிழிந்த ஈரத்துணிகளைத் தோளில் போட்டுக் கொண்டு கிளம்பிய போது மனசு விசிலடித்தது. குளிக்கிறதே... ஒரு சுகம்தான்.

நசநசப்பு, அழுக்கு, அலுப்பு, இச்சிலாத்தி எல்லா வற்றையும் கழுவித் துடைத்துச் சுத்தமாக்கி உடம்பையும், மனசையும் லேசாக்கிவிடுகிறது.

அதிலும் பம்ப்ஷெட் மோட்டார்லே குளிப்பது இருக்கிறதே... அடேயப்பா, அது, தனீ... சுகம் தான். தொட்டிக்குள்ளே தண்ணீர் நுரைநுரையாகப் பொங்கும். வெள்ளிக் கற்றையாக அழுத்தமாகத் தடதடவென்று சத்தத்தோடு பாய்கிற தண்ணீருக்குள் தலையைக் கொடுத்தால்... எண்ணெய்ச் சிக்கெல்லாம் பறந்து, தலையே பஞ்சாகிவிடும். உடம்புக்கெல்லாம் ஒத்தடம் கொடுத்த மாதிரி. முதுகுவலி, முழங்கால்வலியெல்லாம் ஓடியே போய்விடும்! புடைத்தெடுத்த தான்யம் மாதிரி உடம்பு மனசு எல்லாம் 'ஜில்ல்' லென்றாகிவிடும்.

குளிப்பின் முத்தாய்ப்பாகக் குழாய்த் தண்ணீரைக் கையால் பிடித்து, வாயில் அடைத்துக் குதப்பிக்கொண்டு, ஈரத்தலையை இடது கையால் கோதி, ஒரு தட்டுத்

தட்டிவிட்டு, குதப்பிய தண்ணீரைக் கொப்புளித்து விட்டால்... அப்பாடா...

நெஞ்சே நிறைந்துபோன மாதிரி, ஒரு ததும்பல். பம்ப்ஷெட்டை விட்டுப் புஞ்சைப் பொழியில் நடந்த பெரியசாமிக்கு, உலகத்தையே ஜெயித்து முடித்து விட்ட திருப்தி, சந்தோஷம்.

கழுத்தைத் திருப்பிப் பொழுதுக் காலைப் பார்த்தான். மணி ஒன்பது இருக்குமா? இளங்காலைச் சூரியன் உஷ்ணப் புழுதியைச் சிறுபிள்ளைத் தனமாக இறைத்துக் கொண்டிருந்தது.

வலையபட்டி 2.15 வண்டிக்கு ராஜபாளையம் போகணும். வத்தல் மார்க்கட்லே நிலவரத்தை விசாரிச்சிட்டு... அப்படியே எழுத்தாளர் சங்க மாவட்டக் குழுக் கூட்டத்தையும் நடத்திடணும். மாவட்டக் குழு உறுப்பினர் களுக்கெல்லாம் தபால் போட்டிருக்கு. எத்தனை பேரு வந்து சேர்ராகளோ...? கூட்டம் முடிக்க எப்படியும் ராத்திரி பத்துக்கு மேலே ஆயிடும். அதுக்குப் பெறகு பஸ் இல்லை. ராத் தங்கணும். தூங்க முடியாது... இன்னிக்கு 'ராமுழிப்பு' தான்.

பொழிப் புல்லில் கால் வழுக்கியது. தோட்டத்திற்குள் அலம்பினான். நல்ல வேளை, பருத்திச் செடியில் மிதிக்க வில்லை. சிவப்பாக - மஞ்சளாக பூக்கள், சின்னச் சின்னக் காய்கள். குளிர்ந்த பச்சையில், பருத்திச் செடிகள் அழகு பூத்து நின்றன.

கடாய் ஞாபகத்துக்கு வந்தது. வாய்க்காலுக்குள் இறங்கினான். வரிசையாக நின்ற அகத்தியில் கொழை ஒடித்தான். இவ்வளவு உயர்ந்த அகத்தியில் கொழை

ஒடிப்பதே, தனிக்கலை. ராமன்வில்லை வளைத்ததைப் போல வளைத்து ஒடித்துவிடக் கூடாது.

எட்டி, அகத்தியின் பாதியில் கைவைத்து மெதுவாக வளைத்து, இடது கையால் கொப்பை எட்டிப் பிடித்து... 'கொடுக், கொடுக்' கென்று ஒடித்துவிட்டு, விட்டுவிட வேண்டும்...

வீட்டுக்கு வருகிற வழியில்... களம். நிறைய இடம் சும்மா கிடந்தது. மிளகாய் வற்றல் ஓய்ந்த காலம். சின்னச் சின்ன சதுரமாகக் கொஞ்சம் வற்றல் காய்ந்து கொண் டிருந்தது. ரத்தத்தை அள்ளித் தரையில் பூசி மெழுகிய மாதிரி. பிற்கூர் வற்றல். மூக்குத்தி மாதிரி பொடிசு பொடிசாக...

வீட்டுத் திண்ணையில் கொழையைப் போட்டான். கொடியில் ஈரத் துணிகளை உதறிக் காயப் போட்டான். நேற்றுக் காய்ந்த கைலி, பனியனை எடுக்க வீட்டுக்குள் நுழைந்தான். மிளகாய் வற்றலின் காந்தலும், கமறலும் நாசியைத் தாக்கியது. உறைப்பான அனல், உடலை அப்பியது. செங்கலை நொறுக்கிக் குவித்தமாதிரி... அம்பாரமாய் வற்றல்.

கைலி உடுத்திக் கொண்டான். பனியனை மாட்டிக் கொண்டான். தலையில் தேங்காய் எண்ணெயை வைத்துக் கொண்டே அடுப்பங்கரையைப் பார்த்தான்.

"ஏமா... சோறு வைம்மா..."

வேலைகளோடு பூம்மா புருஷனை நிமிர்ந்து பார்த்தாள். பார்வையில் ஒரு சின்னக்கேள்வி.

"சாப்பிடப் பத்து மணிக்கு மேலாகுமே. இன்னிக்கு என்ன அவசரம்? எங்கயும் ஊருக்கா?"

"ஆமா... ராஜபாளையம் போகணும். வத்தல் மார்க்கட் விசாரிச்சுட்டு வரணும்." "இதற்கு மெனக்கெட்டா போகணும்? போய் வந்தவுககிட்டே கேட்டுக்கக்கூடாது? அங்க ஏதாச்சும் 'கூட்டம், கீட்டம்' இருக்கா?"

"கூட்டம் இருக்கு. அது ராத்திரிக்குதான். அது முக்கியமில்லே. மார்க்கெட்டுதான் முக்யம்."

பொய்... பொய்... மனசை உறுத்தாத பொய்...

அவள் முகத்தில் வியர்வையின் மினுமினுப்பு; கண்களில் ஒரு சின்னத்தீ. உதடு இறுகிக் கொள்கிறது. பார்க்கக்கூட சகிக்காதவளைப்போல, அந்தப் பக்கமாய்த் திரும்பிக் கொண்டாள்.

"எதுக்கு இப்படிப் பொய் சொல்லணும்? கடையிலே இருந்து ஏவாரத்தைக் கவனிக்கிறதை விட்டுட்டு வீட்டு ஆம்பளை இப்புடிக் 'கூட்டம், கூட்டம்'னு அலைஞ்சா... வீடு விளங்கவா செய்யும்? 'வேலைஜோலி பாக்கணும், சம்பாத்தியம் பண்ணணும்' னு ஊர்லே இருக்குற ஆம்பளைக, ஓடியாடி அலையுறாக. நீங்க என்னடான்னா, 'கூட்டம் எங்க இருக்கு'ன்னு குறியா திரியுறீக. மூணு புள்ளைக்குத் தகப்பன் வீடுங்கிற அக்கறை இருக்கா? நாளைக்கு நாலு காசு வேணும்னு நெனைப்பு இருக்கா? உங்களாலே நாங்களும் நாசமாகி, கேவலப்படத்தான் செய்யணும்."

அடுப்பில் கனன்ற நெருப்புத் துண்டுகளை நாவால் அள்ளி இறைக்கிறாள். ஒவ்வொரு துண்டும் நெஞ்சுக்குள் விழுந்து, சுட்டு... மனசு துடியாய்த் துடிச்சு... ஆனாலும் சமாளிச்சு-

“நீ எதுக்குக் கேவலப்படணும்? கேவலப்டுற மாதிரி இப்ப என்ன ஆயிப்போச்சு?”

“இன்னும் என்ன ஆகணும்? பேங்க்லே வைச்ச நகை மூணு மாசமாத் திருப்பமுடியாகக் கிடக்கு. வெறுங் கழுத்தோட மூளியா நிக்கேன். நல்லது பொல்லதுன்னு ஒரு வீட்டுக்குப் போனா... நகையுமில்லாம, நட்டுமில்லாம... முண்டச்சி மாதிரித்தானே, வெறுமனையா நிக்க வேண்டியிருக்கு. அப்போ... கேவலமில்லாம... பெருமையாவா இருக்கும்?”

குமுறி வெடிக்கிற எரிமலையின் தீக்குழம்பு அவனைச் சுற்றி தழுவி ஓடுகிறது. சோற்று வட்டிலின் முன் உட்கார்ந் திருந்தான். வாய்க்குள் வைத்த முதல் கவளம் தொண்டைக் குள் நிற்கிறது. தக்காளிக் குழம்பு காரமாக இருக்கிறது. கருகிக் கிடந்த வற்றல் துண்டுகளையும் கருவேப்பிலைகளையும் பொறுக்குகிறான். சாப்பிட மனசில்லை. நெஞ்சுக்குள் அடிபடுகிற வேதனை. பூவம்மாவின் ஒவ்வொரு சொல்லும் முள்ளாக் குத்தி அவனைக் கிழிக்கின்றன. அவனது தன்மான உணர்வைக் காலில் போட்டு மிதித்துத் துவைத்து, நசுக்கி...

பூவம்மாளை நிமிர்ந்து பார்த்தான். அடிபட்ட பாம்பின் சீற்றம் பார்வையில். சண்டாளமாய்ப் பொங்கி வருகிற கோபம். ‘சீ... வாயை மூடு’ என்று அலறத் துடிக்கிற மனசு. பல்லைக் கடித்தான்.

‘ம்ஹூம்.... கோபப்பட இது நேரமில்லை. சண்டை போட்டுடக் கூடாது. நமக்குத்தான் அவமானம்.’

‘வார்த்தைகளைச் சிதறிவிடாதேடா... சமாளி... புத்தியைப் பயன்படுத்து. மனசே, நிதானமாய்ச் சிந்தி... சாந்தமாக யோசி... நாவுக்கு லகான் போடு...’

பிசைந்த சோற்றை அளைந்து கொண்டே வார்த்தைகளைத் தேடினான்.

“வத்தலைப் போட்டுத்தானே நகையைத் திருப்பணும்? அதுக்குத்தான் மார்க்கட்.”

“நகையைத் திருப்பிடவா? திருப்புனாத்தான்... அடுத்த மாசமே அடகுக்குப் போயிடும்லே? இந்த நகையை வச்சுத் தானே, உங்களுக்குப் பிழைப்பு? இதை விட்டாத்தான்... உங்க ஏவாரத்துக்கு வேற புகல் இல்லியே. ஒவ்வொரு ஆம்பளைகளைப்போல ஆயிரம் ரெண்டாயிரம் பெரட்டி வரவா முடியும்? உங்களுக்குப் பேரு புகழ்? இருந்து என்ன செய்ய? உங்களை ஒரு சல்லிக்காசுக்காச்சும் யாராச்சும் நம்புறாகளா?”

சுளீரிடுகிற சாட்டையடிகள். இரக்கமில்லாத பருந்தின் கொத்தல், பசி மிகுந்த கொத்தல், பருந்தின் காலுக்கடியில் கொத்துப்பட்டு ‘வீயா வீயா’வென்று வீறிடுகிற கோழிக் குஞ்சாக மனசு நொந்துபோன குரலில்,

“ஏன் இப்படிச் பேசுற பூவம்மா?”

“வேற எப்புடிப் பேசுறது? ஒண்ணுந்தெரியாத பயக எல்லாம் அததுக்கு ஆளைப்பிடிச்சு காலைப்பிடிச்சு ‘அந்த லோனு’ ‘இந்த லோனு’ன்னு வாங்குறாக. தொழில் பண்றாக. சம்பாத்தியம் பண்றாக. நீங்க காலமெல்லாம் கூட்டம் கூட்டம்னு ராத்திரியும் பகலுமா ஊர் வழியா அலையுறீங்க. ‘அவுகளைத் தெரியும், இவுகளைத் தெரியும்’னு பெருமையடிக்கிறீக. பெரிய பெரிய ஆளுக எல்லாம் தெரிஞ்சு என்ன செய்ய? உங்களாலே ஒரு லோனு வாங்க முடியுதா? பெருமைக்கு ஓடியலைஞ்சு... ஒரு பைசாவுக்குப் பிரயோசன மிருக்குதா?”

கேள்விகள்... கேள்விகள். ஆவேசமாய்ச் சீறி வந்து அடிமனசைக் குத்துகிற கத்திக் கேள்விகள், முடிச்சு அவிழ்க்க முடியாத முரட்டுக் கேள்விகள், வாழ்ந்து வருகிற புனிதமான பொது வாழ்க்கையின் சட்டையைப் பிடித்துக் குலுக்குகிற கேள்விகள். 'உனக்கு என்னதான் அர்த்தம்?' என்று ஏளனமாய் எள்ளிக் கேட்கிற கேள்விகள்...

வெக்கையான யதார்த்தத்தை உணர்த்துகிற அந்தக் கேள்விகளின் பிடிக்குள் சிக்கி, ஊமையாகித் திணறுகிற மனசு...

ஊமையாக்கித் திணறடிக்கிற போதெல்லாம் கோபம்தானே, கவசம்? பெரியசாமிக்கும் மூர்த்தண்யமாய்ப் பொத்துக் கொண்டு வந்தது.

சோறு பிசைந்த கையைக் கோபமாய் உதறினான். முகமெல்லாம் கோணலாகி, திறுகிப் போய் "ச்சேய்!"... என்று கத்தினான்.

உதறிய கையாலேயே சோற்று வட்டிலை ஓங்கி ஒரு தட்டுத் தட்டினான். தரையில் உரசிக் கொண்டே போய்... சுவரில் மோதி, வட்டில் குடை சாய்ந்தது. எரித்துவிடுகிற ரௌத்ரமாய் மனைவியைப் பார்த்தான்.

"நாறவாய்லே குடியிருந்தாலும், நச்சரிப்புலே குடியிருக்க முடியாது... சோத்தை நீயே தின்னு."

வட்டில் உருண்ட வேகத்தில், அவள் அதிர்ந்து போனாள். அவள் முகத்தில் அறைவிழுந்த அவமான உணர்ச்சி, கண்களின் அடியில் திரண்டு நின்ற நீர்த்துளிகள்.

பொறி கலங்கிப்போய் நின்ற பூவம்மாவைப் பார்த்தவுடன், இவனுள் ஒரு பரிதாப உணர்வு ஈரமாய் எழுந்தது. வெட்டுப்பட்ட சிறகை அடித்துக் கொண்டு வேதனையில் துடிக்கிற புறாவாக... பூவம்மா.

'ஊ ஹூம்... என்னை வறுத்தெடுத்த இவளையும்... கொஞ்சம் அலைக்கழிக்கத்தான் வைக்கணும்...'

ஈரமனசு இறுகிக் கொள்ள, விறைப்போடு எழுந்தான். கையைக் கழுவினான். வாயைத் துடைத்தான். செம்புத் தண்ணீரை 'மடக், மடக்'கென வயிறு நிரம்பக் குடித்தான்.

கொத்திப் பிடுங்கிய அவளைப் பழிவாங்கிவிட்ட திருப்தியோடும், ஒரு வெறியோடும் வெளியேறிய அவன் முதுகுக்குப் பின்னால்... பூம்மாவின் விசும்பல்...

நீர்த்துளிகள் சிதறியிருக்குமோ...

டீ குடிக்க மனசுமில்லை. பேப்பர் பார்க்கிற ஆர்வமுமில்லை. தனிமை தான் வேணும். மனுஷவாடை யில்லாத அத்துவானத் தனிமை. மனசெல்லாம் ஒரே நினைவு. கொப்பான நினைவு. வேக்காடு தாங்காமல் தளதளக்கிற நினைவு.

சே! எப்படிப் பேசிட்டாள்? எவ்வளவு அலட்சியமாய் எடுத்தெறிஞ்சு பேசிட்டாள்!

வழியிலே கிடக்குற அழுக்குத்துணியைக் காலாலே ஒதுக்குற மாதிரி, எவ்வளவு எகத்தாளமாய்த் தூக்கி யெறிஞ்சுட்டாளே... நா என்ன அழுக்குத் துணியா? அம்புட்டுத் தாழ்வா, நான்?

நா தாலி கட்டுனவன். ஊரறிய நாடறிய மாலை போட்டவன், புருஷன். அட, புருஷனை கடவுளா நெனைச்சு வணங்க வேண்டாம். ஒரு மனுஷனா மதிக்க வேண்டாமா? எனக்கும் மனசு உண்டு, உணர்ச்சிகள் உண்டு, எனக்குன்னு ஒரு சுபாவம் உண்டுன்னு நெனைக்க வேண்டாமா? மதிக்க வேண்டாமா?

அவ்வளவு அலட்சியமா? அந்தளவுக்கு நா என்ன தூசா, துரும்பா?

பெரியசாமிக்கு மனசெல்லாம் வேக்காடு. பற்றியெரிகிற தீக்காடு. அவன்பாட்டுக்கு நடந்தான். பால் சொசைட்டி கட்டடத் தாழ்வாரம். சிமெண்ட் தாழ்வாரம். யாருமில்லை.

பேசாமல் அங்கு வந்து விழுந்தான். ஒரு பீடியைப் பற்ற வைத்தான். காந்தலான புகை, வெந்த மனதைத் தடவி நீவிவிட்டது.

பூவம்மா ஏன் இப்படிப் பேசுறா? முள்முள்ளாக் குத்திக் கிழிச்சிட்டாளே, மனசை நார்நாரா கிழிச்சு, நச்செடுத்துட்டாளே...

நா... மத்த ஆம்பளைகளைப்போல இல்லைதான்... சாராயம் குடிக்கமாட்டேன். கஞ்சா அடிக்கமாட்டேன்... லாட்டரி சீட்டு வாங்கமாட்டேன்...

எவன் கழுத்தை அறுத்தாவது பணம் சம்பாதிப்பதே வாழ்க்கை என்று நினைக்கமாட்டேன். கூடப் பொறந்தவன் குடியைக் கெடுத்தாவது, சொத்து சேர்க்கணும்னு பேயா அலையமாட்டேன்...

ஒழுங்கா... அடக்கமா நேர்மையா ஏவாரம் செய்வேன். லாபம் ரொம்பவா, குறையா, அதைப்பத்திக் கவலைப்பட மாட்டேன். நியாயமா நடக்கணும்னு நினைப்பேன்...

பொதுவாழ்க்கையிலே ஈடுபடுவேன். கூட்டங்களுக்குப் போவேன். பேசுவேன். மறியலுக்குப் போவேன். ஜெயிலுக்குப் போவேன்...

அட.... இதெல்லாம் புதுசு இல்லியே... பூவம்மாளுக்கே தெரிஞ்சதுதானே! இது தெரிஞ்சுதானே வாழ்க்கைப் பட்டாள்? இன்னும் சொல்லப் போனா... என்னோட இந்த சுபாவத்தை நெனைச்சுதானே, பிரியப்பட்டு வாழ்க்கைப் பட்டாள்?

அப்புறம் ஏன் குத்திக் காட்டணும்... இழிவுடுத்திப் பேசணும்? மத்த ஆம்பளைங்களைவிட மட்டம், சாமர்த்திய மில்லாதவன்னு ப்ரூவ் பண்ணிக் காட்டுறதுலே... அவளுக்கு எப்புட்டுச் சந்தோஷம்! குரூரமான சந்தோசம்- குஞ்சைக் கொத்துகிற பருந்தின் சந்தோஷம்.

நா என்ன ஏவாரம் செய்றதுலே அக்கறையில்லாமலா இருக்கேன்? மூலதனம் பத்தலியே. கைக்கு எட்டுனா வாய்க்கு எட்டமாட்டேங்குது. குடுத்த கடன் வசூலாக மாட்டேங்குது... நமக்குக் கடன் கிடைக்க மாட்டேங்குது...

ராஜபாளையம் பேங்க்லே வேலை பார்க்கிற ராஜசேகர், நல்ல நண்பர்தான். எம்மேலே ரொம்பப் பிரியமாயிருப்பார். அவருகிட்டே நெலைமையைச் சொன்னேன்... பேங்க்லே கடனுக்கு ஏற்பாடு பண்ணுங்களேன்னு கெஞ்சிச் சொன்னேன், 'சரி'ன்னாரு.

'ஜனவரி'ன்னாரு... 'ஏப்ரல்லே பாப்போம்'னாரு. 'செப்டம்பர்லே முடிப்போம்'னாரு. 'டிசம்பர்'லே வாங்கிருவோம்'னாரு. 'மார்ச்லே கண்டிப்பா'ன்னாரு...

சரி... சிபாரிசு செய்ய பயப்படுறாரோன்னு உணர்ந்துகிட்டேன். விட்டுட்டேன்.

அப்படியேதான்... விருதுநகர் பேங்க்லே... சாத்தூர் பேங்க்லே...

வருஷம் மூணு ஓடிப்போயிடுச்சு... மத்தவங்க நிலையே வேற. உள்ளூர் பணக்காரங்களைக் காக்கா பிடிச்சு, சோப்பு போட்டு, 'கெட்டிக்காரத்தனமாய்' பி.டி.ஓவுக்கு லஞ்சம் தந்து, கிராம சேவக்குக்கு லஞ்சம் தந்து, மான்யத்தையும் வாங்கி, பேங்க்லே லோனையும் வாங்கிடுறாங்க...

இதைச் 'சாமர்த்தியம்'னு பெருமையா சொல்றா, பூவம்மா. இதை நா இழிவுன்னு நெனச்சு வெறுக்கிறேன். பொது வாழ்க்கையிலே இருக்கிற என்னாலே இந்தத் தரத்துக்கு இறங்க முடியாது. என்னை நானே இழிவுபடுத்திக்க முடியாது...

இந்த மாதிரி சலுகைகள் கிடைக்கும்ங்கிற ஆசையிலா பொதுவாழ்க்கைக்கு வந்தேன்? கிடைக்லேன்னவுடனே... விலகிக்க!

இல்லியே1 எனக்கும் சமுதாயத்துக்குமுள்ள உறவைப் பத்தி யோசிச்சதுலே... சமுதாயக் கடமை எதுன்னு புரிஞ்சதாலேதானே... பொது வாழ்க்கைக்கு வந்தேன்...!

அதுலே... இந்த மாதிரி சின்னச் சின்ன இழப்புகளும், கசப்புகளும் வரத்தான் செய்யும். அதைத் தாங்கித்தான்

ஆகணும். இந்த இழப்புகளுக்காக வெல்லாம் பயந்து, விசனப்பட்டு, வழிமாறி, ஊழல்பண்ணுனா... பொது வாழ்க்கையிலே தூய்மை, நேர்மை மனச் சாட்சிங்கிற தெல்லாம் அடிபட்டுப் போகுமே!

இதெல்லாம் பூவம்மாளுக்கு ஏன் புரிய மாட்டேங்குது? எதுக்காக இப்படி கொத்திப்பிடுங்குறா? நிம்மதியைப் பிச்சிப் பிடுங்கி எறியுறா. என்னோட உணர்ச்சி களை ஈவு இரக்கமில்லாம, தயவு தாட்சண்யமில்லாம காயப்படுத்துறாளே...

பேச ஆரம்பிச்சுட்டா... ஒவ்வொரு சொல்லும் தீயா வருதே... சுட்டுப் பொசுக்குதே... அடிமனசு வரைக்கும் சூடு இறங்கி... தகிக்குதே...

பூவம்மா..! பேரைப்பாரு, பூவம்மாளாம்! தீயம்மான்னு வைச்சிருக்கணும்... இல்லேன்னா... முள்ளம்மான்னு வைச்சிருக்கணும் அதான் பொருத்தம்!

நிழல் சுருங்கி, வெயில் காலைத் தொட்டது. மணி பன்னிரண்டு இருக்குமா? மேகங்கள் பஞ்சுப் பொதிகளாய் மிதந்தன. சூரியஒளி பட்டு உருக்கிய வெள்ளியாகப் பளபளத்தது...

பெரியசாமி காலைச்சுருக்கி, நிழலுக்குள் ஒடுங்கினான். மீண்டும் பீடியைப் பற்றவைத்துக் கொண்டான்.

“இந்தாப்பா பெரியசாமி, போஸ்ட்மேன் குடுத்து விட்டாரு.”

நான்கு தபால்கள் வந்திருந்தன. பிரித்தான். சென்னை யிலிருந்து கூட்டத்துக்கு ஒப்புதல் கேட்டு ஒரு கடிதம். 15ஆம்

தேதி கூட்டத்தை உறுதிசெய்து பத்தமடையிலேயிருந்து ஒரு கடிதம். ஏதோ ஒரு புஸ்தகம் பற்றிய விவரம் கேட்டு ஒரு கடிதம். பாராட்டுக் கடிதம் மற்றொன்று.

வெக்கையான நேரத்தில் உப்பாங்காற்று வீசிய மாதிரி, மனசுக்குள் ஒரு சுகானுபவம், பெருமித உணர்வில் மனசு ததும்பி விசிலடித்தது. தலையில் ஒரு கிரீடம் இருப்பதாக ஒரு உணர்வு. சிகரத்தில் சிம்மாசனத்தில் உட்கார்ந்து நாலா திசையும் சுற்றிப்பார்ப்பது போன்ற பிரமை... ஒரு சின்ன மேகம் தன் மீது மோதி விலகிச் செல்வதாக ஒரு மயக்கம்.

நாட்லே இவ்வளவு செல்வாக்கும், பேரு புகழ் இந்த ஊர்லே இருக்குற எந்த ஆம்பளைக்கும் இல்லாத உயர்ந்த மதிப்பு. மரியாதை... ஆனா, வீட்லே?...

பெரியசாமிக்குள் வேதனை கலந்த ஒரு பரிகாசச் சிரிப்பு எழுந்தது. பூம்மாளின் அறியாமையையும், ஆத்திரத்தையும் நினைக்க நினைக்க எரிச்சலாக இருந்தது. சகித்துக் கொள்ள முடியாத எரிச்சலாக இருந்தது.

இவளுக்கு எப்படியாச்சும் புத்தி புகட்டணும். லேசா உணர்த்தணும். நா மனுஷன்தான். புருஷன்தான். என்னை வச்சுத்தான் உனக்கு மதிப்பு மரியாதை எல்லாம். நா இல்லேன்னா... உனக்கு இழிவுதான்... இழப்புதான். இட்டு நிரப்ப முடியாத இழப்புதான்...

அப்படிங்கறதை உணர வைக்கணும். என்ன செய்யலாம்? பேசாம பத்து நாளைக்கு எங்கயாச்சும் போயிட்டா, என்ன! மதுரை திருச்சின்னு பத்து நாளைக்கு சுத்தப் போயிட்டா, என்ன?

தவிக்கட்டுமே! 'என்ன ஆச்சோ ஏது ஆச்சோ'ன்னு கிடந்து துடிக்கட்டுமே... 'என்ன கொடுமை செஞ்சு, புருஷனை விரட்டினாளோ'ன்னு ஊர்லே நாலு சுடு சொல் கேட் கட்டுமே... அது தாங்க முடியாம அவளும் துடிக்கட்டுமே...

அப்ப என்னோட அருமை தெரியுமில்லே? 'ஐயோ தப்பு செய்துட்டோமே... கொத்தி பிடுங்கிட்டோமே!'ன்னு மனசுக்குள்ளே மருகி மருகி அழுவாள், இல்லே அழுகட்டும்... கதறட்டும்... துடிக்கட்டும்...

அப்பத்தான் புத்தி வரும்... அடிக்கக் கூடாது, திட்டக் கூடாது... அதெல்லாம் மனுசத்தனமில்லே! இப்படித்தான் செய்யணும்... இதுதான் சரியான தந்திரம்...

பெரியசாமி இப்போது பெருமூச்சை ஆசுவாசமாக வெளிவிட்டான். முகத்தில் ஒரு தெளிச்சி, ஒரு தெளிவு பெற்ற மலர்ச்சி...

சந்தோஷமாய் ஒரு பீடியைப் பற்ற வைத்தான்.

வயிற்றில் பசி கிள்ளியது. சாப்பிடாத சோர்வு, உடம்பெல்லாம் அயர்ச்சி கண்டது.

வலையப்பட்டி 2.15 வண்டிக்குப் போகணுமே... அவசரமாகப் புறப்பட்டான். கண்களுக்குள் ஒரு கிறுகிறுப்பு. தள்ளாட வைத்த தளர்ச்சி. காலையிலேயிருந்து ஒன்றும் சாப்பிடாத அயர்வு.

நேராக வீட்டுக்குப் போனான். வீடு பூட்டிக் கிடந்தது.

பூவம்மா எங்க போயிட்டா? கோவிச்சுக்கிட்டு போயிட்டாளா? தெற்குத் தெருவுல இருக்குற அவுக அம்மா

வீட்டுல போய் உக்காந்துட்டாளா? புள்ளைகளையும் கூட்டிட்டுப் போய்ட்டாளா?

நினைக்கும்போதே பகீரென்றது. பூட்டிய வீட்டை வேதனையோடு பார்த்தான். அவமானமாக இருந்தது. பக்கத்து வீட்டார்கள் எல்லாம் பரிதாபமாய்ப் பார்ப்பதாகத் தோன்றியது. குன்றிக் குறுகினான்.

மனசுக்குள் அறுபடுகிற வேதனை... வலி.

தெற்குத் தெருவுக்கு ஓடினான். வீட்டை நெருங்கினான். வீட்டுக்குள் பூவம்மாவின் சத்தம்.

அவளது அய்யாவுடன் சண்டை போடுகிற மாதிரி சத்தம்.

என்ன சண்டை? என்னத்துக்காகச் சத்தம்?

மனசுக்குள் குறுகுறுப்பு. சம்பந்தி வீட்டு ரகசியத்தை ரகசியமாக அறிந்து கொள்கிற ஆவல் குறுகுறுப்பு...

வந்த சுவடு தெரியாமல்... வீட்டின் தாழ்வாரத்தின் மறைவில் நின்றான். ஒளிந்திருப்பது தெரியாமல், சாதாரணமாய் நின்றான்.

"ஊர்வழியா அலையுறதைப் பொழைப்பா வைச் சிருக்கிற ஆளுக்கு பொண்டாட்டி புள்ளைக எதுக்கு? தொழில் எதுக்கு? பேசாம கிடக்க வேண்டியதுதானே...?"

வெறுப்பின் விளிம்பில் நின்று கசந்து கொள்கிற மாமனாரின் குரல், பதிலுக்குப் பூவம்மாளின் ஆவேசமான குரல். கடித்துக் குதறப்பட்ட இதயத்தின் வேதனை கலந்த கோபக் குரல்.

"நீங்க ஒண்ணும் அவரைக் குறை சொல்ல வேண்டாம். அவரைக் குறை சொல்றதுக்கு உங்களுக்கென்ன யோக்யதை இருக்கு? மருமகனுக்கு ஆயிரம் ரெண்டாயிரம் குடுத்துக் குடுத்துக் தவிச்சிட்டிகளோ... குறைசொல்ல வந்துட்டீக... எங்களுக்கு நேரம் சரியில்லே. தொட்டது துலங்க மாட்டேங்குது. ஏவாரத்துக்கும் துட்டு இல்லே. கைக்கும் மெய்க்கும் பணமில்லே. மத்தபடி அவருக்கென்ன குறைச்சல்? லட்சம் லட்சமாய் வைச்சிருக்கிறவனுக்குக்கூட இல்லாத மரியாதையும், புகழும் அவருக்கு இருக்கு தெரியுமா?"

"நாட்டுக்குப் பாடுபட ஒம் புருஷன் அலையுறாரு. நாடா உங்களுக்குச் சோறு போடும்? நாளைக்கு உங்க புள்ளைகளுக்கு நாடா நல்லது பொல்லது பாக்கும்?"

"பாரதியாரு நாடு நாடுன்னு அலைஞ்சு, கஞ்சிக்கில்லாம செத்தாரு. அவரு புள்ளைகளையும், பேரன் பேத்திமார் களையும் நாடு நல்லபடியாகத்தானே வைச்சிருக்கு?"

"இதெல்லாம்... அவரு சொல்லிக்குடுத்த பாடமா?"

"அவரு சொல்றாரு, சொல்லலை...! நெசம் அது தானே! தாய் தகப்பன் செய்ற பாவம் புண்ணியம், புள்ளைக தலையிலே விடியும்னு பெரியவுக சொல்வாக. நீங்க செய்ஞ்ச பாவத்துக்கு... நா கிடந்து சீரழியுறேன். அவராச்சும் புண்ணியம் பண்ணட்டும். எம்புள்ளைகளாச்சும் நல்லபடியா செழிச் சிருக்கட்டும். நீங்க வேணும்னாலும் இருந்து பாருங்க, எம்புள்ளைக ஒரு குறையில்லாம இருப்பாக... பாருங்க."

"இப்படியே நம்பி நம்பித்தானே... உம் புருஷனை அவரு மனம் போல அலையவிடுறே. இறுக்கிப் பிடிக்க மாட்டேங்கிற."

"நா இறுக்கிப்பிடிச்சதுக்காக அவரு நிக்கவா போறாரு? அவருக்குத் தெரியாத யோசனையா? அவரே நூறு பேருக்குப் புத்தி சொல்வாரே!"

"பெறகெதுக்கு முகம் வாடிப்போய் இங்க வந்து நிக்கிறே?"

"வரவேண்டாம்னா சொல்லிடுங்க. போயிடுறேன். வீடுன்னு இருந்தா வாசப்படி இருக்கத்தான் செய்யும். குடும்பம்னு இருந்தா சண்டை சத்தம் வரத்தான் செய்யும். அதுக்காக அவரை ஒரேயடியாக் கேவலமா பேசுனா எப்படி பொறுத்துக்குவேன்?"

பெரியசாமியால் நிற்க முடியவில்லை. இன்பப் பரவசம், பெரு வெள்ளமாய்ப் பெருக்கெடுத்து, அவனை அடித்துச் செல்கிறது. வேலை பார்த்த வியர்வையோடு பம்ப்ஷெட் குழாய்த் தண்ணீரில் தலையைக் கொடுத்துக் குளிக்கிற மாதிரி... உடம்பு மனசெல்லாம் இன்பப் பரவசம்... சந்தோஷப் பெருக்கு...

பூவம்மாளா, இப்படி? அவளா இப்படிப் பேசுகிறாள்...? என்னைக் கொத்திக்குதறிய பூவம்மாவா... இப்புடி...!

மனசுக்குள் ஆனந்த நதி, கண்களுக்குள் நீரின் உறுத்தல். நெஞ்சே விம்மிவிம்மிப் பரவசமடைகிறது... கிரீடத்தைத் தூக்கி பூவம்மா தலையில் சூட்டி, சிம்மாசனத்தில் உட்கார வைத்துப் பார்க்கணும் போல, மனசெல்லாம் ஆசைப் பெருக்கு...

வந்த சுவடு தெரியாமல் நழுவி வெளியேறினான்.

ராஜபாளையம் போகணும். கூட்டத்தை நடத்தணும். ராத்திரி தங்கக் கூடாது... எப்படியாவது ராத்திரியே வீடு வந்து சேரணும்...

பூவம்மாவின் பூ முகத்தை... ஆசைதீரப் பாக்கணும்...

முடிவோடு புறப்படத் தயாரானான். அவன் மனசெல்லாம்... பூவம்மாவின் பூமுகங்கள்...

6

பிறந்த போதினிலே...

நாராயணிக்கு உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் இன்பத்துள்ளல். தலை கால் புரியாத சந்தோஷம். மனசுக்குள் ஆனந்தமலர்கள் பூத்துச் சொரிந்து வண்ணமாய்ச் சிரித்தன.

கூரை வீட்டின் முன் பக்கத்தில் இன்று காலையில் திடுமென உதித்தெழுந்த சின்னஞ்சிறு ஓலைத் தாழ்வாரத்தின் நிழலில், கறுப்புக் குன்றாக நின்ற எருமைமாட்டைப் பார்க்கப் பார்க்க அந்தச் சிறுமிக்கு நெஞ்செல்லாம் நிறைந்து ததும்பியது.

"ஹைய்... எங்க மாடு... எங்க மாடு" என்று எல்லையற்ற பெருமையுடன் பூரித்தாள்.

ஒரு உயிரைச் சுமந்து கொண்டிருக்கும் பெருமிதம், அந்த எருமையின் முகத்தில் ஒளியாகவும், உடம்பின் கருமையான மினுமினுப்பாகவும் ஒளிர்ந்தது. அதன் உப்பிய வயிறும் பால் நிறைந்த தடித்த மடுவும் கண்ணையும், நெஞ்சையும் நிறைத்துச் சந்தோஷமளித்தது.

நேற்றுதான் வீட்டுக்கு வந்து சேர்ந்த இந்த மாட்டின் மீது... நாராயணிக்கு இனம் புரியாத பிரியம். கறுப்பு வைரமாக ஜொலித்த அதன் கண்கள் அங்குமிங்குமாக நகரும்போது... நாராயணியின் இதயத்தில் சந்தோஷம் பொங்கிப் பீறிட்டது.

"ஹைய்... எங்க மாடு என்னையே பார்க்குது... வாலை ஆட்டுது..." என்று குதூகலிப்புடன் கைகொட்டிக் குதித்தாள். சிரித்தாள், பூவாகச் சிதறும் சிரிப்பு, சங்கீதமாக இனிக்கும் வெள்ளைச் சிரிப்பு.

"அடியே... நாராயணி... காதுலே வுழலே? எங்க போய்த் தொலைஞ்சே...? உஸ்ஸ்ஸ்..."

வீட்டுக்குள்ளிருந்து வந்த வீரம்மாவின் அழைப்பில் அசதி தெரிந்தது. ஏதோ அவஸ்தையைச் சகித்துக் கொண் டிருக்கும் வேதனை இருந்தது.

"என்னம்மா, கூப்டீயாம்மா?" - துள்ளிக் கொண்டே உள்ளே பாய்ந்தாள் நாராயணி. நேராக அமரமுடியாமல் சுவரில் சாய்ந்த நிலையில் திண்ணை மீது உட்கார்ந்திருந்தாள் வீரம்மா. இடுப்புச் சேலையை நெகிழ்த்துவிட்டிருந்தாள். அதையும் மீறி வயிறு முன்பக்கமாகத் தள்ளிக்கொண்டு தெரிந்தது. ஒரு புதிய ஜீவனை ஏந்திக் கொண்டிருக்கும் பெருமிதத்தைவிட... சலிப்பும் சோர்வுமே... அவளிடம் அதிகமாகக் காணப்பட்டது.

"உங்கய்யா எங்கே போயிருக்கார்?" "எங்கயோ... எனக்குத் தெரியாதும்மா." "எங்க போய்த் தொலைஞ்சாரோ; பொறுப்பத்த மனுஷன், 'வாயும் வவுறுமா நா இருக்கேன். இப்ப மாடு பிடிக்க வேண்டாம், புல்லுப் பிடுங்கிப் போடக்கூட முடியாது'ன்னு படிச்சுப் படிச்சுச் சொன்னேன். காதுலேயே போட்டுக்கலே. 'சின்னமாடு ஆயிரம் ரூபாய்க்கு கிடைக்குது'ன்னு பிடிச்சுக் கொண்ணாந்து கட்டிப் போட்டுட்டு... உடம்பு புல்லரிக்காமெ தெருவுலே அலைஞ்சா என்ன அர்த்தம்? பாவம் வாயில்லா சீவன்... அதுவும் வாயும்

வயிறுமாயிருக்கிற சீவன்... குலைபட்டினியா கிடக்குதே... நான் என்ன செய்றது..."

வீரம்மாவின் அங்கலாய்ப்பு நீண்டது. உஸ்ஸென்று களைப்பான பெருமூச்சுடன் முடிந்தது.

மாடு வந்த சந்தோஷத்தில் திளைத்த நாராயணிக்கு, அம்மாவின் அங்கலாய்ப்பு பிடிக்கவில்லை. எரிச்சலாக இருந்தது. இருந்தாலும் வாயும் வயிறுமாக இருக்கும் அம்மாவைச் சங்கடப் படுத்தக்கூடாது என்கிற நினைப்பில் மௌனமாக இருந்தாள்.

இதேபோல்... போன வருஷம் அம்மா வயிற்றைத் தள்ளிக் கொண்டு அங்கலாய்ப்பும் எரிச்சலுமாக இருந்தாள். ஒரு முன் காலைப் பொழுது.

கனவா... நினைவா என்று இனம் பிரித்துப் பார்க்க முடியாத தூக்க மயக்கத்தில் கிடந்த நாராயணி, ஏதோ கேட்டு விழித்தாள். சுற்றிலும் மனித அரவம். ஒரு சில பெண்களின் கசாகசா சப்தம். காடா விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் உலவும் அவர்கள்... ஏதோ வேற்று உலக மனிதர்களின் நிழல்களைப் போலத் தோற்றமளித்தனர்.

நாராயணி எழுந்தாள். அம்மா திண்ணையில் படுத்திருப்பதைப் பார்த்தாள். அடிபட்ட புழுவைப்போல அம்மா நெளிந்தாள்.

என்னவோ ஏதோ என்று பதைத்த நாராயணி நெஞ்சுள் பொங்கிப் பீறிட்ட அழுகையை அடக்கிக் கொண்டு, கூட்டத்தினூடே நுழைந்து பார்த்தாள்.

அம்மா வலி பொறுக்காமல் துடித்தாள். ரத்தம் கசிய உதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டு... உடம்பின் சகல நரம்புகளும் வேதனை தாங்காமல் விறைத்து விம்ம... தவித்துக் கொண்டிருந்தாள். கைகள் விரிப்புத்துணிகளை வெறியுடன் கவ்வி நசுக்கின. பெண்கள் சுற்றிலும் துரிதமாக இயங்கினர்.

சில நிமிஷங்கள், பதைப்பும் பயமும் நெஞ்சை யழுத்தும் கனத்த நிமிஷங்கள், ஒரு புதிய குரல் அழுகையாக ஒலித்தது பூமிக்கே புதிய குரல்.

"... ஆம்பளைப்புள்ளை... ஆம்பளைச் சிங்கம், பட்டத்து ராஜா பெறந்துருக்கார்..." சுற்றிலும் ஆனந்தக் கூச்சல், எல்லாப் பெண்களும் குலவையிட்டனர். ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிக்கிடந்த தெருவையே உசுப்பிவிடும் குதூகலக்குலவை. சாம்ராஜ்யம் கட்டி, சக்கரவர்த்தியாக இருந்து ஆளப் போகும் ஆண்சிங்கத்தை ஈன்ற தாய்க்குப் பாராட்டு வழங்கும் குலவை. வாழ்க்கை முழுவதும் ஒளியும் உல்லாசமும் நிறைந்திருக்கட்டு மெனப் பிறந்த புதிய ஜீவனை வாழ்த்தும் குலவை.

மூன்று குலவைகள், ஆனந்த கீதமாக எழும்பி, காலை நேரத்து அமைதியை உல்லாசமாக்கி விட்டு அடங்கியது...

"என்னடி. அப்படி நிக்கிறே?" பழைய இனிய நினைவுகளில் மிதந்த நாராயணி அம்மாவின் அதட்டும் குரலால் பிரக்ஞையுற்றாள். "போய், உங்கய்யாவைக் கூட்டிட்டுவா..." என்று வீரம்மா விரட்டினாள்.

வெளியே வந்த நாராயணியை, எருமைமாடு காதுகளைத் தூக்கி நிமிர்த்துக்கொண்டு... பார்த்தது. ஒரு எதிர்பார்ப்புடன் கனத்து வாயைத்திறந்து "ம் ம்மே - க் க்க"

என்றது. அதன் தலையை அன்புடன் தடவினாள். ஈரமும், மினுமினுப்பும் இருந்த வாயின் மிருதுவான பாகத்தைத் தடவினாள்.

"என்னடீ... போகலீயா?" அம்மாவின் அதட்டல் முதுகில் அறைந்து விரட்ட, மனசில்லாமல் நகன்றாள்.

எதிரே ராமசாமி வந்தான். வழக்கம் போல பீடியைக் குடித்துக்கொண்டு வந்தான். உடம்பின் உறுப்புகள் ஒவ் வொன்றும் பிணங்கிக் கொண்டது போல முறையற்றிருந்தன.

நடக்கும்போது கால்கள் ஏதோ ஒரு வித்தியாசமான முறையில் வளைந்தது. கைவீசும் போது... முழங்கையின் வளைவு நிரந்தர வளைவாகத் தெரிந்தது. சற்றுக் கூனல்.

"என்னம்மா நாராயணி?" காந்தலான எச்சிலை 'புளிச்'சிட்டான். "அம்மா கூப்புட்டாள்."

நிறைமாத கர்ப்பிணியான தனது மனைவியின் அழைப்பு என்றதும், மனது ஜில்லிட்டது. ஏதோ ஓர் பதைப்பு. "ஏன்? எதுக்கு?" ஆவலும் அவசரமும் கேள்வியில் எதிரொலித்தது.

அந்த ஆவலும் அவசரமும் நாராயணிக்குப் பொருத்த மற்றதாக - சலிப்பாக இருந்தது.

"சும்மாதான்" என்றாள். ராமசாமியின் வேகம் அடங்கி... சமனமாகி 'சரி சரி வா..." என்றான். வீடு நெருங்கியது.

அய்யாவைக் கண்டதும் அம்மா புலம்ப ஆரம்பித் தாள். நோக்கின்றி எங்கெங்கோ நீண்டது. கடைசியில்

"இப்ப எதுக்கு மாட்டை பிடிச்சு கட்டணும்? நல்லபடியா பெத்தெடுத்து - நா எந்திச்ச பிறகு மாடு பிடிக்கலாமில்லே? இப்ப மாட்டைப் பிடிச்சாச்சு. புல்லுக்கு யார் போறதாம்?"

ராமசாமி நீண்ட மௌனத்தை உடைத்துக்கொண்டு நிதானமாக சமாதானம் கூறினான்.

"சும்மாயிரம்மா... ஆயிரம் ரூபாய்க்கு இப்படிப்பட்ட சினைமாடு எப்பவும் கிடைக்குமாக்கும்? ஏதோ பெத்த பொண்ணைக் கரையேத்தணும்கிற அவசரத்தாலே பொன்னையா... இந்த மாட்டை இந்த விலைக்குக் கொடுத்தாரு. நல்ல ஜாதி. பொட்டைக்கன்னு போடுற மாடு. பாலும் நாலு லிட்டருக்குக் குறையாது. இப்பேர்ப்பட்ட ஜாதி மாடு கிடைக்கும்போது விட்டுட்டா... நினைச்ச நேரத்துதில மடியிலே ரூபாயைக் கட்டிக்கிட்டு அலைஞ்சாலும் கிடைக்குமாக்கும்?"

தன் பக்க நியாயத்தை விளக்குவதில் வேகமாக இருந்த அய்யாவின் பேச்சு நாராயணிக்கு இனித்தது. குதூகலமாக இருந்தது.

"அதெல்லாம் சரித்தான்... புல்லுக்கு எங்க போறது?" வீரம்மா தனது 'பிடி'யை விடாமல் கேட்டாள்.

"போம்மா... புல்லுக்கு மலைக்கா போவாக? இதோ நா போறேன். அஞ்சு நிமிஷத்துலே புல்லுக் கட்டோடு வாரேன்." "நாராயணி அய்யாவுக்குக் கஞ்சி ஊத்து."

அலட்சியமாகப் பேசித் தைரியம் கூறிய ராமசாமி தலையில் சுற்றியிருந்த துண்டை உருவி உதறித் தோளில் போட்டுக்கொண்டு, கைகால் கழுவிக் கொள்ள

'வெளிப்பானை'க்குப் போனான். சிறுமி நாராயணி வட்டிலைக் கழுவினாள்.

நாராயணி ஊற்றிவைத்த கஞ்சியின் முன் அமர்ந்து மனைவியை ஏறிட்டுப் பார்த்தான் ராமசாமி.

"நா சாயங்காலம் திருவேங்கடம் போறேன்..."

"எதுக்கு சினிமாவுக்கா?" கேள்வியில் கண்டனமும் குத்தலும் வெளிப்பட்டன.

"உனக்கு எப்பவும் இதே நினைப்பு. நாந்தான் கேக்கிறேன், சினிமா பாக்கிறது தப்பா?"

'ம்ங்ம்...' அம்மாவின் உறுமல் நாராயணிக்கு எரிச்சலாக இருந்தது. ராமசாமி சமாதானம் கூறினான்.

'இல்லே, வீரம்மா... திருவேங்கடம் போய் உனக்குப் பிள்ளைப்பேறு சாமான் வாங்கணும். எருமைக்குக் கொஞ்சம் பருத்தி விதையும், புண்ணாக்கு தவிடும் வாங்கிட்டு வரணும்."

"இன்னிக்குத்தான் போகணுமா? நாளைக்குப் போனா ஆகாதா?"

"நாளை என்னென்ன ஜோலி இருக்குமோ? இன்னிக்கே போய்ட்டு வந்தால்தான் நல்லது..."

அம்மா சமாதானப்பட்ட அடையாளத்தில் மௌன மானாள். இவ்வளவு பேசியதில் ஏற்பட்ட களைப்புடன் உஸ்ஸென்ற நீண்ட பெருமூச்சுடன் கண்ணை மூடிச் சுவரில் சாய்ந்தாள்.

அய்யா வயிற்றைக் கஞ்சியும் நீருமாக நிரப்பிக் கொண்டு பீடியில் நெருப்பை ஏற்றிக்கொண்டு அரிவாளும் கையுமாக வெளியேறிய பிறகு -

“நானும் வவுத்தைத் தள்ளிக்கிட்டு உக்காந்துட்டேன். பூதம் மாதிரி ஒரு மாட்டையும் பிடிச்சுக் கட்டிப் போட்டாச்சு. பாவம், இந்த மனுஷன். எல்லா வேலைகளையும் ஒத்தையாளாக இருந்து சுமந்து தவிக்கிறாரு. ம் ஹூம்... அவருக்குத்தான் எம்புட்டுக் கஷ்டம்!”

கனிவும் அன்பும் அடர்ந்த அம்மாவின் இந்த முணுமுணுப்பு நாராயணிக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

எரிச்சலும் கோபமுமாக இந்நேரவரை கனல் பறத்திய அம்மாவுக்கும், இந்தக் கனிந்த அம்மாவுக்கும் எத்தனை வித்தியாசம்! கனிந்த இந்த அம்மாவைப் பார்க்க அவளுக்குப் பிடித்தது. அவளைச் சேர்ந்துக் கட்டிக்கொண்டு சிரிக்கணும் போல மனதும் உடம்பும் துடித்தன.

“அம்மா...”

“என்ன நாராயணி?” மனசின் கனிவு மேலும் குழைந்திருப்பதை உணர்ந்தாள். நீண்ட நேரமாக நெஞ்சுள் உறுத்திக்கொண்டிருந்த சந்தேகத்தைக் கேள்வியாக்கினாள்.

“ஏம்மா... மாடு பொட்டைக் கண்ணு போட்டாத்தான் நல்லதா?”

“ஆமாடீ... எருமை பொட்டைக் கண்ணு போட்டா வளர்க்கலாம். அதுவும் சினையாகி கண்ணு போடும். வாழையடி வாழையா வம்சம் தழைக்கும். நமக்கும் வளர்த்ததுக்கு பலனாக ஆயிரம் ரெண்டாயிரம் கெடைக்கும். கெடாக்கன்னு போட்டா... எதுக்காகும்? மாடு பால் தர வரைக்கும் ஏனோதானோன்னு வளர்த்துட்டு, அடிமாடா சக்கிலியனுக்கு அஞ்சோ பத்துக்கோ விக்க வேண்டியதுதான். ஏதோ... முத்துக்காளை பாண்டியன் சாமி புண்ணியத்திலே

நம்ம மாடு பொட்டைக்கன்னு போட்டா... உங்கய்யா படுற பாட்டுக்குப் பலன் கெடைக்கும்... ம்ஹு`ம்... எப்படி விட்டிருக்கானோ... சாமி...''

நாராயணிக்குப் புரிவதுபோலவும், புரியாதது போலவும் ஜாலம் காட்டியது. ஆனால் அதற்கும் மேலாக கேள்வி கேட்டால் அம்மாவுக்கு எரிச்சல் வந்தாலும் வந்துடும். பாவம்... அவளுக்கு வயிற்றில் சுமை...! இவ்வளவு பெரிய சுமை... அவளாலே எப்படித் தாங்க முடியுது?

சிவப்பை உதிர்த்துவிட்டு சூரியன் வெளுப்பாக்கிக் கொண்டு மேலேறினான். உஷ்ணத்தை அறிமுகப்படுத்த ஆரம்பித்துவிட்டான்.

எருமை கட்டுத் தரையில் இருப்புக் கொள்ளாமல் அலைபாய்ந்தது. வயிறும் பின்புறமும் விம்மிவிம்மித் தணிந்தது. வலிபொறுக்க முடியாமல் தலையை வெறியுடன் ஆட்டியது. கட்டுத்தரையில் கொம்புகள் மோதின. 'சட்டேர் சட்டேர்' என்ற ஓசை கொடூரமாய் ஒலித்தது.

'ம் ம்மே ஏ க் க் க்... ம் ம் மே ஏ க் க் க்' மாடு வேதனை தாங்காமல் தொடர்ச்சியாகக் கதறியது. அதன் கரகரப்பான குரலில் அளவில்லாத துன்பமும் சோகமும் தெரிந்தது.

வீரம்மா 'அய்யாவை அழைத்து வரும்படி' நாராயணியைத் துரிதப்படுத்தினாள்.

"மாடு கதறுது... கன்னு போடப்போகுது... அய்யாவைக் கூட்டிட்டு வா... ஓடு ஓடு, சீக்கிரம்!''

குதூகலம் நாராயணியின் இதயத்தைக் கவ்விக் கொண்டது. அவள் மனம் சிறகு முளைத்து வானத்தில் உல்லாசமாகப் பறந்தது. ‘கன்னு போடப் போகுது... கன்னு போடப் போகுது...’ என்ற நினைப்பு, உற்சாக வேகத்தில் உதட்டில் நிரந்தர முணுமுணுப்பாகத் தங்கி விட்டது.

சதையிலும் ரத்தத்திலுமிருந்து உதயமாகி, சதையும் ரத்தமுமான ஒரு உருவமாக புதிய உயிராக வெளி வரப்போகும் கன்றைப் பற்றிய அவளது கற்பனை வண்ணங்கள்... ஆவலைத் தூண்டியது.

அந்தக் கன்றைப் பார்க்கணும்ங்கிற விருப்பம், ஒரு பேயாக அவளைப் பிடித்து ஆட்டியது.

ராமசாமி வந்தான். மாடு வேதனை தாங்க முடியாமல் கதறியது. கால்களை மாற்றி மாற்றி வைத்து அலைபாய்ந்தது. அதன் இரண்டு பெரிய கண்களிலும் கரிய நீர்க்கோடு... அதன் உடல் வேதனைச் சோகமாக வழிந்தது. சற்று நேரத்தில் -

ஒரு புதிய ஜீவன், இதுவரை பார்த்தறியாத சூரியப் பிரகாசத்தையும், காற்றையும் உணர்ந்தது.

“பொட்டைக்கன்னு போட்டிருக்கு!”

ராமசாமியின் ஆனந்த அறிவிப்பு, நாராயணியின் மனதில் உற்சாகப் பிரவாகத்தை மடை திறந்துவிட்டது.

“பொட்டைக் கன்னுதான் போட்டிருக்கு...” என்பதை உடைந்த இசைத்தட்டுப் போல நாராயணி ஓயாமல் உல்லாசக் குரலில் கத்தினாள். அம்மாவின் முகத்தில் கூட சந்தோஷ வெளிச்சம் படர்ந்திருப்பதைப் பார்த்தாள்..

அய்யாவிடம் அந்தச் சந்தோஷம் சுடர்விட்டுப் பிரகாசித்தது. வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் ஒளி துலங்கி, சற்றுப் புறமே ஆனந்தக் களியாட்டம் போடுவது போலிருந்தது.

நாராயணிக்கு... அம்மா ஆண் பிள்ளை பெற்ற தினத்தில் வீட்டில் கேட்ட மகிழ்ச்சி நாதம், நினைவில் கேட்டது.

இருபது நாட்கள் ஓடியிருக்கும், ஒரு மாலைப் பொழுது. சூரியன் சிவந்து, பெரியதாகி மறையத் தயாராகிவிட்டான். தெருவில் சிறுமிகளுடன் விளையாடிப் பொழுதைக் கழித்துவிட்டுப் பசியுடன் வீட்டுக்கு வந்தாள்.

வீட்டுக்குள்ளிருந்து சில பெண்கள் வந்து போய்க் கொண்டிருந்தனர். அவளுக்கு திகீரென்றது.

இதேபோலத்தான்... நாலைந்து மாதங்களுக்கு முன்பு ஆறு மாத வயதுள்ள தம்பி இறந்தபோது... கனத்த துக்கத்துடன் பெண்கள் வந்து போய்க்கொண்டிருந்தனர்.

அன்று அம்மா அழுத அழுகை, அதைப் பார்த்துத் தான் அழுதது, அய்யாவின் முகத்தில் மண்டியிருந்த சோக இருள், வீடு முழுக்க நிரம்பி திணறடித்த துக்கவெள்ளம்.

எல்லாம் ஒரு கணத்தில் ஒரு மின்னலாக ஓடி நாராயணியைப் பயமுறுத்தியது. அச்சத்தில் ஒளிர்ந்து ஜில்லிட்ட நெஞ்சுடன் உள்ளளே நுழைந்தாள்.

அம்மா திண்ணையில் படுத்திருந்தாள். பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருந்தாள். பெண்கள்

அங்கும் இங்குமாக துரிதகதியில் இயங்கிக் கொண்டிருந்தனர். நல்ல வேளை பயமில்லை.

பயம் தணிந்து போனாலும்... வேறுவிதமான பதைப்புடன், திகைப்புடன் நின்றாள் நாராயணி.

ஒரு குழந்தையின் அழுகை... கீச்சுக் குரலாகக் கேட்டது. பூமிக்கே புதிய குரல் அவள் செவியை ஸ்பரிசித்து, நெஞ்சில் இனிப்பாகப் பரவிய இனிய குரல்.

இதோ குலவைச் சப்தம் கேட்கப்போகிறது. குழந்தையை வாழ்த்தி... குழந்தை பெற்ற பாக்யவதியைப் பாராட்டி... ஆனந்த கீதமாகக் குலவை ஒலிக்கப்போகிறது... தெருவின் கதவையே ஈர்த்து விடக்கூடிய குலவை கேட்கப் போகிறது.

கனத்த எதிர்பார்ப்புடன் ஆவலில் நெஞ்சு துடிக்கக் காத்திருந்த நாராயணி சில நிமிஷங்களைச் சிரமப்பட்டுப் பொறுத்துக் கொண்டாள். ஆனால்... ஏனோ... எந்தப் பெண்ணும் குலவை போடும் ஞாபகமே இருந்ததாகத் தெரியவில்லை. நாராயணியின் பிஞ்சு இருதயம் ஏமாற்றத்தை ஜீரணிக்க முடியாமல் திணறியது. முகம் கறுத்து, மனசு குழம்பிக் கிடந்த நாராயணியிடம் ஒரு கிழவி சொன்னாள்.

“அடியோ நாராயணி, உனக்குத் தங்கச்சி பொறந்திருக்கு.”

“தங்கச்சியா?” நெஞ்சின் ஒவ்வோர் பகுதியிலும் முட்டி மோதிய மகிழ்ச்சி... மடை உடைத்துக்கொண்டது. முகமெல்லாம் ஒளிதுலங்க, வாய் மலர்ந்தாள்.

ஆனால் கிழவி சலிப்புடன் எதிரொலித்தாள்.

"ஆமாடி, பொட்டச்சிதான் பொறந்திருக்கு... பாவம், ராமசாமி! அவனுக்கு இன்னொரு பத்தாயிர ரூபாய் சுமை... ம் ஹூம் - இந்த பொம்பளைப் பொள்ளை... இந்தப் பூமியிலே எப்படிக் கஷ்டப்படப் போகுதோ...?"

நாராயணி துணுக்குறுற்றாள். இதில் கவலைப்படவும், சலித்துக் கொள்ளவும் என்ன இருக்கு?

அய்யாவைப் பார்த்தாள். அவன் முகத்திலும் இருள். கண்களில் சோகம் நிழலாகப் படிந்திருந்தது. அம்மாவின் முகத்தில் கூட அன்று தம்பியைப் பெற்றெடுத்த சமயத்தில் இருந்த பெருமிதத்தையும், சந்தோஷத்தையும் காணவில்லை. ஒரு கசப்பை விழுங்கும் பாவனை தெரிந்தது.

தம்பி இறந்த நாள் நினைவுக்கு வந்தது. அன்றைய துக்க நிழல், இன்னும் வீடு முழுக்க நிரம்பியிருப்பது போலிருந்தது. நாராயணி திணறினாள். தூக்கக் கலக்கத்தில் எதிலோ முட்டிக் கொண்டது போன்றதோர் திகைப்பு. இது என்ன? ஏன்? புரியவில்லை. குழப்பம், மனசை ஒரு இருட்டாகச் சூழ்ந்தது.

இது என்ன? ஏன்?

எருமை மாடு பொட்டைக் கன்னு போட்டா வீடெல்லாம் சந்தோஷ ஆரவாரம். அம்மா பொட்டைப் பிள்ளை பெத்தா... வீடெல்லாம் துக்கமா? இது என்ன? பொம்பளைப் பிள்ளைன்னா... அத்தனை மட்டமா?

அம்மா பொறந்த அன்னிக்கும் இப்படித்தான் துக்கப் பட்டிருப்பாங்களா? தான் பொறந்த அன்னிக்கும் இப்படித்தான் துக்கப் பட்டாங்களா?

கண்ணில் நீர் முட்டியது. ஏதோ ஒரு சிறுமி தன்னை மானக்கேடாக வைது விட்டாற் போன்ற அவமான உணர்ச்சி அவளைக் குத்தியது.

மனம் விம்மியது. நெஞ்சுக்குள் எங்கோ ஒரு பகுதி நொறுங்கிச் சரிந்தது.

வெளியே வந்தாள். எருமை மாட்டைப் பார்த்தாள். கனத்த செவிகளைத் தூக்கிக் கொண்டு தனது கன்றைப் பாசத்துடன் நுகர்ந்து கொண்டிருந்த எருமையின் முகத்தில் ததும்பிய பெருமிதத்தைப் பார்த்தாள்.

அவள் மனதில் இனம் புரியாத பொறாமை தலை காட்டியது.

7

நிறம் மாறும் நிஜங்கள்

"என்ன, உப்பு ஏவாரமெல்லாம் எப்படியிருக்கு? நல்லாருக்கா?"

"ஏதோ இருக்கு... மோசமில்லே..."

"நீங்க உரக்கடை ஆரம்பிச்ச நேரம்... நல்ல மழை பேய்ச்ஞ்சிருக்கு. விவசாய வேலை நல்லபடியா நடக்கும். உரம் நல்லா விக்குமயா..."

"விக்கத்தான் செய்யும். ஆனா, சம்சாரி கையிலே 'பசை' இல்லியே! வெளைஞ்ச வத்தலுக்கு வெலையில்லே, வெலையிருக்குற பருத்தி வெளைச்சலில்லே. என்ன செய்றது. சம்சாரிக பொழப்பு... உப்புவிக்கப்போனா மழை பேயுது, மாவு விக்கப் போன காத்தடிக்குதுங்கிற கதையா போச்சு."

"நீ சொல்றது நெசந்தான் தம்பி. ஆனா... மழை பேஞ்ச பெறகு, 'பசை'யில்ரேங்கிறதுக்காக வெள்ளாம செய்யாம இருக்க முடியுமா? தாலிக் கொடியை அத்து வித்தாச்சும்... வெதைச்சுப் போடணுமே... ம்ம்... இதென்ன மூடைக தம்பி?"

"டி.ஏ.பி. மூடைக..."

"இது என்ன அட்டியல்...? யூரியா மூடைகளா?"

“ஆமண்ணாச்சி.”

“இந்த மூடைக என்னது. தம்பி?”

“இது... எண்ணூத்திப் பத்து தூள் மூடைக...”

“நெல்லுக்குப் பனிப்பதத்துலே வெதைக்கிற தூசி மருந்தா...? ம்ஹ்ம்... கடை வைச்சு ஒரு மாசமாகுதே... ஏதாச்சும் லாபம் தெரியுதா?”

“என்ன லாபம்! மூடைக்கு ஒரு ரூவா முக்கா ரூவாதான் மிச்சமிருக்கும். என்னத்தையோ சில்லறைக்கு ரெண்டு மூடையாச்சும் வித்தாத்தான்... ரெண்டு துட்டைப் பாக்க முடியும்.”

“அது சரிதான்... காத்துக் கெடந்ததுக்குக் காசு பணம் இல்லாமலா போயிடும்? ஆமா தம்பி... நம்ம ஊர் ஏவாரத்துல கடன் ரொம்பப் போகுமே...”

“கேக்கத்தான் செய்றாக... ஆனா, குடுக்கிற சக்தி ஏங்கிட்ட இல்லையே...”

“கடன் குடுக்காம ஏவாரம் விக்குறது செரமமாச்சே!”

“வித்த மட்டும் போதும் அண்ணாச்சி. ரொக்கத்துக்குத்தான் ஏவாரம். கொஞ்ச ரூவாயை வைச்சுத்தான் கடையை துவக்கியிருக்கு. அதுக்குள்ளேதான் வண்டியை ஓட்டணும். பெறகு எதை வைச்சு கடன் குடுக்குறது? கடன் குடுத்தா கடையை இழுத்து மூடிட்டுப் போக வேண்டியதுதான்!”

“அதுவும் அப்படியிருக்கோ... உர மூடைக மொத்தமா எடுப்பீகளே, அங்க கொஞ்சம் கடன் தர மாட்டாகளோ?”

“பைசா மாத்தி எண்ணி வைச்சுட்டுத்தான் மூடையிலே கை வைக்க முடியும். அங்க அவ்வளவு கண்டிஷன்.”

“இங்க எப்படியும்... முகம் பார்த்து, ஆள் பாத்து ஒன்னு ரெண்டு புள்ளிகளுக்காச்சும்... ஒரு நா ரெண்டு நா தவணைக்காவது விட்டுப் பிடிக்க வேண்டியிருக்குமே...”

“அது ஆளைப் பொறுத்து... ஒரு நா ரெண்டு நாள்னா சமாளிச்சுக்கலாம்...”

“அதானே பார்த்தேன்... கடன் குடுத்து வாங்காம கிராமத்துலே முடியாதே...”

“ம்ச்சூம்... அதைப் பார்த்துக்கலாம்.”

“ஆனா... நம்ம ஊருக்கு உங்க உரக்கடை ரொம்ப அவசியம் தம்பி. உழவை, நடுவையை வைச்சிட்டு வந்து ‘அவக்’குன்னு மூடையைத் தூக்கிக்கிட்டுப் புஞ்சைக்குப் போயிடலாம். இங்க கடையில்லேன்னா... ஆத்திரம். அவசரத்துக்கு திருவேங்கடம்தானே ஓடணும்? பணத்தை எண்ணிக் குடுத்தாலும், மூடையைத் தூக்கி, அதுக்கொரு ஆளைப் பாத்து, வீடு கொண்டு வந்து சேர்க்கிறதுக்குள்ளே ‘ஆத்தாடி, அம்மாடி’ன்னு ஆயிப்போகுமே... நீங்க கடை வைச்சது, நம்ம ஊரு சம்சாரிகளுக்கும் ‘கைவாப்பு’லே மூடைக வந்த மாதிரி... உங்களுக்கும் ஒரு தொழில் நடந்த மாதிரி...”

“ஆமண்ணாச்சி... உங்களுக்கு என்ன, உரம் வேணுமா?”

“நெல்லுக்கு இருபது கிலோ யூரியா உப்பு வேணும். மொளகாய்க்கு உழவுலே போட ஒரு மூடை டி.ஏ.பி. வேணும்...”

"வாங்கிட்டுப் போறீங்களா? பெறகு வந்து வாங்கிக் கிடுதீகளா?"

"இப்பவே வாங்கிக்கிறேன். ஆனா, ரூவா... பால் ரூவாயிலே தான் கெடைக்கும் தம்பி..."

"பால் ரூவாயிலே நமக்கு முன்னூத்தைம்பதுக்கு மேலே வரும். குடுங்க ஒத்த வரியிலே குடுத்துடுதேன் தம்பி..."

"இல்லே... நீங்க குடுத்துருவீக. அதுவரைக்கும் தாங்குறமையே நாசமாயுரும் தம்பி. நீங்க இப்ப குடுங்க. பால் ரூவாயிலே கரெக்டா குடுத்துடுதேன்."

"இல்லே.. சரிப்படாது.. வருத்தப்படாதீக அண்ணாச்சி."

"ம்ம்... ஹம்..."

"நாளைக் கழிச்சு காலையிலே தந்தாப் போதுமா, தம்பி?"

"போதும். ஆனா, சொன்னா சொன்னபடி இருக்கணும். இழுத்தடிச்சு, ஏவாரத்தைப் பாழாக்கிடக் கூடாது."

"சரி தம்பி... உரம் குடுங்க. ஆட்டு ஏவாரிகிட்டே ரூவா கேட்டுருக்கேன். அவர்கிட்டே வாங்கி... உங்களுக்குக் குடுத்துருதேன்."

"சரிண்ணாச்சி. ஆனா... சொன்ன சொல்லு சுத்தமா யிருக்கணும். அப்புறம் 'அது, இது'ன்னு சொல்லக்கூடாது."

"அப்படியெல்லாம் செய்வேனா? சொல்லுலே என்ன தம்பி இருக்கு? மனசுலே சுத்தமும் நேர்மையும் இருக்கணும். கரெக்டா தாரேன்."

"என்னண்ணாச்சி, உங்களைத்தானே தேடிக்கிட்டு வாரேன்..."

"என்ன தம்பி?"

"முந்தா நாள் காலையிலே ரூவா தாரன்னு உரம் தூக்கிட்டுப் போனீக, இன்னும் பணம் தரல்லியே..."

ஆட்டு ஏவாரி தர்ரேன்னு சொல்லியிருந்தாரு. கோவில்பட்டிச் சந்தைக்குப் போன அவரு, இன்னும் வந்து சேரலே. அவரு வீட்டுக்கு நானும் நூறுதரம் நடந்துட்டேன். இன்னும் வரலே."

"அதுக்கு நா என்ன செய்ய? எனக்குப் பணம் வந்து சேரணும். நா சரக்கு வாங்கப் போகணும்லே?"

"பால் சொஸைட்டி செக்ரட்டரி ஆசைத்தம்பி கிட்டே முன் கூட்டி எரநூறு ரூவா கேட்டுருக்கேன். இன்னிக்கு பேங்க்குக்குப் போய்ட்டு வந்து தர்ரதாக சொல்லியிருக்கான். வந்தவுடனே சாயங்காலம் தாரேன். ஆட்டு ஏவாரி வந்துட்டாலும் அதுக்குள்ளே வாங்கித் தந்துடுறேன். என்ன தம்பி?"

"ம்ச்ள்ச்சும்... வேறன்ன செய்ய...? எப்படியும் சீக்கிரமா குடுங்க."

"உங்களைத் தேடி மூணுநாளா அலையுதேன். ஆளையே பாக்க முடியலியே...?"

நடுவை நடக்குது தம்பி. ஆளுககெடைக்கல. ஆள் பாக்கணும். நாத்தைப் பிடுங்கி நட்டிவைச்சுட்டோம்னா... கவலை ஒழிஞ்சது பாருங்க...”

“நேத்து ராத்திரி அடிச்ச முரட்டு மழை... நடுவைக்குப் பொருத்தமாயிருக்குமே...”

“ஆமா தம்பி, நீங்க உரமுடை குடுத்தீக. நெல்லுக்கும் வெள்ளைப் பயிரு விழாம உரம் போட்டாச்சு. டி.ஏ.பி.யை போட்டு உழவடிச்சு வச்சதாலே, மழை பேயவும் இந்தா நடுவை முடிச்சாச்சு.”

“நீங்க காரியமா முடிச்சுக்கிட்டீக. சாயங்காலம் தாரேன்னு சொல்லி மூணு நாளாச்சு. என்னை ஏமாத்துதீகளே-”

“ஏமாத்து ஒன்னும் இல்லே தம்பி. ஆட்டு ஏவாரி கிட்டேயிருந்து வரவேண்டியது, இன்னும் வந்து சேரலை. மொளகா நாத்து முந்நூறு ரூவாய்க்கு வித்துருக்கு அந்தப் பணமும் கைக்கு வந்து சேரலை. பால் சொஸைட்டி செக்ரட்டரி பேங்குக்குப் போனவன், ‘சொஸைட்டியிலே யிருந்து செக்குவராம, பணம் கிடையாது’ன்னு கை விரிச்சுட்டான். வர வேண்டிய பணம் வந்து சேந்துட்டா... ஒரு நிமிஷம் கூட நிறுத்த மாட்டேன் தம்பி. கடன் குடுத்தாகணும், வழி நடந்தாகணும். நாளைக்கு உங்க முகத்தை எப்படி ஏறெடுத்துப் பாக்குறது?”

“சரி... இன்னிக்குச் சாயங்காலம்மாச்சும் தாரீகளா இல்லே இன்னும் இழுத்தடிக்கப் போறீகளா?”

“சாயங்காலம் எதுக்கு? இந்தாங்க தம்பி, இப்பவே வாங்கிக்கங்க. எம்புட்டு ரூவா? நூத்து எம்பத்தி ஒன்னுதானே? இந்தாங்க எரநூறு”

“மிச்ச சில்லறை இல்லியே...”

"ஓடியா போகுது? நாளைக்குக் குடுங்களேன். நீங்க நல்ல கட்டத்துலே குடுத்து உதவுனீகளே, அதுதானே தம்பி முக்கியம்!"

"நாளைக் கழிச்சுத் தாரேன்னு சொல்லி வாங்கிக் கிட்டு ஏழெட்டு நாளைக்கு இழுத்தடிச்சுட்டீகளே அண்ணாச்சி, யார் வார்த்தையையும் நம்புறதுக்கு இது காலமில்லே!"

"அது உங்க கணக்கு. பால் ரூவாயிலே தாரேன்னு உண்மையை நேர்மையா சொன்னேன். ஒத்துக்க மாட்டே னுட்டீக. என்ன செய்றது, ஏழை சம்சாரிக பாடு இப்படி யிருக்கு. உண்மையைக் கூட நம்ப வைக்குறதுக்கு, இந்தப் பாடுபட வேண்டியிருக்கு... நீங்களும் சரக்குக்குப் போறேன்னு அவசரமா சொன்னீக. போகலே. நேத்துத்தான் போனீக."

"எல்லாரும் மாய்மாலம்தான் செய்ய வேண்டிதிருக்கு."

"என்ன செய்றது தம்பி... உண்மையைச் சொல்லி நேர்மையா வாழணும்ங்கிற நெனைப்பைக் கூட வாழ விடாத ஒலகம் தம்பி! அதுசரி. பூச்சி கொல்லி மருந்து கொண்டு வரப் போறீகளா, தம்பி?"

"நாளைக்கு சரக்குக்குப் போறேன். வாங்கிட்டு வாரேன் அண்ணாச்சி."

"கொண்டு வாங்க தம்பி, களை வெட்டிட்டு மருந்தடிக்கணுமில்லே?"

8

அரும்பு

சாரல் காற்று குளிர்ச்சியை வாரியிறைத்தது. கூதலடிக்கிறது. அப்படியே மூடிக் கொண்டு முடங்கிக் கொள்ள ஆசைப்படுகிற குழந்தை மனசு. 'நிமாண்ட நாழியிலே ரெடியாகு.' சாட்டைக் குச்சியாக மனசுக்குள் குத்துகிற ஏஜெண்டின் குரல்.

உறக்கத்துக்கு ஏங்கித் தவித்த மனசை, அம்மாவின் இருமல் சத்தம் திசை திருப்பி வழி நடத்தியது. அடுப்புச் சாம்பலில் பல்லைத் தேய்த்தாள். கஞ்சியைக் குடித்தாள். தலையில் எண்ணெய் வைத்து, பின்னிக் கொண்டாள். கணக்குச் சிட்டையையும், சில்லறை டப்பாவையும் எடுத்துக் கொண்டாள். சோறு வைத்த தூக்குச் சட்டியை நீட்டினாள், வேலாயி.

பாவம், அம்மா! நோய் அவளைத் துளைத்துத் துவட்டியெடுத்து விட்டது. தசையையெல்லாம் கரைத்துக் குடித்துவிட்டு, எலும்பும் தோலுமாக்கி விட்டது. நிற்கக் கூடத் தெம்பில்லாமல், இடது கையால் சுவரைப் பிடித்துக் கொள்கிறாள்.

"நேத்து எம்புட்டுக் கட்டை அடுக்கினே, செல்லம்?"

"இருவத்தி ஒண்ணும்மா."

"இன்னிக்கு சனிக் கிழமை. நாளை லீவ். திங்கட் கிழமை என்ன செய்யப் போறே?"

அடிபட்டவளாய்த் திகைத்து நிமிர்ந்தாள், செல்வி. சட்டென்று வாடிக் கறுக்கிற பிஞ்சு முகம். சிறு கண்களில் கலக்கம். இமைகளில் ஈர மினுமினுப்பு. எதுவும் சொல்லத் திசையற்றுப் போய், மௌனத்தில் உறைந்தாள்.

வேலாயியின் குலை பதறியது. பெற்ற மனசு பதைத்தது. மகளின் தலையை அன்புடன் தடவினாள். அவள் கண்களில் மாலை மாலையாகக் கண்ணீர்.

"ஏசெண்டுத் தம்பி கண்டிசனா சொல்லிருச்சே..." மனசைப் பிசைகிற வேதனையோடும் புலம்பினாள், வேலாயி. தாயைப் பார்த்து மனம் கலங்கி, பீதியுடன் நிற்கிற எட்டு வயசுச் சிறுமி செல்வி.

'செடிக்குச் செடியா உக்காந்து பறக்கிற தட்டானைப் போல... தெருவுலே ஓடி விளையாட வேண்டிய சின்ன அரும்பு. விடியுறதுக்கு முந்திப் போய், பாடுபட்டு, பொழுதடைஞ்சு இருட்டுனப் பிறகு வீடு வந்து சேருகிற கொடுமை!'

மனக் குமுறல் தாளாமல், மார்பில் மடேரென்று அடித்துக் கொண்டாள், வேலாயி. "அடப் பாதரவே, கூத்துவன் என்னை ஒடிச்சுப் போட்டுட்டு, இப்படிக் கூத்துப் பார்க்கானே! கண்ணு முழியாத இந்தக் குஞ்சு ஒழைச்சுக் காலம் ஓட வேண்டியதாயிடுச்சே... அந்த 'ஒழக்கரிசிச் சீவன்' இருந்திருந்தா... நமக்கு இந்தக் கதி வந்திருக்குமா?"

வேட்டு வெடித்த கிணற்றுப் பாறையில், நசுக்குண்டு இறந்துபோன புருசனை நினைத்தாள். அந்த இழப்பின் கன

பரிமாணம், நொந்து போன இந்த நேரத்தில் முழுசாகத் தாக்கியது. விசும்பினாள்.

அழுது கதறுகிற அம்மாவைப் பார்க்கச் செல்லியின் மனம் சகிக்கவில்லை. முட்டுகிற விம்மலை அடக்கிக் கொண்டாள்.

"நேரமாச்சும்மா... நா போகட்டா?"

"போறீயா? போய்ட்டு வா, கண்ணு. யார் கூடயும் சண்டை கிண்டை போடாம, கருத்தா வேலையைப் பாரம்மா. எல்லாத்தையும் எடுத்துக்கிட்டீயா?"

தலையசைத்து விட்டு வாசல்படியைத் தாண்டிய செல்லியை இருட்டு அப்பிக் கொண்டது. 'நாய் குரைக்குமோ...' பயத்தில் திகைத்துப் போய்த் தேங்கி நின்றாள். நல்லவேளை, மேலத் தெரு முத்துலட்சுமி வந்து விட்டாள்.

"வாரீயா?"

துணை கிடைத்துவிட்டது.

"திங்கட்கிழமைக்கு ஒண்ணும் பதில் சொல்லாமப் போகுது, புள்ளை. என்ன செய்யப் போறாளோ..." அம்மாவின் புலம்பல் சத்தம், காலை நேர அமைதியில் துல்லியமாகத் துரத்துகிறது.

தெருவில் ஒரு சுடு குஞ்சு கூட விழித்திருக்கவில்லை. நாய்கள் கூடக் கூதலடிக்காத இடம் பார்த்துப்போய் முடங்கிக் கொண்டன. அத்துவானக் காட்டில், ஒத்தையில் நடப்பது போலிருந்தது, செல்லிக்கு.

கீழடி வானம் முகம் சிவக்கத் தொடங்கியது. விடிவெள்ளியைச் சாரல் மேகம் ஒளித்துக் கொண்டது.

கிராமத்தையே கதிகலங்கடிக்கிற மாதிரி... விடாத ஓங்காரமாய் ஹாரன் சத்தம். பஸ் வந்துவிட்டது. செல்வி நடையை எட்டிப் போட்டாள். முத்துலட்சுமி நடைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. சிறுமி குட்டோட்டமாய் ஓடினாள்.

ஏற்கெனவே வந்திருந்த பிள்ளைகள், பஸ்ஸுக்குள் ஏறிப் படுத்திருந்தன.

ஓட்டமும் நடையுமாக ஓடி வருகிற இவர்களைப் பார்த்து கண்டக்டர் கோபமாய் அதட்டினார்.

"என்ன, தேரு மாதிரி ஆடியசைஞ்சி வாரீக? விருட்டுன்னு வாங்க. இன்னும் ஏழு ஊர்கள்லே புள்ளைகளை ஏத்திக்கிட்டு, ஆறு மணிக்குத் தீப்பெட்டியாபீஸ் போய்ச் சேர்ந்தாகணும்."

இந்த அதட்டல் உருட்டலெல்லாம் செல்வி மாதிரியான சிறுமிகளிடம்தான். தாவணி போட்ட முற்றிய சிறுமிகளிடம் - பூப்பெய்திய இளம் பெண்களிடம் தொனியே மாறிவிடும். அவர்களிடம் பேசும் போது, எத்தனை நெளிவு... என்னமாய்ச் சிரிப்பு... எவ்வளவு குழைவு!

அதைப் பார்த்தாலே... செல்விக்குப் பற்றிக் கொண்டு வரும். கண்டக்டர் கழுத்துக்கு மேலே ஓநாய் மூஞ்சி இருப்பது போல மனசுக்குள் பயமாகவும் வெறுப்பாகவும் இருக்கும். காறித் துப்பணும் போல மனசில் தோன்றும்.

தீப்பெட்டி யாபீஸுக்குள் போய்விட்டால்... இது போல நிறைய ஓநாய் மூஞ்சிகள்... எச்சில் வடிகிற நாக்குகளோடு ஓநாய்கள்...

செல்வி பஸ்ஸுக்குள் ஏறி உட்கார்ந்தாள். தாராளமாய் இடம் கிடந்தது. அடுத்த ஊரிலேயே சீட்டுகளெல்லாம், நிரம்பிவிடும். அப்புறம் உள்ள ஊர்களில் ஏறுகிற பிள்ளைகளெல்லாம் ஓவர் லோடுதான்!

மாதாங் கோவில்பட்டியைத் தாண்டுகிற போது, பஸ்ஸுக்குள் மூச்சுப் போக இடமிருக்காது. புளிச் சிப்பமாகப் பிள்ளைகள் திணிக்கப்பட்டு, கிட்டிக்கப்பட்டு... வியர்த்து, கசங்கி, திணறி...

சில சமயங்களில் ஒன்றிரண்டு பிள்ளைகள் மயக்கமே போட்டுத் துவண்டு விடும்.

மந்தையாடுகளைப் பற்றிக் கொண்டு வருவதைப் போல... குழந்தைகளை நகர்த்திக் கொண்டு பஸ்ஸுக்குள் அடைத்தார். ஏஜெண்ட் தலைகளை எண்ணிப் பார்த்தார்.

"ஒண்ணு குறையுதே, யாரு?"

"ஆவுடைச்சி."

"அவாதான் சடங்கா (பூப்பெய்து) கிட்டாளே. இன்னும் பானைஞ்சு நாளுக்கு வரமாட்டாளே..." - சொல்லிவிட்டுக் கண்டக்டர் அசிங்கமாகக் குறுநகை செய்தான்.

"ஆமா... நாந்தான் அயத்துட்டேன். அப்பச் 'சரி... வண்டி போகலாம். ரைட்." - ஏஜெண்ட் இறங்கிக் கொண்டார்.

டிரைவர், சாமி படங்களை - ஸ்டீரிங்கை - எல்லாம் கும்பிட்டு விட்டு ஸ்டார்ட் பண்ணினார். கிடங்கும் மேடுமான சாலையில் இடமும் வலமுமாய்ப் பஸ்

ஆடியசைந்து குலுங்கும்போதெல்லாம்... சிறு பிள்ளைகள் குதூகலமாகச் சிரித்தனர்; கை தட்டினர்; "ஹோ... ஹோ" வென்ற மழலைக் கூச்சல்கள்...

எரிச்சலில் நெருப்பாகச் சீறினார், டிரைவர்.

"ஏய் குட்டிப் பிசாசுகளா! என்ன இளிப்பு வேண்டிக்கிடக்கு? வாயைப் பொத்திக்கிட்டுச் சும்மா கிடங்க."

சட்டென்று பஸ்ஸுக்குள் ஏறிக்கொண்ட மௌனத்தின் அழுத்தத்தைத் தாங்க முடியாமல்... டிரைவர் கண்டக்டருடன் பேச்சுக் கொடுத்தார்.

ஜன்னலோரம் உட்கார்திருந்த செல்வி, வெளியே இருட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளைத் 'திங்கட்கிழமை' மிரட்டிக் கொண்டிருந்தது. விலகிச் செல்ல பாதையில்லை. வழிமறித்துக் கொண்டு நிற்கிறது. மென்னியைப் பற்றிக் கொண்டு இறுக்குகிறது.

முந்தா நாள். ராத்திரி எட்டு மணி. இலேசாக சாரல் தூறியது. பஸ்ஸிலிருந்து இறங்கிய செல்வி, ஓட்டமும் நடையுமாய் ஓடி வீட்டுக்குள் வந்து விழுந்தாள். பேயின் இறுகலான பிடியிலிருந்து விடுபட்டுத் தாயின் மடியில் வந்து விழுந்த ஆறுதல். மனசுக்குள் சுகமான ஆசுவாசம்.

என்னமோ விசாரித்த அம்மாவுக்குக் கூடப் பதில் சொல்லாமல், மூலையில் சரிந்து உட்கார்ந்து கொண்டு விரலைச் சூப்பினாள். அதட்ட ஆளில்லாத இடம்.

'நாய்களா, குச்சியடுக்காம என்ன செய்றீக?' என்று கடித்துக் குதறுகிற நாய்கள் இல்லை. வீடு. தாய்மடி போன்ற வீடு. சுதந்திரமாகச் சுகமாக விரலைச் சூப்பினாள்.

அம்மாவைத் தேடிக்கொண்டு ஏஜெண்ட் வந்தார்.

"யக்கா..."

"என்னய்யா, தம்பி!" தள்ளாடித் தவித்து எழுந்தாள், அம்மா.

"செல்லி ஏதாச்சும் சொன்னாளா?"

"இல்லியே... என்னமும் நடந்து போச்சா?" பதறிப் பதைக்கிற அம்மா. ஆறுதல்படுத்துகிற ஏஜெண்ட். விரலைச் சூப்புகிற இன்ப மயக்கத்தோடு பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள், செல்லி. மனசுக்குள் பூரான் ஊர்கிற மாதிரி... மெல்லிய திகில்.

"யக்கா, இப்போ... குளோரைடு கிடைக்க மாட்டேங்குது. ஏகத் தட்டுப்பாடு. நிறையத் தீப்பெட்டியாபீஸ்க மூடிக்கிடக்கு. ஒண்ணு ரெண்டு ஆபீஸ்கள்லேதான் வேலை நடக்குது. வேலைக்கு வர்ற புள்ளைகளைக் குறைக்கச் சொல்லி எங்க மொதலாளி நச்சரிக்காரு..."

வேலாயி திகிலோடு பார்த்தாள். இருமல் வரப் போவதை உணர்கிற போது மனசில் ஏற்படுமே, அதே படபடப்பும், பீதியும்!

"ஆனா... நம்ம கிராமங்கள்லே மழை தண்ணியில்லே வறட்சி. வெள்ளாமை வெளைச்சல் இல்லே. கூலிச் சனங்களுக்குக் காட்டு வேலை ஒண்ணு கூடக் கிடைக்கல்லே.

ஆபிஸ் வேலைக்கு 'நா வாரேன், நீ வாரேன்'னு இவுக அலை மோதுறாக."

"நிலைமை அப்படித்தானே இருக்கு, தம்பி"

"இதுலே இன்னொரு சிக்கல். 'சின்னப் புள்ளைகளை வைச்சு' வேலை வாங்கக் கூடாதுன்னு ஏதோ சட்டம் இருக்காம். அப்பப்ப அதிகாரிமார்க வந்து, புள்ளைக வேலை செய்றதைப் பாத்துட்டு, ஆயிரக் கணக்குலே அவராதம் போட்டுடுறாங்க."

"அடக் கொடுமையே! பெத்தவுகளைக் காப்பாத்தாத சட்டம், புள்ளைக மேலே இரக்கப்பட்டு, திங்குற சோத்துலே மண்ணைப் போடுதாக்கும்? புள்ளைகளைக் கொடுமைப் படுத்த பெத்த தாய்க்கு ஆசையாகவா இருக்கும்? வவுத்துக் கொடுமை... வறுமைப் பொழைப்பு... வேறு புகல் இல்லியே! இதையும் மறிக்கிறாகளாக்கும், பாவிப் பயக?"

"ஆமாக்கா. மொதலாளி கண்டிசனாச் சொல் லிட்டாரு. இந்த வாரத்தோட, நம்ம செல்லி மாதிரியான சின்னப் புள்ளைகளையெல்லாம் நிறுத்தியாகணுமாம்."

எதிர்பார்த்த இடி வேலாயிக்குள் இறங்கியே விட்டது. உள் மனசின் ஆழம்வரை பரவிப் பாய்கிற நடுக்கம். வயிற்றுக்குள் தீக்கோலைச் சொருகுவது போலிருந்தது.

மாடு வைத்து விவசாயம் பார்த்த புருஷன். மாட்டுக்கும் மேலாக ராவும் பகலுமாக உழைத்த புருஷன். எத்தனை விளைய வைத்தாலும், வருஷா வருஷம் மிஞ்சி நின்ற கடன். நிலத்தை விற்று விட்டுக் கூலி வேலைக்குப் போன புருஷன் கிணறு வெட்டிக் கொண்டிருந்த போது வெடித்த

வேட்டில், கருங்கல்லை ரத்தமாக்கி விட்டுப் போய்ச் சேர்ந்த புருஷன்.

நாதியற்றுப் போன குடும்பம். ஓடி வந்து பற்றிக் கொண்ட நோய். உடம்பை ஒடித்துக் கட்டிலில் துடிக்கப்போட்டு விட்ட நோய்.

செல்லியும் வேலை பார்க்கப் போக முடியாமல் போனால்... வீட்டில் எப்படி அடுப்புப் புகையும்?

நெஞ்சை முட்டிப் பிளக்கிற சோகம். தாட்சண்யம் பாராமல் சப்பென்று அறைகிற அவலம். கண்ணுக்குள் குத்தலெடுக்க, மாலை மாலையாகக் கண்ணீர். உதடுகள் நடுங்கித் துடித்தன.

"தம்பி, வாரத்துக்குத் தொண்ணூறு ரூவா இந்தப் புள்ளை கொண்டு வருது. இதுலேதா ரெண்டு ஜீவனோட ஜீவனம் நடக்குது. இதுக்கு ஒரு மாத்து யோசனை இல்லியா... ய்யா?"

"இருக்கு... ஆனா, நீங்க செய்யணுமே?"

"சொல்லுய்யா..."

"நம்ம செல்லி சின்னப் புள்ளைதா. இருந்தாலும் சும்மாவாச்சும் தாவணியைச் சுத்தி அனுப்புங்க, மத்ததை நா பாத்துக்கிடுதேன். யக்கா, மனசிலே ஞாபகம் வச்சுக்கங்க. தாவணி போட்டா, திங்கட்கிழமை வரலாம். இல்லேன்னா... நின்னுக்கிட வேண்டியதுதான்."

ஏஜெண்ட் போய் விட்டார். வேலாயி வேரறுந்தவளாக அப்படியே சுவரில் சாய்ந்தாள். குத்துக்கால் வைத்துச் சரிந்து

உட்கார்ந்துவிட்டாள். குமுறிக் குமுறிச் சத்தமில்லாமல் அழுதாள். உடம்பெல்லாம் நடுங்கிக் குலுங்குகிற கோரம்.

'இப்படியும் ஒரு வங்கொடுமையா? அதுக்குரிய வயசு வராமெ, விரலைச் சூப்புற புள்ளைக்கு எப்படித் தாவணி போடுறது? ஊரையழைச்சு, உறவைக் கூப்பிட்டு, விருந்து வைச்சு, தாய் மாமன் சீர் வரிசையோட, கூடுன கூட்டத்துலே போட வேண்டிய தாவணியை... சட்டத்தை ஏமாத்துறதுக்காக எப்படிப் போட? ஐயோ... எம்புள்ளைக்குமா, இந்தக் கதி? அடக் கடவுளே, எளியவங்க பொழைப்பை எதுக்கு விதி, இப்படி பிய்ச்சுப் பிடுங்கிப் போடணும்?'

உள் மனசைச் சுட்டுப் பொசுக்குகிற அக்கினிக் கொழுந்துகளாக நினைவுகள். நினைக்க நினைக்க உள்ளுக்குள் ஏதோ ஒன்று உடைந்து நொறுங்குகிறது... கோவென்று வெடித்து அழத் துவங்கியபோது, இருமலும் ஆரம்பித்துவிட்டது. வாடிப்போன மரத்தை ஆட்டிப் பிடுங்குகிற புயலாக, இருமல், இருமல்... இருமல்கள்...

அம்மாவின் அழுகையையும் இருமலையும் பார்க்கப் பார்க்கச் செல்லிக்குள் அழுகை விம்மிக்கொண்டு பீறிடுகிறது. நாசி நுனி துடிக்கிறது. காந்தலெடுக்கிறது. கண்களில் ததும்பித் திரை போடுகிற கண்ணீர்...

அந்தப் பிஞ்சை, தாவணி அச்சுறுத்தியது. உள் மனசின் மெல்லிய ஐவ்வுகளைப் பற்றி இழுத்தது. நினைத்தாலே திகிலில் மனசு துடிக்கிறது.

பூப்பெய்தாத பெண்ணைக் கல்யாணத்திற்கும் உடலுறவுக்கும் நிர்ப்பந்தப்படுத்துகிறபோது ஏற்படுவதைப்

போல... வினோதமான அவமான உணர்ச்சி, செல்வியைக் கசக்கியது.

இயல்பாக நிகழ வேண்டிய மலர்ச்சியை... ஊர் வேஷத்திற்காகக் கசக்கிப் பிழிந்து மலர வைக்கிற வேதனை. தாயிடம் கூடச் சொல்லியழ முடியாத ரகசிய உணர்ச்சி யவஸ்தை. அவளைத் திக்கு முக்காட வைக்கிற கொடிய அவஸ்தை.

'ஊஹுா்ம்... ம்... செத்தாலும் சரி... இப்ப நா தாவணி போடவே மாட்டேன். சம்மதிக்கவே மாட்டேன். என்னாலே முடியாது... முடியவே முடியாது... அதைவிட உசுரை வுட்டுருவேன்...

ஞாயிற்றுக் கிழமை கனமாய் நகர்கிறது. அந்த இரண்டு ஜீவன்களையும் மௌனச் சோகத்தில் அரைத்துக்கொண்டு நத்தையாக ஊர்கிறது.

திகிலும் பீதியுமாய்... வேதனையும் விசும்பலுமாய் வீடு மூன்றாவது ஆளாய் வந்து உட்கார்ந்து கொண்டு பேயாட்டம் போடுகிறது, அவலம்.

முகம் செத்துக் கிடக்கிற மகளைப் பார்த்தாள், வேலாயி. சிறிய கண்களில் பீதி வெட்டுண்ட பல்லி வாலாகத் துடிக்கிற இமைகள். பார்க்கவே பாவமாக இருந்தது. 'இந்த அரும்பை அடகுவைச்சா... நாம உசுர் வாழணும்?'

செல்வியும் அம்மாவையே பார்த்தாள். அம்மா, தாவணி போடச்சொல்லி வற்புறுத்தினால்... மறுத்துவிடத்

தயாராக இருந்தாள். பணிந்து விடக்கூடாது என்ற வீறாப்பு. மனசுக்குள் ஒரு விறைப்பு.

"செல்வி..."

"என்னம்மா?"

"நாளை நீ வேலைக்குப் போகவேண்டாம்மா..."

"......?"

"ஒன்னைக் கேவலப்படுத்தி அடகுவைச்சு, மூளியலங் காரம் பண்ணி... நா கஞ்சி குடிக்க வேண்டாம். நாம உசுரு வைச்சு இருக்கவும் வேண்டாம்மா..."

"ஏம்மா?"

"பூக்க வேண்டிய அரும்பைப் புடிச்சு நசுக்கி மோந்து பாக்குற பாவத்தைச் செயறதுக்கு, இந்தத் தாய் மனசுலே தைரியமில்லேம்மா"

"விதி நம்மளை எப்படி விட்டிருக்கோ... அப்படியே நடக்கட்டும், கண்ணு. நீ நாளையிலேருந்து வேலைக்குப் போகவேண்டாம்."

தாயின் முகம் முன்னைவிடப் பிரகாசிப்பது போலிருந்தது செல்விக்கு. அந்தக் கண்களில் பொங்கித் ததும்பிய பரிவு... வறுமையில் நீர்த்துப் போகாத தன்மானம்... வாழ்க்கைக்குப் பணிந்து போய்விடாத பாச வைராக்கியம்...

செல்வி துவண்டு விட்டாள். மனசுக்குள்ளிருந்த விடைப்பு... விறைப்பு, வீறாப்பு எல்லாம்... தாயின் பாசக் கண்ணீரில் நனைந்து... மனசே தளர்ந்துபோய்...

அடிபட்டவளைப் போல கோவென்று அழுதாள். புறங் கையால் கண்ணைக் கசக்கிக்கொண்டு விம்மி விம்மியழுத அந்தக் கண்ணு முழியாத பச்சை மண்ணை, மடியில் இழுத்துப் போட்டுக்கொண்டு கதறியழுதாள் வேலாயி.

முத்துலட்சுமி இருட்டில் வந்து கொண்டிருநதாள். வாசலில் திகைத்துப் போய் செல்வி.

"என்ன செல்வி, வேலைக்கு வரல்லியா?"

"வாரேன்" உயிரில்லாமல் முனங்கினாள்.

"தாவணி?"

"மடிச்சு கையிலே வைச்சிருக்கேன். பஸ்கிட்டே போய் போட்டுக்கணும்" சத்தமில்லாத தெருவில், சத்தமில்லாமல் நடந்தனர்.

இழவு வீட்டுச் சங்காக அலறுகிறது தீப்பெட்டியாபீஸ் பஸ்ஸின் ஹாரன்.

ஒரு பிரேதத்தைப் போல... அடங்கிப் போன சலனங்களுடன் நடந்தது, அந்த அரும்பு.

9

நாணயன்

கிட்டக்கிட்ட நெருங்கிவந்து பயம் காட்டுற தைப் பொங்கல்.

மரங்களை விலை பேசி விறகாக்கி, செங்கற் சூளையில் எடை போட்டுத் துட்டாக்கித்தான் வயித்துச் ஜீவனம். விறகுக்குப் பணம் வருவதில் இந்தத் தடவைதான் இந்த இடைஞ்சல்.

ரவ்வும் பகலுமா யோசனை. மனசைப் போட்டுப் புரட்டிப் புண்ணாக்குகிற யோசனை. கண்ணுலே ஒறக்கத்தை ஒண்ட விடாம நச்சரிக்கிற யோசனைகள்...

எம்புட்டுக் கொறைச்சு எடுத்தாலும் நானூறு ரூவா ஆகுமே! யாருகிட்ட கேக்க? எப்படிக் கேக்க? கேட்டா என்ன நெனைப்பாக...

மனசுக்குள்ளேயே மருகி மருகி யோசிச்ச பிறகு -

கடைசியிலே பக்கத்தூர்லே ஜவுளிக்கடை வைச்சிருக்கிற ராமச்சந்திரன் கிட்டே போனான். தனிப்பட்ட அந்தரங்கமா பேசினான். நிலைமையைச் சொன்னான்.

“அண்ணாச்சி, நம்ம கடை ரொம்பச் சின்னக்கடை. அம்புட்டுத் தொகைக்கெல்லாம் கடன் குடுக்க முடியாதே...”

"இல்லே தம்பி, இந்த ஒரு தடவை நீங்க கட்டாயமா குடுத்து உதவணும். வேற பெரிய கடைகள்லே போய்க் கேக்க கூச்சமா இருக்கு. நீங்க குடுங்க தம்பி; தை பத்தாந் தேதிக்குள்ளே எப்படியும் கணக்கை முடிச்சிருவேன் தம்பி."

"நீங்க முடிச்சிருவீக. இம்புட்டு கடன் தர்ரளவுக்கு ஏங்கிட்டே சக்தி இல்லியேன்னு யோசிக்கேன் அண்ணாச்சி."

"நீங்க என்னை நம்பினா... உதவணும்."

"ஐயய்யோ, உங்களை நம்பாம வேற யாரை நம்பப் போறேன்? வாங்குன கடனை நெனைச்சுப் பாக்காம, வல்லங்கம் பேசற இந்தக் காலத்துலே... சொன்னா சொன்னபடி நடக்குற உங்களை நம்பாம இருப்பேனா?"

"நம்பிக்கை இருந்தா... குடுங்க. தை பத்தாந் தேதிக் குள்ளே தலையை அடகு வைச்சாச்சும் உங்க கையிலே ரூவாயைக் குடுத்துருவேன் தம்பி."

தலை மேலே சுமையாக வந்து ஏறிக்கிட்ட தைப் பொங்கலை நகர்த்தி விட்டாகணும்ங்கிற வெறியிலே வேகத்துலே - வார்த்தைகள் அவசரமாய் ஓடி வந்தன.

"தை அஞ்சாந்தேதி வந்து ரூவாயை மொத்தமா வந்து வாங்கிட்டுப் போ," என்ற சூளைக்காரரின் வாக்குறுதி இவனது வார்த்தைகளுக்கு வலுவான பக்கபலமாக நின்றது.

கடைக்காரன் ராமச்சந்திரன். தவித்தான். சித் தெறும்புக்குச் சோத்துப் பருக்கைகூட பெருஞ்சுமைதானே! சின்னச்சாமி கடன் கேட்கிற தொகையை நினைத்தால் மலைப்பாக இருந்தது. நாணயஸ்தன் சின்னச்சாமி

வார்த்தையைத் தட்டவும் முடியவில்லை. அரிச்சந்திரன் வாக்கை சந்தேகிக்க முடியுமா? சந்தேகிக்கவே முடியாத ஒரு விஷயத்தை நிராகரிச்சிட முடியுமா?

அரை மனசோடு உள்ளுக்குள் திணறிக் கொண்டே துணிமணிகளை எடுத்துப் போட்டான்.

“ரொம்பப் பயம் காட்டிய தைப் பொங்கல். சிரமமில்லாமல் நகர்ந்தது. புதுத்துணிகளை உடுத்திக்கிட்டு உல்லாசமா - சந்தோஷமா சிரிச்சு மகிழ்ந்த புள்ளைகளைப் பார்த்துப் பார்த்துப் பெருமைப்பட்டான். புதுச் சட்டையை யும், புதுப் பாவாடையையும் புள்ளைக காட்டிக் காட்டி பெருமையிலே பூரிச்சு நின்னதுக. பார்வதி புதுச் சேலையில் அஞ்சு வயசு குறைஞ்சு, புது அழகுலே நின்றாள். சிறகு விரிச்சு வண்ணத்துப் பூச்சியாய் ஓடியாடித் திரிஞ்ச கடைக்குட்டி முருகேசன்.

இவனுள் ததும்பி வழிஞ்ச தைப்பொங்கல் சந்தோஷம்...

சைக்கிளைத் துடைத்து, எண்ணெய் போட்டு, ஹாண்டில் பாரில் ‘கண்ணுப்பிள்ளைச் செடியைக் கட்டி, பெருமிதமாய் ஊரைச் சுத்தி கொண்டாடி முடிச்ச மறுநாளில்தான் அரிச்சந்திர சின்னச்சாமிக்குக் குரூர முகம் காட்டி சிரிச்சது சோதனை.

தைத்திருநாளன்னிக்கு, ‘வலிக்குது’ன்னு நெஞ்சைப் பிடிச்ச சூளைக்காரர், மூடிமுழிக்கும் முன்னே கண்ணை மூடிட்டாராம். வாங்குன கடன், குடுத்த கடன் எதைப் பத்தியும் சொல்ல மதியில்லாம போய்ச் சேர்ந்துட்டாராம்.

சேதி கேட்ட சின்னச்சாமி கதிகலங்கிப் போனான். நாணயஸ்தன்ங்கிற பேரே ரிப்பேராகி விடுமோன்னு பதறிப் பதைச்சான்.

கருமாதி முடியவே தை இருபதாகிப் போச்சு. கருமாதி முடிஞ்ச கையோடு புள்ளைகளுக்குள்ளே சொத்துச் சண்டை தூள் பறக்க ஆரம்பிச்சிடுச்சு. விறகுப் பாக்கி பணம் கேட்டு போய் நின்ற இவனை, 'ஏனென்று கேக்க ஒரு நாதியில்லை.' இவனுக்கும் யாரிடம் கேக்கிறதுன்னு புரியலே. தொகை பெரியதாச்சே!

கை வந்து சேருமாங்கிற கேள்வி திகிலா எழுந்தது.

மரத்துக்காரனுக்குப் பணம் எப்படிக் கட்டறது? ராமச்சந்திரனுக்கு எப்படி நல்ல புள்ளையாகிறது? தை பத்துக்குள்ளே தலையை அடகு வைச்சாச்சும் தீர்ப்பதாகச் சொன்ன கணக்கு இவனை உறங்கவிடாமல் தவிக்க வைத்தது.

தை முப்பது முடியப்போகுது. என்ன செய்றது?

"பெரிய யோக்கியன் மாதிரி பேசி கடன் வாங்கிக் கிட்டுப் போனாரய்யா... இன்னும் ஆளையே கண்ணுலே காணலே. தலையை யாரும் அடகு வாங்க மாட்டேங்குறா களோ..." என்று ராமச்சந்திரன் ஊர் ஊரா கிண்டலாகச் சொல்லி அங்கலாய்ப்பதாக ஒரு பிரமை. மனசின் நிம்மதியை மென்று திங்கிற விதம்விதமான கற்பனைகள்...

ரவ்விலும் இமைகள் ஒட்ட மறுத்தன.

சூளையில் வரவேண்டிய ரெண்டாயிரத்துச் சொச்ச பணத்தை வாங்காமல் விட்டுட முடியுமா? பெரிய பெரிய

மனிதர்களிடம் வழக்கைச் சொல்லி, பஞ்சாயத்து வைச்சு, சாட்சிகளைக் கொண்ணாந்து நிறுத்தி, நாட்கணக்கில் விவகாரம் நடந்து, 'பங்குனி கடைசியில் பணம் தருவது' என்று ஒப்பந்தமாச்சு.

மரத்துக்காரனைப் பாத்து விபரத்தைச் சொல்லி 'சித்திரை அஞ்சுலே பணம் தர்றதாக' தவணை வாங்கியாச்சு, ராமச்சந்திரனை எப்படிப்போய் பார்ப்பது? எந்த மூஞ்சியோட போய் பேசுறது?

நினைச்சாலே மனசு கூசிக் குறுகுது.

"நீயும் ஒரு மனுசந்தானா? சோத்தைத்தான் திங்கிறீயா?"ன்னு கேட்டுட்டா... என்ன செய்றது? நாக்கைப் பிடுங்கிக்கிட்டுச் சாகவா முடியும்?

பாவம், அவனும் சின்னக் கடைக்காரன். அலமாரி யிலே தனித்தனியா அடுக்கி வைச்சிருக்கிற துணிகளை யெல்லாம் அள்ளிப் போட்டா... ஒரு பொட்டலத்துக்குள்ளே அடங்கிப் போகும்.

'அம்புட்டு தொகைக்குக் கடன்விட ஏங்கிட்டே சக்தியில்லியே'ன்னு அவனும் மருகித் தவிச்சானே. இவன் தானே வற்புறுத்தி வாங்கிக்கிட்டு வந்தான்...

சரி, சோதனை இத்தோட முடிஞ்சதுன்னு போச்சா? அதுதான் இல்லே. மாறி மாறிச் சோதனைகள். பட்ட காலிலேயே பட்டு, கெட்டகுடியே கெட்டு... தொட்ட காரியமெல்லாம் பித்தளையாகி... ச்சே!

பார்வதிகிட்டே கெஞ்சிக் கூத்தாடி, காதுலே கிடந்த கம்மலை வாங்கிக்கிட்டு அடகு வைக்கப் புறப்பட்டான்.

ராமச்சந்திரனுக்காச்சும் நல்ல புள்ளை யாகணும்ங்கிற தவிப்பு; பதைப்பு; பரபரப்பு.

கல் பதிச்ச கம்மலை எந்தப் பேங்குலே அடகு வாங்குறான்? ஊர் ஊரா அலைஞ்சு ஒரு வட்டிக் கடை வாங்கல்காரனிடம் மூணு பைசா வட்டி பேசி, கம்மலுக்குப் பணம் வாங்கி ஊருக்குள்ளே நுழைஞ்சா...

விதியைப் போல வாயைப் பிளந்துக்கிட்டு நின்னது இழவுச் சேதி.

பார்வதியோட அய்யா போய்ட்டாராம்! தள்ளி வைக்கக் கூடிய சாதாரண துஷ்டியா...? பெரிய சாவு! அதிலும் பெண் குடுத்த மாமனார் சாவு!

கம்மல் பணம், காரு பஸ்ஸு டிக்கெட் என்று கரைஞ்சு முடிஞ்சது.

உள்ளுக்குள் இவன் உடைஞ்சு கலங்கிக் கரைஞ்சான்.

சின்னச்சாமி மனசுக்குள்ளே நெருஞ்சிமுள்ளா ராமச்சந்திரன். எந்நேரமும் உறுத்துகிற நெருஞ்சிமுள்ளு. சுருக் சுருக்கென்று குத்தித் தன்மானத்தைக் கதற வைக்கிற நெருஞ்சிமுள்ளு.

பகலோட கையைப் பிடிச்சுக்கிட்டு ராவும், இருட்டின் வாலைப் பிடிச்சிக்கிட்டுப் பகலுமாய் நாட்கள் அரவமில்லாமல் நகர்கின்றன.

சும்மா இருந்தா முள்ளை எடுக்க முடியுமா?

வீட்லே கட்டிக் கிடந்த வெள்ளாட்டை விலை பேசி முடிச்சாச்சு. ஏவாரி ரூவாயைக் குடுத்துட்டு ஆட்டைப் பிடிக்க வந்திருந்தான்.

"ரெண்டு ரோமத்தைப் பிடுங்கிக்கோ!"

சிரத்தை இல்லாமல் ரெண்டு விரலுக்குள் அகப்பட்ட ரோமங்களைப் பிடுங்கிக் கூரையில் சொருகிக் கொண்டான். சாஸ்திரம். ஆட்டை வித்தாலும், இந்த வீட்லே கால்நடை யோகம் தொடர்ந்து இருக்கணுமாம். அந்த யோக வித்துதான் இந்த ரோமங்கள்.

ஆடு போயிருச்சு. அது நின்ன இடம் சாண வீச்சமும் மூத்திர நாற்றமுமாய் - சூன்யமாய் - மனசை உறுத்துகிற சூன்யமாய்.

பெருமூச்சோடு புறப்பட்டான். சைக்கிளை எடுத்தான். 'ராமச்சந்திரனைத் தேடி ரூபாயைக் குடுத்துரணும்!' சைக்கிளை நகர்த்தி, பெடலில் காலை வைச்சபோது -

வீட்டுக்குள் பார்வதி பயத்தோட கதறிக் கூப்பாடு போட்டாள்.

"ஐயய்யோ... இங்க வாங்களேன்... எம் புள்ளையைப் பாருங்க... ஐயய்யோ எம் மவனுக்கு என்னமோ செய்யுதே..."

மனசின் உள் நரம்புகளை அதிரச் செய்கிற கதறல்!

சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டுக்குள் ஓடினான். பார்வதியின் மடியில் முருகேசன். பறவையாடாமல் நிலைச்ச முழி. கோணிக்கொண்டு போகிற வாய். வெட்டி உதறுகிற கைகால்கள். கடைக்குட்டியாய், பூங்கொத்தாய் பொறந்த ஒரேயோர் ஆம்பளைப் புள்ளை. சாவோட மல்லுக்கட்ட முடியாமல் காலும் கையும் தனித்தனியா துடிச்சிக் கிட்டிருக்கான்.

கிராமமே அந்த வீட்டுக்குள்ளே, அலையக்குலைய ஓடித்திரிகிற பெண்கள். ஆளுக்கொரு கைப் பக்குவம் செய்கிற பரபரப்பான கிழவிகள்.

"வேப்பெண்ணெய் வாங்கிட்டு வா, வடபூடு கொண்டா."

"குருதைலம் எடுத்துட்டு வாடி..."

"அரப்பு, நா எடுத்துட்டு வாரேன்!"

"கிண்ணத்துலே மூத்திரம் பிடிச்சிட்டு வாரேன்."

"உள்ளங்கால்லே தேய்."

"வெங்காயத்தை மென்னு காதுலே ஊது."

ஆளுக்கொரு உத்தரவுகள். யாரையும் எதிர்பாராமல் புயலாய்ச் சீறுகிற மனிதர்கள். சிறகு கட்டிக் கொண்டு பறக்கிற வேலைகள். ஒரே மனிதமாய் உறைந்து, பதைத்துச் செயல்படுகிற மனிதர்கள்!

ம்ஹூம்! எதற்கும் மசியாத ஜன்னி. வீட்டின் மூலை முடுக்குகளில் நின்று மிரட்டுகிற சாவின் கொடிய நெடி. எட்டு வயசுச் சிறுவனிடம் மல்லுக்கு நிக்கிற மரணம்!

'புள்ளையை உசுரோட பாக்க முடியாதோ' என்கிற திகில்! ஒற்றைப் புள்ளை. மூன்று பெண் குழந்தைகளுக்குப் பிறகு பிறந்த ஆண்பிள்ளை. திருச்செந்தூர் முருகனுக்கு நேர்த்திக்கடன் போட்டு, தவம் இருந்து பெற்றெடுத்த முருகேசன்.

ராஜபாளையம் ஆஸ்பத்திரியில் வெள்ளாடு வித்த பணம், ஊசியும் மருந்தும், பீசுமாய் கரைஞ்சு முடியவும், முழுசாக முருகேசன் வீடு வரவும் சரியாப் போச்சு.

மாசி பொறந்து, தேதி பதினைஞ்சு ஆச்சு. சின்னச்சாமி மனசுக்குள்ளே திகில். ஒரு நிமிடம் கூட விடாமல் உறுத்திக் கிட்டேயிருக்கிற நெருஞ்சி முள்ளு; ராமச்சந்திர முள்ளு.

இதுலே ராமச்சந்திரன் போக்கே வேறு, இவனை ரொம்ப அவஸ்தைப்படுத்துது. உள் மனசுக்குள்ளே செருப்பால் அடிபடுகிற அவமானம்.

எதிர்ப்படுகிற நேரங்களில் "என்னண்ணாச்சி 'தை பத்து'ன்னு தவணை சொன்னீகளே, நாளாச்சே. அந்த ரூவாயைத் தரக் கூடாதா"ன்னு வாயைத் திறந்து ஒரு வார்த்தையாச்சும் கேக்கக் கூடாது? பாவி!

அப்படிக் கேட்டால்... ஏதாச்சும் பதிலை - நடந்த சமாச்சாரங்களை - சொல்லிடலாமே! சொன்னால், இவன் மனசின் ஆற்றாமையாச்சும் குறையுமே! மனப்பாரம் கொஞ்சம் இறங்குமே!

பாவிப்பயல்... அதற்கும் ஒரு வாய்ப்பு தர மாட்டேங்குறானே...

அவனது ஊரில் பார்த்தால் "வாங்கண்ணாச்சி" என்பான். அத்தோட சரி. மறுவார்த்தை பேச மாட்டான். வேறு இடங்களில் எதிர்ப்பட்டால்... முகத்தில் ஒரு சிரிப்பு. பரிச்சயமானவர் என்பதற்கு அடையாளமான அந்த அறிமுகச் சிரிப்பு, அம்புட்டுதான்!

ஊமையாக மௌனம் சாதிச்சு உசுரைக் குத்திப் பிடுங்குகிறானே!

சிரிக்கிற சிரிப்பிலே... 'ஒன்னோட யோக்கியதை இம்புட்டுத்தானா' என்று மனசைக் கிழிக்கிறானே! 'நீதான்

அரிச்சந்திரனாக்கும்' என்று ஊரதிர அவன் இளக்காரமாய்ச் சிரிக்கிற மாதிரி ஒரு பிரமை.

இவனுள் கலக்கம். அவனது மௌனத்தை நெனைக்க நெனைக்கச் சின்னச்சாமிக்குள் மயான காண்டம்!

தைப்பொங்கல் சந்தோஷத்துக்கு விலையாக இம்புட்டுப் பெரிய காயம் ஏற்படுமின்னு இவன் கனவுலே கூட நெனக்கலியே... இத்தனை காலமா சிரமப்பட்டு சம்பாதிச்ச "விறகு வெட்டி அரிச்சந்திரங்'கிற பேரையே... தைப்பொங்கல் முழுங்கி மூளியாக்கிடும்னு நெனைக்கலியே...

சின்னச்சாமிக்குள் வாட்டி வதைக்கிற பயம். கடனை அடைக்க எடுத்துக்கிட்ட முயற்சிகளெல்லாம் சறுக்கி, சறுக்கி... இவனையும், நாணயஸ்தன்கிற பேரையும் அதள பாதாளத்தில் அமுக்கப் பாக்குதே வாழ்க்கை.

சகல பாதைகளும் அடைபட்டுப் போன பிறகு, வேற வழியேயில்லைங்கிற விளிம்புலே... உசுருக்கு உசுரான சைக்கிளை வித்துட வேண்டியதுதான்னு முடிவுக்கு வந்துட்டான்.

சைக்கிள் எல்லாருக்கும் ஓர் இரும்புக் கழுதை. மிதிச்சா நகர்கிற வாகனம். இவனுக்கு அப்படியல்ல. அது இவனது உயிர். மானம். அதுக்கும் மேலே.

இவனைப் பொறுத்தவரை சைக்கிள்ங்கிறது, குடும்பத்துலே விளக்கேத்தி வைச்ச குலதெய்வம். இவனது உள் ஆற்றல்களையே இவனுக்கு அறிமுகப்படுத்தி வைச்ச அபூர்வ சமாச்சாரம்.

நாதியத்தவனா - வேரறுந்த கொடியா - அலைஞ்சு திரிஞ்சவன் டீக்கடைகளிலும் பலசரக்குக் கடைகளிலும் உடம்பு வளையாத வேலைகளாகப் பார்த்துப் பழகிவிட்டு, கிராமத்துக்கு வந்த இவனுக்குப் பார்வதியை 'மூய்த்து' வைத்தார்கள்.

இவனுக்கேத்த தொழில் எதுவும் இந்தப் பட்டிக் காட்டிலே அமையலே. காட்டுவேலை செய்றதுக்கு உடம்பு வளைய மறுத்தது. நாளும் பொழுதும் அவலமும் கேவலமுமாய் நகர்ந்தது. பார்வதி உழைப்பிலே இவனது வயிறும் நிறைய... மனசு குமைந்தது. நமைச்சலெடுத்தது.

கொய்யாப் பழம் ஏவாரமாச்சும் செய்யலாம்னு ஒரு சைக்கிள் வாங்குறதுக்கு அலைஞ்சான். சைக்கிள் விலைக்குக் குடுத்த புண்ணியாளனே தொழிலுக்கும் ஒரு வழியைக் காட்டினாரு.

"நம்ம கருசக்காடு ஏழு குறுக்கம். பூராவும் வேலிக் கருவேலிதான். அதை வெட்டிக் காலி பண்ணித்தாரீயா?"

"அம்புட்டுக்கு ரூவாயில்லியே..."

"விறகைக் காசாக்கிட்டு வந்து பணத்தைக் குடு."

"அப்ப சரி."

இந்த சைக்கிளைத் தொட்ட பிறகுதான் கைக்கு வந்து சேர்ந்தது தொழில். தொட்டதெல்லாம் பொன்னாக துலங்கிச்சு. அட்ரஸ் இல்லாமல் கிடந்த இவனுக்கு. ஒரு பேர், மரியாதை, கையில் நாலு காசு, விறகு வெட்டி அரிச்சந்திரன்கிற பேரு எல்லாம் வந்துச்சு.

இவனுக்குள் கிடந்த இன்னொரு சின்னச்சாமி, வீர்யமா வெளிப்பட... இவனே அசந்து போய்ட்டான்.

சைக்கிள் சீட் மேலே எவரையும் முழங்கை போட விடமாட்டான். சண்டைக்கே போய் விடுவான். ஒருதுளி மழை கூட அதன் மேல் விழச்சம்மதிக்க மாட்டான். மேலும் புதுசு புதுசா சாமான்கள் வாங்கிப் போட்டு அழகு பார்ப்பான்; அழகு படுத்துவான்.

சைக்கிளாலே இவனுக்கும் பார்வதிக்கும் இடையிலே வந்த சண்டைகள் கொஞ்சமில்லே.

"கட்டின பொண்டாட்டியை விட இந்த இரும்புக் கழுதை ஓமக்கு ஒசத்தியாப்போச்சா?"ன்னு ஆங்காரமாய்ப் பார்வதி கேட்டால்... அலட்சியமாய்ப் பதில் சொல்வான்.

"அதுலே என்ன சந்தேகம்? ஒன்னைவிட, என்னைவிட என் சைக்கிள்தான் எனக்கு ஒசத்தி."

அவனுக்கு சைக்கிள் துருப் பிடிக்கிற இரும்பல்ல, குலதெய்வம். அவனது உயிர், மானம். அதுக்கும் மேலே...!

ராமச்சந்திரனுக்கு நல்ல பிள்ளை யாகணுமேங்கிற நிர்ப்பந்தத்துலே... அதையே விலை பேசத் துணிஞ்சிட்டான். மனசுக்குள்ளே அவஸ்தை, உயிரைப் பிரிகிற அவஸ்தை.

நானூறுக்கும் நானூற்றைம்பதுக்குமாய் ரொம்ப நேரமாய் இழுத்துக்கிட்டுக் கிடந்தது பேரம். தீருகிறதாய்த் தெரியலே. கடைசியில் ஒரு தரகர் தலையிட்டு, தென்காசி வழக்காகப் பேசி, 425ன்னு முடிச்சு வைச்சாரு. 25 ரூபாய் அட்வான்ஸ் கைமாறியது. நாளை மறுநாள் முழுப் பணத்தை யும் தந்துவிட்டு சைக்கிளை எடுத்துக்கொள்ளப் பேச்சு.

இவனுக்குள் வந்து உட்கார்ந்து கொண்ட சூன்யம், ஆற்றல், பண்பு, தன்னம்பிக்கை சகலமும் பறிபோகப் போவதாக மனசுக்குள் திகில்... பீதி...

அவனையும் மீறிக்கிட்டுக் கண்ணுக்குள் உறுத்தல். இமை ரோமங்களில் ஈரச்சுமை. மட்டியைக் கடிச்சு தன்னைக் கட்டுப்படுத்திக்கிட்டான்.

முழுத்த ஆம்பளை அழக்கூடாது... அது கேவலம்!

ரூவா வந்தவுடனே ராமச்சந்திரனைத் தேடிப்போய்... கணக்கை முடிச்சுட்டு வரணும்.

மானம் மரியாதையைக் காப்பாத்துன அவனோட நல்ல மனசுக்கு, வாய் மணக்க, நெஞ்சு இனிக்க நல்ல வார்த்தை சொல்லிட்டு வரணும்.

நாக்கைப் பிடுங்கிக்கிடுற மாதிரி, நாலு வார்த்தை பேசிடாம, பார்த்தும் பாராம, மௌனமா, கண்ணியமா இருந்தீயே... ராமச்சந்திரா! நீ நல்லா இருக்கணும். ஒம்புள்ளை குட்டிக நல்லா இருக்கணும். ஒன்னோட வம்சமே தழைச்சு துலங்கணும்!

மறுநாள்.

மதியமிருக்கும். வேப்பமர நிழலில் ஒத்தையாளா உட்கார்ந்திருந்தான் சின்னச்சாமி. வெத்தலை போட்டுக் கிட்டுருந்தான். சைக்கிள் 'ஸ்டாண்ட்' போட்டு கம்பீரமாய் நின்றது.

'நாளையிலேயிருந்து இந்தக் குலதெய்வம் இன்னொருத்தன் கையிலே.'

நெனைச்சா... மனசுக்குள் 'பகீர், பகீர்' என்கிறது. பலதுகளையும் நெனைச்சு மனசுக்குள்ளேயே மருகிக்கிட்டு இருக்கிறபோது -

ராமச்சந்திரன் சைக்கிள்லே வந்து இறங்கினான். நேராக வந்தான்.

"வாங்க தம்பி..."

மரியாதைக்குக் கூட "ஆமண்ணாச்சி"ன்னு சொல்லலை. தலையைக்கூட ஆட்டலை. எங்கோ அடிபட்டுத் திரும்பிய பந்தாக ராமச்சந்திரன் முகத்தில் ஒரு விறைப்பு; கடுப்பு. கால்படி கடுகைப் பொறிச்சிடலாம். அம்புட்டு கடுகடுப்பு.

சின்னசாமிக்கு முகம் கறுத்துப்போச்சு. மதிச்சு மாலை போடப் போனவன் மூஞ்சிலே காறித்துப்புன மாதிரி இருந்துச்சு.

இத்தனை நாளா பார்த்தும் பாராம... மௌனமா இருந்த இவனுக்கு இன்னைக்கு என்ன நேந்துச்சு. ஏனிப்படி எடுத்தெறிஞ்சு பார்க்கிறான்? எங்க அடிபட்டுட்டு, இந்தப் பந்து இம்புட்டு வேகமா வருது?

ரொம்பக் காலம் ஊமையாயிருந்த ராஜாமகன் "ஏம்மா நீ எப்போ அத்தையைப்போல தாலியறுப்பே?'ன்னு அபசகுனமா வாயைத் துறந்தகதை...னா மனசுக்குள்ளே ஞாபகத்துலே உரசுச்சு.

ராமச்சந்திரன் பார்வையிலே வெறுப்பு, இகழ்ச்சி. வெடுக்குன்னு வெட்டியெறிஞ்ச மாதிரி கேட்டான்:

"என்ன வாங்குன கடனை குடுக்குறதாக நெனைப் பிருக்கா? இல்லே. அமுக்கிக்கிட்டு நாமம் போடத் திட்டமா?"

வசமிழக்காமல் சின்னச்சாமி உள்ளுக்குள் ஒடுங்கினான்.

"என்ன தம்பி, இப்படிப் பேசுறீக? உங்களைப் பத்தி எம்புட்டுப் பெருமையா நெனைச்சுக்கிட்டிருக்கேன், தெரியுமா? உங்க முதலை ஒத்தடியிலே நாளைக் கொணாந்து தாரேன் தம்பி. உங்க முதலுக்கு நா பொறக்கலே."

இவனது குழைவை நடிப்பாகப் புரிந்து கொண்டு எரிச்சலாகப் பார்த்தான் ராமச்சந்திரன். ஏளனமாய்ச் சீறினான்.

"யாரு முதலுக்கு யாரு பொறந்ததுன்னு யாருக்குத் தெரியும்?"

சின்னச்சாமிக்குள் சுரீரென்று சுட்டது. இவனது பிறப்பையே - முகம் தெரியாத அம்மாவின் கற்பையே - சந்தேகிக்கிற நெருப்பு வார்த்தைகள். இவன் உள் மனசைச் சுற்றி வளைத்து சுளீரிடுகிற அக்கினிச் சாட்டையடிகள்.

"வார்த்தையே அளந்து பேசுப்பா. சிந்னா அள்ள முடியாது. சின்ன வயசுக்காரங்கிட்டே கடன்பட்டேன் பாரு. எம்புத்தியைச் செருப்பால அடிக்கணும்."

"பெரிய சத்தியவான் போலப்பேசிக் கடனை வாங்கிட்டு ஏமாத்துனதுமில்லாம... என்னையா சின்னப் பையன்னு சொல்லணும்? சுத்த அயோக்கியத்தனம்! த்தூ!"

தரையில் காறித் துப்பினான் ராமச்சந்திரன்.

இது அத்துமீறல், அக்ரமமான எல்லை மீறல். மனுசனை மனுசனாக இருக்க விடாத - மிருகமா மாத்துகிற - விபரீதமான அத்துமீறல் - குரூரமான உசுப்பல்.

சின்னச்சாமியும் வெகுண்டு விட்டான்.

"மரியாதையாய் வீடு போய்ச் சேரு. வார்த்தையாலே சீரழிஞ்சு போகாதே. நாளை ஒந்துட்டு வீடு வந்து சேரும்."

"மரியாதையாப் போகலேன்னா... அடிச்சிருவீயோ? எங்கே அதையும்தான் பாத்துருவோம்... ஒங்கிட்டேயெல்லாம் வாய்ச் சுருட்டிக்கிட்டுப் போனா என்னாலே ஏவாரம் பண்ண முடியுமா? இப்பவே ரூவா வேணும், ஒத்தடியிலே ரூவாயை வைச்சுட்டு நகரு."

"நாளை ரூவா வரும்."

"இப்ப வேணும். வாங்காம இந்த எடத்தை விட்டு நா நகரப் போறதுல்லே."

"இப்ப கொடுக்கலேன்னா..."

"சீரு கெட்டுப் போகும். நாறிப் போகும். ஊரு சிரிக்க வைச்சிருவேன்."

வார்த்தைகளின் உரசல்களில் அனலாய்ப் பறந்த தீப் பொறிகள் வாய்ச் சண்டைச் சத்தம் கேட்டுக் கூடிய ஜனங்கள் செய்வதறியாமல் திகைத்தனர். கசாகசாவென்று முணு முணுத்தனர். ஓரிரண்டு பெரியவர்கள் துணிஞ்சி, தலையிட்டு, குறுக்கே விழுந்து, மல்லுக்கு நின்ற இருவரையும் விலக்கி விட்டு, சமனப்படுத்தி... சத்தம் போட்டுச் சத்தத்தைக் குறைத்தனர்.

ராமச்சந்திரன் சண்டைச் சேவலாய் தலையைச் சிலுப்பி விட்டுப் போய்விட்டான். சுத்தியிருந்தவர்கள் எதை எதையோ பேசிக்கிட்டு, இளக்காரமா சிரிச்சிட்டு நழுவிக் கலைந்தனர்.

"ரெண்டு பேர் மேலேயும் தப்பு இல்லே.. ஆனா சண்டை நடக்குது. நல்ல கூத்தாயிருக்கு நம்ம பொழைப்பு. நாய்ப் பொழைப்பு" என்று சலிப்போடு முணுமுணுத்துவிட்டு, பெரியவர்களும் தாமதமா கலைந்தனர்.

மீண்டும் தனிமையாய் - ஒத்தையாளா சின்னச்சாமி, உடைஞ்சு சிதைஞ்சுபோன சின்னச்சாமி. மூளிப்பட்டு இழிவாகிப் போன அரிச்சந்திரன்.

நாணயத்தைக் காப்பாத்துற யோக்கியனாக நடந்துக் கிடறதுக்கா எடுத்துக்கிட்ட முயற்சிகள்... நிமிடந் தோறும் துடிச்ச துடிப்புகள்... இழக்கக் கூடாததையெல்லாம் இழக்கத் துணிஞ்ச தீவிரம்... ராமச்சந்திரன் வம்சமே தழைக்க வாழ்த்துன மனசு...

எல்லா உண்மைகளும் பொய்யாகிப் போச்சே. வீணாகிப் போச்சே... ஊர் சிரிக்கிற மையப் பொருளா நிக்க வேண்டியதாகிடுச்சே...

ஏமாத்துற அயோக்கியன்னு ஊரு நெனைக்க ஆரம்பிச்சிருச்சே...

கட்டுப்படுத்தலையும் மீறி விம்முகிற மனசு. விடைத்து நடுங்குகிற உதடுகள். உறுத்தலெடுக்கிற கண்கள். அழக் கூடாத முழுத்த ஆம்பளை வாய்விட்டு ஊழையமுகையாய் அழுவதைப் பார்ப்பதற்கு -

அங்கே யாருமில்லை.

வாழ்க்கை மட்டுமே மிச்சமாக இருந்துச்சு.

10

விசாரணை

ரெக்கைகளை அடித்துக் கூவிய சேவலின் சத்தத்தில் முழிப்பு தட்டிவிட்டது. முற்றத்தில் லட்சுமி சாணிப்பால் தெளிக்கிற சளப், சளப்!

கனியப்பனுக்கு எந்திரிக்க மனசில்லை. மனசுக்குள் ஓடுகிற எண்ணத்தின் கையைப் பிடித்துக்கொண்டு அதன் போக்கிலேயே மிதக்க வேண்டுமென்ற ஆசை. மனசுக் குள்ளேயே கதை தேடி அலைகிற எண்ணம்.

உள்ளுக்குள் நிறைய கதைப் பிண்டங்கள். இன்னும் வடிவம் கொள்ளாத அரைகுறையான பிண்டங்கள். ஏதாச்சும் ஒரு பிண்டத்தை எடுத்து, முழுசாக வார்த்து, வர்ணம் தீட்டி இன்னிக்கே தபால்ல அனுப்பியாகணும். பொங்கல் மலருக்குக் கதை தர்றதாக ஒப்புக் கொண்டாச்சு. தேதி நெருங்கி வந்து நின்னு மிரட்டுது.

எந்தப் பிண்டத்தை எடுக்கலாம்! உள் உலகத்திற்குள் நிறைய கதைகள். அரையும் குறையுமாய் - சிதிலமாய் கதைகள். மூடிய கண்ணுக்குள் ஏதேதோ காட்சிகள்.

தகரக் கதவு தடதடக்கிற சத்தம். உள் உலகத்திலிருந்து கனியப்பனை வெளியே இழுத்துப் போட்ட சத்தம்.

"யாரது?" முகச் சுளிப்போடு கண்ணைத் திறந்தான்.

அழுக்கான இருட்டில் ராமசாமி தெரிந்தான். அவனைக் கண்டவுடன் புரிந்துகொண்ட மனசுக்குள் சண்டாளமாய் எரிச்சல். இவன் நிஜ உலகத்தின் நிதர்சனம்.

"என்னப்பா?"

"இன்னிக்குக் காலைக் கரண்டு, எனக்கு நேத்தே பாய்ஞ்சு போச்சு. நீங்க இப்ப தண்ணி பாச்சப் போறீகளா? இல்லே, உங்க தம்பி கிட்டே சாவியைக் குடுத்து தண்ணிப் பாய்ச்சச் சொல்லவா?"

மனசுக்குள் அழுத்துகிற ஒரு பாரம்.

நாலைந்து நாட்களுக்கு முன்பே பாய்ந்திருக்க வேண்டும். வாடித் துவண்டு கிடக்கிற பருத்திச் செடிகள். உச்சிப் பொழுதில் பார்த்தால்... குலை பதறுகிறது. இலைகள் எல்லாம் முகம் செத்துச் சாம்பலாய்த் தொங்குகிற கோரம், சாகக் கிடக்கிற குழந்தைகளைப் போல மனசைத் துடிக்கச் செய்கிற சோகம்.

"என்ன சொல்றீக?" நெருக்குகிற நிஜ உலகம்.

"ஐயய்யோ, நா பாய்ச்சணுமய்யா. வாடிப் பொசுங்குது..."

"காலைக் கரண்டு, சீக்கிரம் போங்க. இந்தாங்க கரண்டு ரூம் சாவி."

வழக்கமாய் உட்கார்ந்து கதை எழுதுகிற சாய்வு பெஞ்ச்சையும், பேடையும் பார்த்தான். அவை இவனைப்

பரிதாபமாய்ப் பார்ப்பது போலிருக்கிறது. நெருங்க மாட்டாயா, தொட மாட்டாயா என்று கெஞ்சுவதுபோல் இருக்கிறது.

வெள்ளாமையைப் பொசுங்கவிட்டுட்டு, உட்கார்ந்து கதை எழுதவா முடியும்? கூலியாளைவிட்டுத் தண்ணி பாய்ச்சுறாப்புலே பொழப்பு ஞாயமும் இல்லியே...

அவனுக்குள் சண்டாளமாய்ப் பொங்கிப் பொருமிய கோபம். யார் மீது மோதுவது என்று தெரியாமல் சீறுகிற குருட்டுக் கோபம். ‘ச்சீய், நாய்ப்பய பொழப்பு!’

எதையோ எதற்கோ திட்டிவிட்டு மம்மட்டியை எடுத்தான்.

“ஆசையிருக்கு பேனா எடுக்க... யோகமிருக்கு மம்பட்டி பிடிக்க!”

நீச்சுத் தண்ணியைக் குடித்துவிட்டு வெளியே வந்தால், முகம் தெரிகிற வெளிச்சம் மட்டு மரியாதையற்ற மேல் காற்று. வைகறைப் பொழுதிலும் வெக்கையாக வீசுகிற காற்று. கோடையிலும் கோடையான வறண்ட கோடை. நிஜ உலகத்தின் அக்கினிக் கோடை.

கனியப்பன் அவசரமாய்ப் புஞ்சைக்குள் நுழைந்தான். தெரு வாய்க்காலை மண் வெட்டியால் செதுக்கி ஒழுங்கு படுத்தினான். வாய்மடைகளை விலகி வைத்தான், தொட்டி யில் கிடந்த தண்ணீரை அள்ளி அள்ளிக் குழாய்க்குள் ஊற்றினான். எல்லாம் துரிதகதி.

பரபரப்பாய் ஓடி பம்ப்ஷெட்டைத் திறந்தான். குப்பென்று மூஞ்சியில் மோதுகிற புழுக்க நெடி. நாசி

கமறலெடுக்கிறது. உள்ளுக்கள் இறங்கி, 'அடிபெட்டுக்குள்' வந்து, 'ஏர்வாசை' பிடுங்கிவிட்டான்.

தவ்வி, மேலேறி, பச்சை பட்டனை அழுத்தினான். சவமாய் படுத்துக் கிடந்த மோட்டார் வேதாளப் பேரிரைச்சலாய் உயிர் பெற்றது. அள்ளி இறைத்த நீர் வெள்ளிக் கற்றையாய்ப் பாய்கிறது. தொட்டியில் நுரை பொங்கிப் பெருகி வாய்க்காலில் ஓடத் துவங்கியது பாம்புகள் போட்டி போட்டுக் கொண்டு ஊர்ந்து ஓடுவது போலிருந்தது.

வேலைப் பரபரப்பில் தெரியாமலிருந்த களைப்பு, இப்போது முழுசாக உணர வைக்கிறது.

டிராயர் பாக்கட்டில் நெளிந்து கிடந்த சிகரெட்டை எடுத்தான். ஆசையோடு பற்ற வைத்துக்கொண்டான்.

தோட்டத்திற்குள் தலைவைத்த தண்ணீர் கழுத்தடி பாத்திக்குள் முதலில் பாய்த்து பரவியது. இலைச் சருகுகளை இழுத்துச் செல்கிற சரசர சத்தம்; வெடிப்புகளுக்குள் பாய்ந்து டிப் டிப் டிப்பென்று நுரை விடுகிற சத்தம்.

கயிலியை அவிழ்த்துச் சுருட்டினான். டிராயர் பணியனுடன் வாய்க்காலுக்குள் ஓடினான். வாய்மடையை கொத்தி விலக, அடுத்த பாத்திக்குள் தலை நுழைக்கிற பாம்புத் தண்ணீர்.

மஞ்சணத்தி மரத்தில் வந்து நின்று கரைகிற பனங்காடை, குஞ்சைப் பறி கொடுத்த தாயின் பரிதவிப்பாக அதன் கதறல். இவன் மனசைக் கலங்க அடிக்கிற கதறல். வேலிப் புதருக்குள் செம்போத்துப் பறவையின் இனிய கூவல். கூக்கு, குக்கூ... கூக்கு, குக்கு... குயிலை ஞாபக படுத்துகிற இனிய குரல். காதலியைத் தேடி ஏங்கிக் கூவுகிற தாபக் கூவல்.

கதை எழுதிக் கொண்டிருக்க வேண்டியவன், இங்கே சகதியை வகிர்ந்து கொண்டிருக்கிறான். தூரத்து மலையையும் சூரியனையும் பறவைகளையும் அதன் உள் உலகங்களையும் ரசித்துக் கொண்டிருக்கிறான். நல்ல கூத்துதான்.

டீக்கடையில் டேப்-ரிகார்டு பாடுகிற சத்தம், டீ குடித்தால் நன்றாக இருக்கும் என்று ஆசைப்படுகிற மனசு, ஊரைப் பார்த்தான். காலை வெயிலின் தங்கப் பிரகாசத்தில் துல்லிய அழகுடன் தெரிகிற கிராமம். காரை வீடுகள், ஓட்டு வீடுகள், ஏராளமாய்க் கூரை வீடுகள்.

ஊரிலிருந்து வருகிற ஒற்றையடிப் பாதை ஏமாற்றத்தைத் தருகிறது. லட்சுமி வரவில்லை. வந்தால்... டீ வரும். கொஞ்சம் தெம்புவரும்.

நிறை நிறையாய்ப் பாய்ந்து அடுத்த, வாய்க்காலுக்கு வாய் மடையைக் கொத்தினான். சொத சொதப்பான ஈரமண். பதிந்த மம்பட்டியை இழுக்க முடியவில்லை. ஈரத்தில் கனமேறிப்போன மண், இவன் பலத்தைச் சோதிக்கிறது. மூச்சுப்பிடித்துக் கொத்தி இழுத்தான். புஜமெல்லாம் வலி. நெஞ்சுக்கூடு உலர்ந்துபோய் காந்துகிறது. தொண்டையில் கமறலான எரிச்சல்.

சிரமப்பட்டு வாய் மடை கொத்தி வைப்பதற்குள், ஏற்கெனவே பாய்ந்த பாத்தியில் உடைப்பு. ஓடுகிறான் அடைக்க. சேற்றுத் தண்ணீர் சளப்பென்று முகத்தில் மோதுகிறது. கடைக் கண்ணில் காந்தல். அதைக் கழுவிக் கொண்டு வியர்வை.

அலுத்துப்போச்சு. ச்சீய் யென்றாகிவிட்டது. உசுரை வதைக்கிற ரணகளமாய்ப் புஞ்சை. பருத்திச் செடிகளைக் கண்டாலே எரிச்சலாக வருகிறது.

பேனா பிடிச்சு எழுத்துக்களை ஆட்டுவிக்க வேண்டியவன், மம்பட்டியைப் பிடிச்சு ஓடுற தண்ணியோட போட்டி போட முடியுமா? கனியப்பனுக்கு உள்ளங்கையெல்லாம் தீப்பிடித்த மாதிரி காந்துகிறது. குனிந்து குனிந்து நிமிர்வதில் இடுப்பெல்லாம் கடுக்கிறது. தொடைச் சதையெல்லாம் முறுக்கிப் பிழிகிற வேதனை.

எரிச்சலில் கண்மூடித்தனமாய் மனசு அலறுகிறது. மோட்டாரை ஆஃப் செய்துவிட்டு ஓடி விடலாமா என்று கசந்து போய் நினைத்தபோது -

ஒற்றையடிப் பாதையில் உயிர் வந்தது. கையில் காபித் தூக்குச் சட்டியுடன் லட்சுமி வந்தாள். பாலூற்றிய நல்ல காபி. வெல்லமும் தேயிலையும் போட்டு கொதிக்க வைத்த காபி, மனசுக்குள் ஆறுதலாய் ஒரு தென்றல்.

"என்ன இம்புட்டு நேரம்?"

"வீட்லே வேலையை முடிச்சுட்டுத்தானே வரணும்! என்ன இது, இப்படி வேர்த்துக்கிடக்கு? 'கேஸு, பூஸு'ன்னு இளைக்குது?"

"அதை ஏன் கேக்கே? மனுசனுக்கு உயிர் போகுது."

"காட்டு வேலைகள்லேயே லேசான வேலை தண்ணி பாய்ச்சுறதுதான். இதுக்கே இப்படி ஒடித்தவிச்சா... மத்த வேலைகளையெல்லாம் எப்படி செய்வீக?"

"கதை எழுதுறவனை தண்ணி பாய்ச்சச் சொன்னா முடியவா செய்யுது?"

"கதை எழுதுனா ஆயிரம் ரெண்டாயிரமா வருது? வருசத்துக்கொருதடவை எப்பவாச்சும் ஒரு எழுபத்தைஞ்சு ரூவா. அதை வைச்சு புள்ளை குட்டிகளை காப்பாத்த முடியுமா? காடுகரையைக் கவனிச்சாத்தான் நடக்கும்."

"சக மனுசங்களுக்கு நல்லது சொல்றதுக்கெல்லாம் கூலி எதிர்பார்க்கக் கூடாதும்மா..."

"கதை எழுதறேன்னு சொல்லிகிட்டு ரவ்வும் பகலுமா உறக்கமில்லாம உக்காந்து, சீரட்டை ஊதி ஊதி ஒடம்பைக் கெடுத்துக்கிடுதீக. அப்புடி ஒழைக்கிற ஒழைப்புக்கு ஒரு வருமானம் வரவேண்டாமா? ஒரு கூலி வர வேண்டாமா? வரலேன்னா, எதுக்காக ஒழைக்கணும்? எதுக்காக எழுதணும்? நாலு பேரைப் போல காடு கரையிலே பாடுபட்டுட்டு இருக்க வேண்டியதுதானே?"

"ஐயோ... ஒனக்கு இதை எப்புடிப் புரிய வைக்கப் போறேன்?"

"எனக்குப் புரியவும் வேண்டாம். நீங்களும் உருப்படமாட்டீக. சரி சரி... காபியைக் குடிங்க..."

அவள் இரண்டுபாத்திகளுக்கு கொத்தி விட்டாள். காபியைக் குடித்தபின், கனியப்பன் சிகரெட்டை பற்ற வைத்துப் புகையை ஊதினான். நெஞ்சுக்குள் மயிலிறகால் உரசுகிற சுகம். உடம்புக்குள் கொஞ்சம் தெம்பு வந்திருந்தது.

லட்சுமி போய்விட்டாள். மறுபடியும் தனியனானான். அவன் அவனுக்குள் உலவினான்.

காலுக்கடியில் ஓடுகிற வாய்க்கால் தண்ணீரின் பாஷைக்கு அர்த்தம் கற்பித்துப் பார்த்தான். பாத்தி நீரில் கோர ஜ்வலிப்பாக பிரதிபலிக்கிற சூரிய கிரணத்தை வார்த்தைப்படுத்திப் பார்த்தான்.

நீருக்கடியில் ஓடுகிற மண் துகள்களையும், கரைகிற மண்கட்டிகளையும், அசையாமல் நிற்கிற கற்களையும் பார்த்து... இவற்றையெல்லாம் எதற்கு உவமைப் படுத்தலாம் என்று மண்டைக்குள் குடைந்து கொண்டிருந்தான்.

பொங்கல் மலருக்குக் கதை தருவதாக ஒப்புக் கொண்டு கடிதம் எழுதி ஒரு மாதம் ஓடிவிட்டது. ஒன்று மாற்றி ஒன்றாக ஒவ்வொரு நாளும் இடைஞ்சல். உர உப்பு வாங்க பணம் வாங்கணும். சிம்புஷ் மருந்தடிக்க ஆள் பார்க்கணும். களைவெட்ட ஆள் கூப்பிடணும். கடன் கேட்டு எவனெவன் முகங்களையோ பார்த்து அலையணும். குழந்தைக்குக் காய்ச்சல் தலை வலின்னா ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகணும். வந்திருக்கிற பாராட்டு விமர்சனக் கடிதங்களுக்குப் பதில் போடணும்.

இப்படி நித்தம் ஒரு நச்சுப் பிடுங்கல். ஒரு இச்சிலாத்தி. நாளைதான் கடைசித் தேதி. இன்றைக்கு எழுதி முடித்துவிட நினைத்தால்... வந்து சேர்ந்தது, தண்ணீர் பாய்ச்சுகிற உத்யோகம். கொடுமை! நிஜ உலகத்தின் நிர்த்தாட்சண்ய மான கொடுமைகள்... சராசரி சம்சாரிக்குரிய சகல சங்கடங்களும், பிக்கல் பிடுங்கல் கடமைகளும் இவனையும் போட்டு அமுக்கிக் கொள்கிறது. ஏறிக் கொண்டு 'தங்கு, தங்கு' என்று குதியாட்டம் போடுகிறது.

இதையெல்லாம் பொருட்படுத்தாமல் புறம் தள்ளி 'எழுத்தே லட்சியம்' என்று இருக்க முடிகிறதா என்ன?

லட்சுமி சொல்றதும் ஞாயம்தானே! கதை எழுதறதை விட, தண்ணி பாய்ச்சுறது எம்புட்டோ மேல். பொங்கல் மலர் வந்தா வந்துட்டுப் போகட்டும். அதுக்காகப் பதறிப் பதைச்சு எழுதி ஆகப் போறது என்ன? கிடைக்கப் போறது என்ன? ஒன்றுமில்லே.

புகழையும் பெருமையையும் வைச்சுக்கிட்டு மாரடிக்கவா? அரைப்படி அரிசிக்குக்கூட ஆகாது. உப்புக் கல்லுக்குப் பெறாத ஒரு விஷயத்துக்காக... எதுக்காக பதறிப் பதைச்சு, வீணா மனசை அலட்டிக்கணும்?

திடுக்கிட்டுக் காலடியைப் பார்த்தான் கனியப்பன். வாய்க்காலில் தண்ணீரைக் காணோம். என்ன ஆயிற்று? விருட்டென்று கிணற்றுப் பக்கம் பார்த்தான்.

மோட்டார் ஓடுகிற இரைச்சல். வெள்ளிக் கற்றையாய்த் தொட்டியில் பாய்கிற நீர். அப்போ... தண்ணீர் எங்க போகிறது?

அலையக் குலையப் பெரு வாய்க்காலுக்குள் ஓடினான். உடைப்பு. பெரிய உடைப்பு. அசந்த ஆட்டுக் காரனை ஏமாற்றிவிட்டுப் பயிரில் மேய்கிற கள்ள ஆடுகளைப் போல தண்ணீர் ஆத்திர அவசரமாய் ஓடிக்கொண்டிருந்தது.

திரும்பவும் பாத்திக்கு ஓடி, மம்பட்டியை எடுத்து வந்து, பக்கத்து மண்ணை வெட்டி வெட்டி அள்ளி, கரடுகளை எடுத்துப்போட்டு அடைத்து முடிப்பதற்குள் 'ஆத்தாடி அம்மாடி' என்றாகி விட்டது. கையெல்லாம் உளைச்சல், ஒய்ந்து போன மாதிரி அயற்சி. தொடை யெல்லாம் பிசைகிற வலி.

மறுபடியும் பாத்திக்கு ஓட்டம். சகதிக்குள் சளபுளத்து ஓடி, வழுக்கி, சாயாமல் பாலன்ஸ் பண்ணி, அங்கும் ஈர மண்ணைக் கொத்தி வாய்மடையை விலக்கி...

ச்சே! வாழ்க்கையே வெறுத்துப் போன மாதிரி இருந்தது. இயலாமையின் எரிச்சலில் யார் யாரையோ திட்டினான்.

நடுமுருசலுக்கு வந்தாயிற்று. அப்பாடி... கொஞ்சம் நிம்மதி. இந்த முருசலில் சிரமமில்லாமல் நீர்ப் பாய்ச்சலாம். வாய் மடையைக் கொத்தி விட்டுவிட்டு கொஞ்ச நேரம் இடுப்பு ஆற்றலாம். தேங்காது. உடைக்காது. ஒழுங்காகப் பாயும். தார் ரோட்டில் மாட்டு வண்டி பற்றுவது மாதிரி... சுலபமாக இருக்கும்.

கதை எழுத வேண்டியதில்லை என்று முடிவு செய்து கொண்டதால்... மனசுக்குள் ஒரு விடுதலை பெற்ற சிலாக்கியம். மூச்சுத் திணறல் குறைந்திருந்தது. பிக்கல் பிடுங்கல் இல்லை. தவிப்பு - குமைச்சல் தணிந்திருந்தது.

தீக் கோலமாய் எழுந்த சூரியன், உலகைக் கண்டு பயந்து முகம் வெளுத்து மேலேறுகிறது. பால் வேனும், காலைப் பஸ்ஸும் வந்துவிட்டுப் போய்விட்டன. மணி எட்டுக்கு மேலிருக்கும்.

வடக்கே ஆறு. ஆற்றங்கரையில் பனந்தோப்பு. தோப்புக்குக் கிழக்கே மயானக்கரை.

தற்செயலாக மயானக்கரையைப் பார்த்தான். பார்வையைப் பிடுங்க முடியவில்லை. அங்கே...

மஞ்சனத்தி மரத்தை அடையாளமாகக் கொண்டிருந்த சமாதியின் முன்னால் ஒரு சிறுவன். நீல நிற டவுஷர். மேலே வெற்று உடம்பு. செம்பட்டை ரோமம். சமாதி முன்னால் நின்று நெஞ்சில் அடித்துக் கொள்கிறான். கண்களைத் துடைத்துக் கொள்கிறான்.

ஏதோ சொல்லிப் புலம்புகிறான். அழுகிறான். யாரிது? யார் இந்தப் பையன்? கனியப்பன் மனசுக்குள் கூடு கட்டுகிற சோகம்.

சூரியப் பிரகாசம் கண்களை அம்பாகக் குத்துகிறது. பார்க்கவிடவில்லை. இடது கையைக் கண்ணுக்குக் குடையாக்கி, பார்வையைத் தீட்சண்யப்படுத்திக் கொண்டு -

அட, நம்ம மணிமுத்து!

போன வருஷம்தான், முல்லைக் கொத்துப் போல மூன்று பிள்ளைகளை விட்டுவிட்டு ராசாத்தி போய்ச் சேர்ந்தாள். மூன்றில் கடைக்குட்டி மணிமுத்து.

இன்பத்தின் துன்பத்தின் வாழ்க்கையின் பங்காளியாக இருந்த ராசாத்தியைப் பறி கொடுத்துவிட்டுத் தவித்து நின்ற முருகையா சொந்த இழப்புச் சோகத்தை விழுங்கிக் கொண்டார். தாயற்ற பிஞ்சுகளின் ஏங்கிய கண்களைப் பார்த்துப் பார்த்து மனம் கலங்கினார். நெருப்புக்குள் இருந்த மெழுகாக உருகிக் கரைந்தார். உள்ளுக்குள் உடைந்து நொறுங்கிக் கலகலத்துப் போனார்.

ஏழ்மையோடு இந்தக் கொடுமையும் சேர்ந்து அவரது கழுத்தைப் பிடித்து நெரித்தது. அவரது ஒரே குறி, பிள்ளைகளின் பூ மனசு வாடிவிடக் கூடாது, ஏங்கிச்

சாம்பிவிடக் கூடாது, தாயில்லாக் குறை அதுகளுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதுதான்.

ராசாத்தி இருந்து காட்ட வேண்டிய பரிவு, பாசம், அன்பு முழுவதையும் சேர்த்துப் பிள்ளைகளின் மீது கொட்டினார். வாழ்வின் வெக்கை பிள்ளைகள் மீது பட்டுவிடாமல், தன் அன்பு ரெக்கைக்குள் அந்தக் குஞ்சுகளை அரவணைத்துப் பொத்திக் கொண்டார்.

பிள்ளைகள் கண்கலங்கச் சம்மதிக்கவே மாட்டார். அப்பேர்ப்பட்டவரின் அருமை பையன், தாயின் சமாதியில் வந்து அழுது புலம்புவது என்றால்...

அந்தப் பூ மனசில் எவ்வளவு கொடிய நிராதரவு உணர்ச்சி!

கனியப்பன் பார்வை, அந்தச் சிறுவன் மீதே நங்கூரமிட்டிருந்தது. இடையில் சில பத்து மீட்டர் தூரம். மனசளவில் இடைவெளியில்லை. மனசுக்குள் மணிமுத்து இருந்தான். சிறுவனின் கண்ணீர் உள்ளே இறங்கிச் சுட்டது. மனசை அறுத்தது.

இதயமில்லாத உலகில் இந்தச் சிறுவனுக்குத் தாயின் சமாதியே இதயமாகியிருக்கிறது.

இப்படி நிராதரவுணர்ச்சிக்காளாகி மயானக் கரையில் வந்து புலம்பி அழுகிற அளவுக்கு இந்தப் பூவை எந்தப் பாவி கிள்ளியது? வேறு யார் கிள்ளி யிருந்தாலும், மணிமுத்து தகப்பனிடம் முறையிட்டிருப்பான். முருகையாவும் சண்டாளமாகிச் சண்டைக்குக் கிளம்பி இருப்பார்.

முருகையாவே கிள்ளியிருப்பாரோ...! அதனால்தான் இந்தப் பூ அம்மாவை நினைத்துப் புலம்பியழுக இங்கு வந்திருக்கிறதோ...?

பிள்ளைகள் கண்கலங்கக் கூடச் சம்மதிக்காத முருகையாவா கை நீட்டி அடித்திருப்பார்? அவரால் அடிக்க முடியுமா? அடிக்க மனம் வருமா? அவர் அவராக இல்லாத நிலையில்... முறுக்கேறிய மனநிலையில் அடித்திருப்பாரோ?... வேறு யாரையோ அடிக்க வேண்டிய அடியை அடிக்க முடியாமல்... இவனிடம் வந்து ஆத்திரத்தைக் காட்டியிருப்பாரோ?...

கடையிலோ... தெருவிலோ... தோட்டத்திற்குப் போகும் வழியிலோ... எவனோ ஒருவன் மூலமாகச் சமுதாயம் இவரது மடியைப் பிடித்து இழுத்துச் செவிட்டில் அறைந்து அவமதித்து மகிழ்ந்திருக்கும்... அவரது ஆன்மாவைக் கடித்துக் குதறியிருக்குமோ...?

கொதிப்பேறிப்போன குழம்பிப்போன மனநிலையோடு வீட்டுக்கு வந்திருப்பார். வழக்கம் போலவே மணிமுத்து கெஞ்சியிருக்கலாம். அண்ணனைப் பற்றி அபத்தமாய்ப் புகார் செய்திருக்கலாம். அடம்பிடித்திருக்கலாம்.

சகித்துக் கொள்கிற வழக்கத்திற்கு மாறாக... அவர் அவராக இல்லாமல் இன்று அவனை ஆத்திரத்தில் அடித்திருப்பாரோ?...

வெலவெலத்துப் போய் - வெம்பிப் போய் - அன்பான ஆதரவுக்காக ஏங்கி இந்தச் சிறுவன் இங்கு வந்து நிற்கிறானோ...

அடப் பாதரவே... இந்தச் சின்னமலர் என்ன பாவம் செய்தது? இதற்கு இந்த வயசில், இந்த நிராதரவுணர்ச்சியா? நாதியற்றுப் போன உணர்வா? அடக் கொடுமையே!

சம்பந்தமில்லாத தூரத்தில் - ஒதுக்கத்தில் - இருக்கிற இந்தச் சிறுவனைக்கூட தனது நீசக் கரத்தினால் தீண்டியிருக்கிறதே... கோர நகங்களால் இந்தப் பிஞ்சின் இளநெஞ்சைக் கீறியிருக்கிறதே... இந்தப் பிணம் தின்னும் சாஸ்திர சமுதாயம், எழுத்தாளனுக்கு மட்டும் இரக்கம் காட்டவா செய்யும்? இரக்கம் காட்டுறதுக்கு இதனிடம் ஈரம் ஏது? ரத்தப்பசியைத் தவிர வேறு எந்த நாகரிகமுமில்லாத இதனிடம் அரவணைப்பை எதிர்பார்ப்பதே எவ்வளவு அசட்டுத்தனம்? அப்பாவித்தனம்?

மனுசத்தன்மைக்காக ஏங்குகிற மனிதர்களை மனுசத் தன்மையோடு வாழ விடாத இந்த ராட்சசனோட எனக்கு எதுக்கு விசனம்? விசனப்பட்டு எதுக்காக ஒதுங்கணும்? எதுக்காக எழுதாம ஒடுங்கிக்கணும்?

ஓங்கியடிச்சு நொறுக்கித் தீரவேண்டிய பகைவனோட என்ன ஊடல் வேண்டிக்கிடக்கு?

தோட்டம் தண்ணீர் பாய்ந்து முடிந்து... குளித்து விட்டு வீடு திரும்புகிறவரை, மனசுக்குள் மணிமுத்து. துவண்டு கிடந்த உணர்வுகளைத் துடிக்க வைக்கிற மணிமுத்து. ஒய்வறியா போராவேசத் தீயை ஊதி ஊதிப் பெருக்குகிற மணிமுத்துக்கள்...

இரவு பத்து மணிக்கு மேல் -

ஓர் உறக்கம் உறங்கிவிட்டு விழித்த லட்சுமி, எரிச்சலுடன் முகத்தைச் சுளித்தாள். கண்களைச் கரித்தாள். கனியப்பன் பிரம்மக்கலை நிகழ்த்திக் கொண்டிருந்தான்.

“லைட்டைப் போட்டுக்கிட்டு இதென்ன சாமக்கூத்து? இப்படி ஒடம்பைக் கெடுத்துக்கிட்டு எழுதுறதாலே... என்ன லாபம்?”

“லாப நஷ்டக் கணக்குப் பாக்குற யாவாரமில்லே லட்சுமி, எழுத்துங்கிறது ஞாயத்துக்கான கலகம்.”

“இப்படி எழுதி எழுதி என்னத்தைக் கிழிச்சீக?”

“கிழிக்கலே. கிழிஞ்சு கிடக்கிறதையெல்லாம் சுட்டுப் பொசுக்கிட்டுப் புதுசாத் தைக்கணும். தைச்சுக் கிட்டிருக்கேன்...”

அவளுக்குப் புரியவில்லை. இச்சிலாத்தியோடு முணுமுணுத்துவிட்டு உறக்கத்தில் உறைந்தாள். கனியப்பன், மணிமுத்துகளின் கண்ணீரை விசாரணை செய்து கொண்டிருந்தான்.

ஆசிரியரின் பிற நூல்கள்

சிறுகதைத் தொகுப்புகள்

மானுடம் வெல்லும்

சிபிகள்

பூக்காத மாலை
(அனந்தாச்சாரியார் அறக்கட்டளை விருது)

பூச்சுமை
(லில்லி தேவசிகாமணி இலக்கிய விருது)

கணக்கு

தாய்மதி

உயிர் காற்று...
(பாரத ஸ்டேட் வங்கி இலக்கிய விருது)

விரல்

காகிதம்

என் கனா

ராசாத்தி

மனப் பூ
(தமிழக அரசின் மாநில விருது)

ஒரு மாலை பூத்து வரும்
(தமிழக அரசின் மாநில விருது)

மானாவாரிப் பூ
(அமரர் சி.பா. ஆதித்தனார் இலக்கிய விருது)

வெண்பூ மனம்

குறுநாவல் தொகுப்புகள்

கோடுகள்

தழும்பு

ஈஸ்வர...

பாசத் தீ

நாவல்கள்

முற்றுகை

இனி

அச்சமே நரகம்

ஊர்மன்

ஆகாயச் சிறகுகள்

முழுநிலா

கட்டுரை

சிறுகதைப் படைப்பின் உள் விவகாரம்

கங்கை

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794